**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12,618 பஞ்சாயத்துகள் இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு முதல்வருக்கு நன்றி. அந்தப் பஞ்சாயத்துகளில் ஏறக்குறைய ஒரு பஞ்சாயத்துக்கு ஒன்று, இரண்டு வீதமாகக் கணக்கிட்டால்கூட பல்லாயிரக்கணக்கான hand



2011 ஆகஸ்ட் 9]

bore-wells failure ஆகியிருக்கின்றன. எனது அரூர் தொகுதியிலே மொரப்பூர் பகுதியிலே நான் இதுவரை கணக்கு எடுத்ததில், 42 அடி பைப்புகள் தண்ணீர் வற்றியுள்ளன அல்லது பூமிக்கு 400 அடிக்குக் கீழாக நீர்வள ஆதாரம் குறைந்திருப்பதால் அப்பேற்பட்ட குறைபாடு காணப்படுகிறது. சென்ற ஆண்டு ஊத்தங்கரையிலே எனது தொகுதி மேம்பாட்டு நிதியிலே 12 ஆழ்துளைக் கிணறுகள் போட்டு பன்னிரண்டும் failure ஆகிவிட்டன. ஆக, இப்படி இருக்கக்கூடிய hand bore-wells ஆழப்படுத்தும் பணியைத் துரிதப்படுத்துவதற்கு மாநிலம் முழுவதும் நிதியாதாரத்தை ஒதுக்குவதற்கு அரசின் செயற்குறிப்பு உள்ளதா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நேற்று மாண்புமிகு உறுப்பினர் திரு. நஞ்சப்பன் அவர்கள் கேள்வி எழுப்பியபொழுது, தமிழகத்தில் இருக்கின்ற எல்லா குக்கிராமங்களிலும் எல்லோருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் நிச்சயமாக வழங்கப்படும் என்பதைத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்று, இப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள், பழுதுபட்ட hand pumps, bore-wells பழுதுபார்க்கப்படுமா என்று கேள்வி எழுப்பியிருக்கிறீர்கள். கடந்த 5 ஆண்டுக்கால ஆட்சியில் முந்தைய அரசு இதுபோன்ற அடிப்படை வசதிகள், எதையும் செய்யாமல் விட்டுவிட்டுச் சென்ற அத்தனைப் பணிகளையும், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கையிலே எடுத்துக்கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) போர்க்கால நடவடிக்கையாக செய்து முடிப்பார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வைகைச்செல்வன்.

**டாக்டர் வைகைச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் வாயிலாக அமைச்சரிடமிருந்து பதிலை எதிர்பார்க்கிறோம். தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டம் புரட்சித்

[2011 ஆகஸ்ட் 9

தலைவி அம்மா அவர்களால் கொண்டுவரப்பட்ட திட்டம். அத்திட்டத்தின் வாயிலாக தூத்துக்குடியிலிருந்து விருதுநகர் மாவட்டம் முழுவதும் பயன்படுகிறது. குறிப்பாக, அருப்புக்கோட்டை தொகுதியில், எங்களுக்குக் கிடைக்க வேண்டிய தண்ணீரினுடைய கொள்ளளவு சதவிகிதம் 47.5. ஆனால், கொடுக்கப்படுகிற தண்ணீரினுடைய கொள்ளளவு 29.7 சதவிகிதம். ஆக, கொடுக்கப்படுகிற அளவு குறைந்தும், தினமும் 1 இலட்சம் லிட்டர் தண்ணீர்க் கசிவும் ஏற்படுகிறது. இதைத் தடுப்பதற்கும், முழுமையான தண்ணீர் கிடைப்பதற்கும் அமைச்சர் அவர்களுடைய பதிலை எதிர்பார்க்கிறோம், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10–25*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் நான் முன்பு சொன்ன கருத்தையே சொல்ல விழைகிறேன். கடந்த ஆட்சியில், இதுபோன்ற நல்ல நடவடிக்கை எடுக்கப்பட்ட கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்கூட செயல்படாத காரணத்தோடு மட்டுமல்லாமல், அதற்குத் தேவையான மின் மோட்டார்கள் பழுதுபட்ட நிலையில் இருந்தும்கூட, அவற்றை மாற்றாமல் இருந்த காரணத்தினால்தான், ஒரு இலட்சம் லிட்டர் அளவுக்கு கிடைக்கக்கூடிய தண்ணீர், 50,000, 20,000 லிட்டர் என்று குறைந்து இருக்கிறது. எந்தெந்தப் பகுதிகளுக்குத் தேவையான மின் மோட்டார்கள் மாற்றியமைக்க வேண்டுமோ, அதேபோல் எந்தெந்தப் பகுதிகளுக்கு குழாய்கள் பழுதுபட்டிருக்கின்றனவோ அவற்றை மாற்றி, சீர்செய்து, நிச்சயமாக அந்தக் கொள்ளளவுடைய தண்ணீர் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, நேற்றையதினம், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில், கிருஷ்ணகிரி மாவட்டம், தருமபுரி மாவட்டத்திற்கு முழுமையாக தண்ணீர் வழங்கப்படுமா என்று கேட்ட நேரத்தில், நமது சிறப்பு வாய்ந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய



2011 ஆகஸ்ட் 9]

ஆலோசனையின்பேரில், அனைத்து கிராமங்களுக்கும் குடிதண்ணீர் வழங்கப்படும் என்ற நல்ல செய்தியினை நமது மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

கடந்த ஆட்சியில், காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் துவக்கினார்கள். ஆனால், என்ன காரணமோ தெரியவில்லை, அந்தத் திட்டமும் அரைகுறையாகச் செயல்படுத்தப்பட்டிருக்கிறது. சிவகங்கை மாவட்டத்தின் வழியாக, காளையார்கோவில் ஒன்றியம், கல்லல் ஒன்றியம் வழியாகச் செல்கிற அந்தத் திட்டத்தில் ஒரு பகுதி கிராமங்கள் இணைக்கப்பட்டு, பல பகுதி கிராமங்கள் குடிதண்ணீர் இல்லாத நிலையிலும் அந்தத் திட்டத்தில் இணைக்கப்படாததால், அங்கே தொடர்ந்து மக்களுக்குப் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. குடிதண்ணீர் கிடைக்கவில்லை. இப்போது இரண்டாவது கட்டத் திட்டத்தையும் துவக்கி வைத்துவிட்டு, அதை நிறைவேற்றாமல் துவக்க நிலையிலேயே இருந்துகொண்டிருக்கிறது.

எனவே, நமது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் எப்படி மறுசீரமைப்பைச் செய்து அனைத்துப் பகுதி மக்களுக்கும், இரண்டு மாவட்டங்களுக்கும், குடிதண்ணீரைக் கொடுத்தார்களோ, அதைப்போல, காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில், சிவகங்கை மாவட்டத்தில் இருக்கக்கூடிய எல்லாப் பகுதி கிராமங்களையும் இணைத்து, அந்தத் திட்டத்திலே குடிதண்ணீர் வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில், மோசமான நிர்வாகத்தின் காரணமாகத் தமிழ்நாட்டில் எப்படி மின் பற்றாக்குறை ஏற்பட்டதோ, அதைப் போலவே, குடிநீர் வழங்குவதிலும், பல முறைகேடுகளும், தவறுகளும் நடைபெற்று இருக்கின்றன; பல குறைபாடுகள் இருக்கின்றன; அவற்றை அறிவோம். நாங்கள் ஆட்சிக்கு வந்து, இப்போதுதான் இரண்டரை மாத காலம் ஆகிறது. ஒவ்வொரு குறைபாட்டையும் கண்டறிந்து சரிசெய்து வருகிறோம். கழக அரசுக்கு,

[2011 ஆகஸ்ட் 9

எங்களுடைய அரசுக்கு, எப்படி சீரான மின்சாரத்தை வழங்குவது இந்த அரசின் ஒரு priority ஆக இருக்கிறதோ, எப்படி மின்சாரப் பற்றாக்குறையைப் போக்குவதை ஒரு priority ஆக எடுத்துக்கொண்டு செயல்படுத்துகிறோமோ, அதைப்போலவே, தமிழ்நாட்டில் இருக்கின்ற அத்தனைப் பகுதிகளுக்கும், தமிழ்நாட்டில் இருக்கின்ற அத்தனை மக்களுக்கும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படவேண்டுமென்பது இந்த அரசின் ஒரு priority ஆகும். *(மேசையைத் தட்டும் ஒலி)* முக்கிய செயல் திட்டமாகும். ஆகவே, ஒகேனக்கல் திட்டம், காவிரிக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்றல்ல, சிவகங்கை மாவட்டம், சிவகங்கை தொகுதி அல்லது அருப்புக்கோட்டை தொகுதி என்றல்ல, ஒட்டுமொத்த தமிழ்நாட்டில் இருக்கின்ற அத்தனை மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கவேண்டியது இந்த அரசின் கடமை; அதை நிறைவேற்றியே தீருவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்க விரும்பிய கேள்விக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களே தெளிவான பதிலை அளித்து விட்டார்கள். ஏனென்றால், இந்த காவிரிக் கூட்டுக் குடிநீர்த் திட்டம், வறட்சி நிரம்பிய மாவட்டமான இராமநாதபுரத்தில் அமல்படுத்தப்பட்டதாக, சென்ற ஆட்சியிலே பெரிய பெருமையாகப் பேசினார்கள். ஆனால் யதார்த்தமான நிலை என்னவென்றால், மாவட்டத்தில் பல பகுதிகளில், இராமேஸ்வரம் உட்பட, காவிரிக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினால் எந்தவிதமான பலனும் இல்லை. எனவே, வறட்சி நிறைந்த மாவட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து, காவிரிக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் பயன் எல்லாப் பகுதிகளுக்கும் சென்றடைய இந்த அரசு ஆவன செய்யவேண்டுமென்று உங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொன்ன கருத்திற்கேற்ப, அனைத்துப் பகுதிகளுக்கும் நீர் கிடைக்கின்ற வகையில் சரிசெய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2011 ஆகஸ்ட் 9]

*முற்பகல் 10–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பயன்பாட்டில் இருந்த இடங்களில் குடிநீர் வழங்கலுக்கு வேறு ஏற்பாடு செய்யப்பட்டுவிட்டதால் அந்த நீர்த்தேக்கத் தொட்டிகள் இப்போது பயன்பாடற்று, சிதைந்து, பாழ்பட்டு இருக்கின்றன. அவற்றை அப்புறப்படுத்துவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்:

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கெங்கு நீர்த்தேக்கத் தொட்டிகள் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன என்பதைத் தெரிவித்தால் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக தெரியப்படுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன்.

**திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் கிராமந்தோறும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவோம் என்று உறுதி கூறினார்கள். ஆனால், எனது தொகுதியான ராதாபுரத்தில் உள்ளூர் நீராதாரத்தின்மூலம் கிடைக்கும் தண்ணீரும், கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் கிடைக்கும் தண்ணீரும் ஒரே தொட்டியில் ஏற்றப்பட்டு பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுவதால் மக்கள் மிகவும் துன்பம் அடைகிறார்கள். எனவே, தனித் தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்:

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குத் தொடர்பில்லா வினா என்ற காரணத்தினால், தனிக் கேள்வி போடும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்கெனவே எங்கள் மனதில் இருக்கக்கூடிய கருத்துகளையெல்லாம் தெளிவாகப் புரிந்துகொண்டு ஒரு அருமையான பதிலைச் சொன்னார்கள். சென்ற ஆட்சியிலே வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி மற்ற பெட்டியெல்லாம் கொடுத்ததாகச் சொல்லப்பட்டதே தவிர, குடிநீரே கொடுக்கவில்லை, தமிழகம் கிட்டத்தட்ட தண்ணீர் இல்லாத அத்திப்பட்டியாக இருந்தது என்றுதான் சொல்லவேண்டும். எல்லா ஊர்களிலும் தண்ணீர்ப் பிரச்சினை. அந்தத் தண்ணீர்ப் பிரச்சினை மத்தியில்தான் நம்முடைய கூட்டணியை மக்கள் மிகப் பெரும்பான்மையாக வெற்றி பெறச் செய்தார்கள். ஆகவே, அதற்கு முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய பதில், தமிழகத்திலுள்ள எல்லா நகரங்களிலும் குடிநீரை காசு கொடுத்து, விலை கொடுத்து வாங்கக்கூடிய தமிழக மக்களுக்கு, ஏழை மக்களுக்கு மிகப் பெரிய ஆறுதலான பதிலாக இருக்குமென்று நான் நம்புகிறேன்.

திண்டுக்கல்லும் தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்கமுடியாத ஒரு தொகுதி. ஆனால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆய்வுக் கூட்டத்திலேயே திண்டுக்கல்லுக்கு ஏன் 15 நாட்களுக்கு ஒருமுறை தண்ணீர் கொடுக்கிறீர்கள் என்று கேட்டு, உடனடியாக நிர்வாக அமைப்பு இப்பொழுது காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் நான்கு நாட்களுக்கு ஒருமுறை கொடுக்கிறது. 15 நாட்களுக்கு ஒருமுறை வந்த தண்ணீர் நான்கு நாட்களாக மாற்றப்பட்டுவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) கூடுதலாக எங்களுக்கு வைகைக் குடிநீர்த் திட்டம் வேண்டும். காவிரிக் குடிநீர் பலவிதமாக மாசுபட்டு இருப்பதால் அதைச் சுத்திகரிப்பதற்கு எந்தத் தொழில்நுட்பமுமே இல்லையென்று சொல்லிவிட்டார்கள். ஆகவே, அதுசம்பந்தமாகவும் மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் நடவடிக்கை எடுத்து தமிழகத்தினுடைய தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்த்துவைக்க உதவும்படி கேட்டுக்கொள்கிறேன். நன்றி.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தேர்தல் காலத்திலே வந்தபோது கேட்ட கேள்விக்கு, ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடன் உடனடியாகத் தீர்வு கண்டதாக நன்றி கூறியிருக்கிறார்கள். தொடர்ந்து மேலும் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை பரிசீலனை செய்து விரைவாக அவர்களுடைய கேள்விக்கு ஏற்றவாறு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார்.

**திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதன்மைக் கேள்வியாக கேட்டிருக்க வேண்டும். இருப்பினும் என் தொகுதி சார்ந்த கேள்வியாக இருப்பதால் இந்தக் கேள்வியை நான் கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் 2005 ஆம் ஆண்டு செயல்படுத்த நினைத்த ராம நதி–ஜம்பு நதி உபரிநீர் மேல்மட்ட கால்வாய்த் திட்டம், சென்ற மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக அரசால் கிடப்பில் போடப்பட்டது. அந்தத் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த வேண்டுமென்று கருணைகூர்ந்து கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனி வினா எழுப்பினால் அதற்குரிய பதில் அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 12, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

[2011 ஆகஸ்ட் 9

**12—**

## தேர் சீரமைப்பு

*231—**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஒன்றியம், ஸ்ரீஇருந்திரப்பட்டி முத்துமாரியம்மன் கோயில் தேரினைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக வரலாற்றில், சட்டமன்றத்தில் புது வரலாறு படைத்து, இந்தியத் திருநாடே வியந்து பார்க்கின்ற அளவுக்கு சரித்திரச் சாதனை வெற்றி பெற்று அனைத்துப் பிரிவு மக்களும் போற்றிப் புகழுகின்ற அளவுக்கு ஒரு நிதிநிலை அறிக்கையை உருவாக்கியிருக்கின்ற, உலகம் இரு கரம் குவித்திடும் உலக வல்லரசு வரவேற்கும் நல்லரசின் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களே, சாதாரணத் தொண்டனாகிய என்னை இரண்டுமுறை ஸ்ரீவைகுண்டம் சட்டமன்ற உறுப்பினராகவும், தங்களது அமைச்சரவையில் இடமளித்து மக்கள் பணியாற்ற ஒரு நல்ல வாய்ப்பினை வழங்கியிருக்கின்ற எங்கள் குடும்பத்தின் குலதெய்வம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் எனது கோடானுகோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி எனது விடையினை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டம், ஸ்ரீஇருந்திரப்பட்டி அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான தேர் பராமரிப்புப் பணி பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர்.



2011 ஆகஸ்ட் 9]

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஆட்சியிலே, ஆலயங்களுக்குக் குடமுழுக்கு, திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் என மிகச் சிறப்பானத் திட்டங்களைத் தீட்டி வருகின்ற அம்மா அவர்களுடைய அரசு, புதுக்கோட்டை மாவட்டம், ஸ்ரீஇருந்திரப்பட்டி முத்துமாரியம்மன் கோயில் ஆலயத்திற்கான தேரினைச் சீரமைக்க பரிசீலனை செய்வதாகக் கூறியதற்காக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஏற்கெனவே இந்த ஆலயத்திற்குச் சொந்தமான தேர் இருக்கிறது. இந்தத் தேர் பழுதடைந்துள்ள காரணத்தினாலே திருவிழாக் காலங்களிலே தேர் ஓட்ட முடியாத நிலை இருந்திருக்கிறது. ஆகையினாலே, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே ஓடாத தேரை நிச்சயமாக அம்மா அவர்களுடைய ஆட்சியிலே ஓட வைப்பதற்காக இந்த வினாவை எழுப்பியிருக்கின்றேன். அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இதை மிக விரைவாக செய்துமுடிக்க வேண்டுமென்பதையும் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டம், ஸ்ரீஇருந்திரப்பட்டி அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமாக ஒரு மரத் தேர் உள்ளது. இத்தேரினை மராமத்து செய்து இரும்புச் சக்கரம் மற்றும் அச்சு பொருத்திட 14—1—2007 அன்று ரூ.6.50 இலட்சத்திற்கு மதிப்பீடு அங்கீகாரம் வழங்கப்பட்டது. அந்த மதிப்பீட்டுத் தொகையும் துறை நிதியாக திருப்பணி நிதியிலிருந்து திருக்கோயிலுக்கு வழங்கப்பட்டது. இத்திருப்பணி ஒப்பந்தப்புள்ளி அங்கீகாரம் 10—2—2009 அன்று வழங்கப்பட்டது. இரும்புத் தேர் சக்கரம் மற்றும் அச்சு செய்வதற்கு திருச்சி பாரத மிகுமின் தொழிலகத்திற்கு முன்பணமாக 50 சதவிகிதத் தொகை ரூ.95,147/— 11—2—2009 அன்று திருக்கோயில் நிர்வாகத்தால் வழங்கப்பட்டது. மராமத்துப் பணி செய்ய வேண்டிய ஒப்பந்ததாரர் திரு. ஆர். தர்மலிங்கத்திற்கு 1—3—2009 அன்று பணி ஆணை வழங்கப்பட்டது. ஆனால், முந்தைய அரசின் அலட்சியப் போக்கினால் ஒப்பந்ததாரர் அந்தப் பணியினை இதுவரை

[2011 ஆகஸ்ட் 9

செய்யாமல் இருந்து வருகின்றார். இதையடுத்து, துறை நிர்வாகம் அந்த ஒப்பந்ததாரருக்கு நான்கு முறை அறிவிப்புச் செய்தும் அவர் இதுவரை வேலை செய்யவில்லை. அந்த ஒப்பந்ததாரர் பணியை இரத்து செய்திடவும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரிடவும் திருக்கோயில் நிர்வாகத்திற்கு துறையின் சார்பாக அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர்.*

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றியைத் தெரிவித்து அமர்கின்றேன். நன்றி.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன்.*

**திரு. க. பாலகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கிற நம்முடைய தமிழக முதல்வர் அவர்களுடைய சீரிய நிர்வாகத்தில் இந்து அறநிலையத் துறையிலே கடந்த ஆட்சியின்போது மேற்கொள்ளப்பட்ட பல்வேறு சீர்கேடுகளைச் சீர்படுத்தி, நேர்படுத்துவதற்கான நடவடிக்கைளை மேற்கொண்டு வருகிறார்கள் என்பது தமிழக மக்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிற நடவடிக்கை என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். பக்தர்கள் கோயில்களுக்கு ஏராளமான நகைகளைக் காணிக்கையாக அளிக்கிறார்கள். ஆனால், அந்த நகைகள் எல்லாம் உருக்கப்பட்டு பிறகு அது கட்டிகளாக மாற்றப்பட்டு ஏலம் விடப்படுகின்றன. அதனை மாற்றி தனித் தனி நகைகளாகவே கோயில் நிர்வாகங்கள் ஏலம் விட்டால், தங்கத்தின் விலை மிக அதிகமாக உயர்ந்துக் கொண்டிருக்கிற நேரத்தில் சற்றுக் குறைந்த விலையில் ஏலம்விட....*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மூலக் கேள்வி தேர் பற்றியது. நீங்கள் நகைபற்றி கேட்கிறீர்களே!*

**திரு. க. பாலகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று அறிய விழைகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*



2011 ஆகஸ்ட் 9]

**மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசின் ஆட்சியில் இதுபோன்ற முறைகேடுகள் அதிகமாக நடந்து இப்பொழுது அவை விசாரணையில் இருந்து வருகின்றன. சம்பந்தப்பட்ட திருக்கோயில் நிர்வாகங்கள்மீது நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்பதை இந்த நேரத்தில் தெரியப்படுத்திக்கொள்ள விரும்புகிறேன்.*

*முற்பகல் 10–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார்.*

**திரு. வி.சி. சந்திரகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியிலே இருந்தவர்கள் வீட்டிலே சாமி கும்பிட்டுவிட்டு வந்து, இங்கே கடவுள் இல்லையென்று சொல்லி வந்தார்கள். ஆனால், இன்றைக்கு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருப்பவரும், எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற கேப்டன் அவர்களும் கடவுள் பக்தி கொண்டவர்கள். கோயில் அறங்காவலர் குழுவில், கடவுள் பக்தியே இல்லாத, கடவுளைப்பற்றியே தெரியாதவர்களெல்லாம் கோயில் நிருவாகத்திலே இருந்துகொண்டிருக்கிறார்கள். இவர்களையெல்லாம் மாற்றியமைக்கக்கூடிய திட்டம் இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

*அதேபோல, கடந்த ஆட்சியிலே வருமானம் வரக்கூடிய ஒரு தொழிலாகத்தான் கோயிலை நடத்திக் கொண்டிருந்தார்கள். இதைச் சீரமைக்கும் திட்டம் இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் தெய்வ பக்தியே இல்லாதவர்களெல்லாம் அறங்காவலர்களாகவும், அறங்காவலர் குழுத் தலைவர்களாகவும் நியமிக்கப்பட்டார்கள் என்பது உண்மை. இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர், ஏற்கெனவே இருந்த அறங்காவலர் குழுத் தலைவர்களும், அறங்காவலர் குழு*

[2011 ஆகஸ்ட் 9

*உறுப்பினர்களும் இராஜினாமா செய்ய வேண்டுமென்று இந்த அரசு கோரியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அறங்காவலர் குழு உறுப்பினர்கள், தலைவர்கள் புதிதாக நியமனம் செய்யப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார்.*

**திரு. வி.சி. சந்திரகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களின் பதிலுக்கு மிக்க நன்றி. கடந்த ஆட்சியிலே இருந்தவர்கள் இராஜினாமா செய்வார்கள் என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நிச்சயமாக அப்படிப்பட்ட பெருந்தன்மை உடையவர்கள் கடந்த ஆட்சியிலே யாருமே கிடையாது. எனவே, தயவுசெய்து சட்டப்படி அவர்கள்மீது நடவடிக்கை எடுத்து அவர்களை வீட்டிற்கு அனுப்ப வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பலர் இராஜினாமா செய்திருக்கிறார்கள். அப்படி இன்னும் சிலர் இராஜினாமா செய்யாமல் இருந்தால், அவர்கள்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன்.*

**திரு. அ. சவுந்தரராசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய துணைக் கேள்வி தேர் பற்றியதுதான். இப்பொழுது அமைச்சர் அறிவித்தவாறு பாரத மிகு மின் நிலையத்தினுடைய துணையோடு, இந்து அறநிலையத் துறையிலே எல்லா கோயில்களிலும் இருக்கிற தேர்ச் சக்கரங்களை நவீனப்படுத்த ஏற்பாடு செய்யப்படுமா? அப்படிச் செய்யாவிட்டால், சன்னக்கட்டை, முட்டுக்கட்டை நகர்ந்து, தேர் இழுக்கிறபோது அதனால் பல விபரீதங்கள் நிகழ்ந்தவண்ணம் இருக்கின்றன. எல்லா தேர்ச் சக்கரங்களையும் நவீனப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.*



2011 ஆகஸ்ட் 9]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா கோயில் தேர்களுக்கும் என்னென்ன பழுதுபார்த்தல் தேவையோ, எந்தெந்தக் கோயில் தேர்களுக்கு என்னென்ன பணிகள் செய்ய வேண்டுமோ, அந்தப் பணிகளெல்லாம் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*எந்தெந்த கோயில்களுக்குக் கும்பாபிஷேகம் செய்யப்பட வேண்டுமோ, அந்தந்தக் கோயில்களுக்கெல்லாம் கும்பாபிஷேகம் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*இன்னும், எந்தெந்தக் கோயில்களுக்குத் திருப்பணிகள் செய்ய வேண்டுமோ, அத்தனையும் செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 13, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

**13—**

## நிலம் வழங்குதல்

***876—திரு. க. பாலகிருஷ்ணன்:**

*மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், பெரியம்மாபட்டி பகுதியில் உபரி நிலமாக அறிவிக்கப்பட்ட சுமார் 5,000 ஏக்கர் நிலங்களை மீட்டு நில உச்சவரம்புச் சட்ட விதிக்குட்பட்டு நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு வழங்கிட அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, வருவாய்த் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது நாளாக பதிலளிக்க அனுமதியளித்த எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய பாதம் பணிந்து நன்றி தெரிவித்து, உறுப்பினர் கேள்விக்கு 'ஆம்' என்று பதில் அளிக்கின்றேன்.*

[2011 ஆகஸ்ட் 9

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், பெரியம்மாபட்டி கிராமத்தில் சற்றேறக்குறைய 5,000 ஏக்கர் நிலம் 1980 ஆம் ஆண்டிலே உச்சவரம்பு சட்டத்தின்மூலம் உபரி நிலம் என்று அறிவிக்கப்பட்டு, பலருக்கு ஒப்படை செய்யப்பட்டதாக ஆவணங்களிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், நடந்தது என்னவென்று சொன்னால், அந்த நிலங்களையெல்லாம் பினாமி பெயர்களிலே பல வசதி படைத்தவர்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். 2004 ஆம் ஆண்டு இதே ஆட்சி இருந்தபோது நாங்கள் நில மீட்புப் போராட்டம் நடத்தி, முதல் கட்டமாக 513 ஏக்கர் நிலம் 339 பேருக்கு 11-5-2005 அன்று அந்த உத்தரவு வழங்கப்பட்டது.

முற்பகல் 10—45

அதன்பிறகு வந்த ஆட்சி அந்த உத்தரவை அமல்படுத்துவதிலே துரும்பைக்கூட அசைக்கவில்லை. இவ்வளவுக்கும் அந்த மாவட்டத்தைச் சார்ந்தவர்தான் அப்போது வருவாய்த் துறை அமைச்சராக இருந்தார்கள். எனவே, முதல்கட்டமாக 339 பேருக்கு ஒப்படை செய்யப்பட்டிருக்கிற அந்த 513 ஏக்கர் நிலமும், மீதம் இருக்கிற ஒப்படை உத்தரவு வழங்கப்படாத அந்த நிலங்களும், முறையான மனுக்கள் கோரப்பட்டு நிலமற்ற ஏழைகளுக்கு வழங்கப்படுமா என்பதை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ஏற்கெனவே ஆளுநர் உரை விவாதத்தில் 7—6—2011 அன்று பேசியபோது, இதைப்பற்றி மாண்புமிகு அம்மா அவர்கள் அறிந்தவுடன் உடனடியாக நடவடிக்கை எடுக்க உத்தரவு இட்டு, அதற்கான பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பது அவருக்கும் தெரியும், அவருடைய துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும்.



2011 ஆகஸ்ட் 9]

விவசாய நிலங்கள் சிலரிடம் மட்டுமே மிக அதிக அளவில் இருப்பதால் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளைப் போக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், 1961 ஆம் ஆண்டில் தமிழ்நாடு நிலச்சீர்திருத்தச் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம் விவசாய நில உடைமைகளுக்கு உச்சவரம்பினை நிர்ணயிக்கவும், உச்சவரம்பிற்குமேல் உள்ள நிலங்களை உபரி நிலமாக அறிவிக்கவும், அத்தகைய உபரி நிலங்களை நிலமற்ற ஏழைகளுக்கு வழங்குவதற்கும் அதன்மூலம் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்பாடு அடையச் செய்ய, சமுதாயத்தில் அவர்களுடைய நிலையை உயர்த்துவதற்கு வழிவகை செய்கின்றது.

திண்டுக்கல் மாவட்டத்தில், திரு. ஜி.டி. நரேந்திரா மற்றும் திருவாளர்கள் நரேந்திரா டெய்ரி பார்ம் ஆகியோர்களிடமிருந்து நிலச்சீர்திருத்தச் சட்டத்தின்கீழ் கீழ்க்கண்டவாறு நிலங்கள் உபரியாக அறிவிக்கை செய்யப்பட்டன. பெரியம்மாபட்டி கிராமத்தில் 3,891 ஏக்கர் 80 சென்ட்டும், ஆண்டிப்பட்டி கிராமத்தில் 1,158 ஏக்கர் 52 சென்ட் நிலமும் மொத்தம் 5,050 ஏக்கர் 32 சென்ட்டும் இதுதவிர, வேறு சில கிராமங்களிலும் உபரி நிலம் அறிவிக்கை செய்யப்பட்டது. மேற்படி உபரியாக அறிவிக்கப்பட்ட நிலங்கள் அனைத்தும் 1981 ஆம் ஆண்டு முதல் 2007 ஆம் ஆண்டு வரை பல்வேறு கோப்புகளில் ஒப்படைப்பு செய்யப்பட்டன.

இதற்கிடையில் இந்த ஒப்படைப்பு செய்யப்பட்ட நிலங்களைப் பற்றி தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் அரசுக்கு மறு ஆய்வு செய்யவேண்டும் என்று மனு அளிக்கப்பட்டது. அதன்படி விசாரணை மற்றும் நில அளவைப் பணியினை மேற்கொள்வதில் உள்ள நடைமுறை இடர்ப்பாடுகளை சுட்டிக் காண்பித்து பெரிய புலங்களாக இருந்தால் அவற்றை சிறிய புலங்களாக பிரிக்க வேண்டியுள்ளது. அவை சிறு புலங்களாக பிரிக்கப்படுவதற்கு தியோடலைட் கருவிமூலம் நில அளவை செய்யவேண்டும்.

அதன்படி மேற்கண்ட நில அளவைப் பணியினை செய்யவிடாமல் அங்கே இருக்கின்ற விவசாயிகள் இடையூறு செய்ததால், சட்டம்—ஒழுங்கு பிரச்சினை எழுந்ததால், அளவைப் பணிகளை மேற்கொள்ள இயலாது என காரணம் காண்பித்து சிறு சுற்றுப் புலங்களை சிறு புலங்களாகப் பிரிக்கும் பணி முழுமையடையாமல் கைவிடப்பட்டது.

மேற்படி நிலங்களை அளந்து தகுதியான ஒப்படைதாரர்களுக்கு ஒப்புவிக்கும் பொருட்டு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவுப்படி

[2011 ஆகஸ்ட் 9

பழனி வட்டாட்சியர் அவர்களின் 1–8–2011 ஆம் நாளிட்ட ஆணையின்படி பழனி வட்ட அலுவலகத்தில் பராமரிப்பு மற்றும் சுற்றுக் குழுப் பணியில் பணிபுரியும் வட்ட சார்–ஆய்வாளர் ஒருவர், ஒரு குறுவட்ட அளவர் மற்றும் 4 சார் ஆய்வாளர்கள் மொத்தம் 6 பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

இந்நிலையில் சிறு சுற்றுப் புலங்களாக இருப்பதால், அதனை சிறு புலங்களாக பிரித்தால் மட்டுமே 'F' பட்டா வழங்கிய நபர்களுக்கு நிலம் அளந்து எல்லை காண்பிக்க இயலும் என்பதால், சட்டம்–ஒழுங்கு பிரச்சினையைக் கருத்திற்கொண்டு சிறப்பு நில அளவர்களை நியமித்து நில அளவைப் பணிகளை மேற்கொண்டு தகுதியான ஒப்படைதாரர்களுக்கு நிலத்தை அளந்து ஒப்படைப்பு செய்யவும், ஆக்கிரமிப்புக்காரர்களை சட்டப்படி அகற்றிடவும், இந்த இனத்தில் சிறப்புக் கவனம் செலுத்தி தகுந்த மேல் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நமது இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவு பிறப்பித்துள்ளார்கள். எனவே, விரைவில் முழு பரப்பளவும் அளந்து உரியவர்களுக்கு ஒப்படை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தெளிவான வழிகாட்டுதலோடு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அந்த உபரி நிலங்களாக அறிவிக்கப்பட்டிருக்கிற ஐயாயிரம் ஏக்கர் நிலங்களை, நிலமற்ற ஏழைகளுக்கு விநியோகம் செய்வதற்கு மேற்கொண்டிருக்கிற நடவடிக்கைகளை இங்கே விளக்கி இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிற அதே நேரத்தில், அங்கே தொடர்ந்து நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறவர்கள், அந்த நிலங்களை மீட்கப் போகிற அதிகாரிகளிடத்தில் சட்டம்–ஒழுங்குப் பிரச்சினை ஏற்படும் என்கிற காரணம் காட்டியே கடந்த 25, 30 ஆண்டுகளுக்கு மேலாக அந்த நிலத்தை அவர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அப்படி வசதி படைத்தவர்கள் சட்டத்தையே மிரட்டுகிறபோது அதற்கு கடந்த ஆட்சி பணிந்ததுபோல இந்த ஆட்சி பணிந்து விடாமல்,



2011 ஆகஸ்ட் 9]

அவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுத்து அந்த நிலங்களை மீட்டுத் தர வேண்டும். முதல்கட்டமாக ஒப்படை ஆணையிடப்பட்ட 513 ஏக்கர் நிலத்தை 339 பேர்களுக்கு ஒப்படைப்பு செய்கிற பணியை ஒரு காலவரையறைக்குள் ஒப்படைப்பதற்கு அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டுமென்று விழைகிறேன்.

முற்பகல் 10–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாமன்ற உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, திண்டுக்கல் மாவட்டத்தில், அப்போது மைனாரிட்டி தி.மு.க. அரசினுடைய வருவாய்த் துறை அமைச்சர் இருந்த காரணத்தினாலேதான், அங்கே உள்ளே செல்கின்றபோது, அந்த நில அளவைப் பணி முடியாமல், முன்னாள் வருவாய்த் துறை அமைச்சருடைய ஆதரவோடு அங்கே தடுத்தார்கள், அது முடியவில்லை. இப்போது மாண்புமிகு அம்மா அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றிருக்கின்றார்கள். அதைப்போன்று தற்போது உள்ளே செல்கின்றவர்களை யாராவது தடுத்தால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் என்ன கிடைக்கும் என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகையால், உடனடியாக இதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள்; நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, நீங்கள் கடந்த காலத்திலேகூட பார்த்திருப்பீர்கள். திருநெல்வேலி மாவட்டத்தில், செவந்திபுரம் என்ற இடத்தில், 50 ஆண்டுக்காலம் கிடைக்காத பட்டாவை, மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு வார காலத்திற்குள்ளேயே கிடைப்பதற்கு ஏற்பாடு செய்து, (மேசையைத் தட்டும் ஒலி) 2,750 நபர்களுக்கு உடனடியாகப் பட்டா வழங்கியிருக்கின்றார்கள் என்று சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியின் உறுதியான நடவடிக்கைக்கு இதைவிட வேறு உதாரணம் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி.

[2011 ஆகஸ்ட் 9

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது ஸ்ரீவில்லிப்புத்தூர் தொகுதியில் உள்ள விழுப்பனூர் சிற்றூராட்சி சர்வே எண் 1354 மற்றும் 1355-ல், பல கோடி ரூபாய் மதிப்புள்ள 4 ஏக்கர், 70 சென்ட் அரசு தரிசு நிலத்தை ஒரு தனியார் கல்லூரி நிர்வாகம் தொடர்ந்து ஆக்கிரமிப்பு செய்து வருகின்றது. நானும் எங்களுடைய மாவட்டத்தினுடைய அமைச்சரான மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்களும், அந்த இடத்தை நேரடியாகச் சென்று பார்த்தபிறகும், தொடர்ந்து அந்தக் கல்லூரி நிர்வாகம் அந்த இடத்தைக் கைப்பற்ற முயற்சி செய்து, அங்கேயிருக்கின்ற அந்தக் கிராமத்தைச் சேர்ந்த பொது மக்களுக்கும், கல்லூரி நிர்வாகத்திற்கும் இடையே தொடர்ந்து பல்வேறு வகையில் பிரச்சினைகள் ஏற்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** அந்த நிலத்தை அரசு கையகப்படுத்தி, அதற்கு முற்றுப்புள்ளி வைக்குமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய அனுமதியோடு கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்குத் தனிக் கேள்வி கேட்டால், விடையளிப்பதற்கு வசதியாக இருக்கும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஏ. கருப்பசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**14—**

### பணிமனை

***281—திரு. ஏ.ஏ. கருப்பசாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2011 ஆகஸ்ட் 9]

(அ) அவினாசி தொகுதி, அன்னூரில் போக்குவரத்துக் கழக பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தச் சட்டமன்றத்தில் போக்குவரத்துத் துறை தொடர்பான வினாக்களுக்கு பதிலளிக்கும் வாய்ப்பளித்த உலகத் தமிழர்களின் தலைவர், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதங்களில் கோடானுகோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(அ) மற்றும் (ஆ) அவினாசி தொகுதி, அன்னூரில் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து நிதி கிடைக்கப் பெறும்பட்சத்தில், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் உத்தரவினைப் பெற்று, பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஏ. கருப்பசாமி.

**திரு. ஏ.ஏ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை வாழவைத்து, இந்தப் பேரவையிலே பேச வாய்ப்புத் தந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, அவினாசி தொகுதி மக்களின் சார்பாக கோடானுகோடி நன்றியைத் தெரிவித்து, தங்கள் பொற்பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன். எனது அவினாசி தொகுதி, அன்னூரில் போக்குவரத்துப் பணிமனை கட்டுவதற்குப் போதுமான நிலம் உள்ளது; நான்கரை ஏக்கர் நிலம் உள்ளது. அதில் கட்டடம் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா? ஆம் எனில், எப்போது? (குறுக்கீடு)

(மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்கையில் அமர்ந்தவாறே, உறுப்பினரை நோக்கி "அமைச்சர் பணம் கேட்கிறார்; உங்களிடம் இல்லையா?" என்று சிரித்தபடியே கேட்டார்.)

அம்மா! என்னிடம் நிதி இல்லை அம்மா. (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.ஏ. கருப்பசாமி, கேள்வியைக் கேட்டு முடித்து விடுங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

[2011 ஆகஸ்ட் 9

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், "உறுப்பினருடைய தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து, தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பணம் வழங்கினால் இந்தக் கட்டடம் கட்டித் தரப்படும்" என்றார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், "அமைச்சர் அவர்கள் இதைக் கட்டித் தருவாரா?" என்று மீண்டும் கேட்டார். நான் மாண்புமிகு உறுப்பினரிடம், "அமைச்சர் உங்களிடம் பணம் கேட்கிறார்" என்றேன். அதற்கு மாண்புமிகு உறுப்பினர், "அம்மா, பணம் இல்லை" என்றார். (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் மனது வைத்து, இதற்கு ஒரு வழி காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் கோவை மண்டலத்தில் மொத்தம் 1,624 பேருந்துகளும், 21 பணி மனைகளும் பல இடங்களில் இயங்கி வருகின்றன. இவற்றில் 9 பணிமனைகள் கோவை மாநகரில் 830 பேருந்துகளுடன் இயங்கி வருகின்றன. இவற்றில் 5 பணிமனைகள் குறிப்பாக உக்கடம், சுங்கம் மற்றும் ஒண்டிபுதூர் ஆகியவை தலா 100 பேருந்துகளுக்கும் அதிகமாகக் கொண்டுள்ளன. மேற்படி பணிமனைகளில் 100 பேருந்துகளை நிறுத்துவதற்கு இடவசதி போதுமானதாக இல்லை. மேலும், 100 பேருந்துகள் எப்பொழுதும் பணி மனைகளின் வெளியிலேயே, குறிப்பாக, சாலைகளில் இரவு நேரங்களில் நிறுத்தப்படுகின்றன. பேருந்துகளை இரவு நேரங்களில் பணிமனைக்கு வெளியில் நிறுத்துவதால் வாகனப் போக்குவரத்திற்கும், பொது மக்களுக்கும் இடையூறாக இருப்பதாகக் காவல் துறை தெரிவிக்கின்றது.

மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், 1995 ஆம் ஆண்டு அரசுப் போக்குவரத்துக் கழகம், கோவை 3.93 ஏக்கர் நிலத்தை தனியாரிடமிருந்து கோவை மாவட்டம் அன்னூர் கிராமத்தில் எஸ்.எப். எண் 328/2 மற்றும் 328/3 இல் பணிமனை அமைக்க நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி கையகப்படுத்தப்பட்டுள்ள நிலம் கோவை–சத்தியமங்கலம் பிரதான சாலையில், கோவை மாநகரிலிருந்து 30 கிலோ மீட்டர் தொலைவிலும், அன்னூர் நகரிலிருந்து 2 கிலோ மீட்டர் தொலைவிலும் அமைந்துள்ளது. தற்போது அன்னூர் நகரத்தின் வழியாக 150 பேருந்துகள் தினமும் செல்கின்றன. அன்னூர் நகரைச் சுற்றி கீழ்க்காணும் பணிமனைகள் இயங்கி வருகின்றன. அன்னூருக்குக் கிழக்கே திருப்பூர் பணிமனை 35 கிலோ மீட்டர் தொலைவிலும், அன்னூருக்கு மேற்கே மேட்டுப்பாளையம் பணிமனை 22 கிலோ மீட்டர் தொலைவிலும், அன்னூருக்கு வடக்கே சத்தியமங்கலம் பணிமனை 35 கிலோ மீட்டர் தொலைவிலும், அன்னூருக்கு தெற்கே கோவை–உப்பிலிபாளையம் பணிமனை 32 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளன. மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் தமிழகத்தில் அத்தனைத் திட்டங்களையும் சிறப்பாகச் செயல்படுத்திவரும் இந்நிலையில், இந்த ஆண்டு போக்குவரத்துப் பணிமனை தொடங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவினைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2011 ஆகஸ்ட் 9]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஏ. கருப்பசாமி அவர்கள். ஏதோ சொல்ல வருகிறீர்கள், சொல்லுங்கள்.

**திரு. ஏ.ஏ. கருப்பசாமி:** மாண்புமிகு அம்மா அவர்களுக்கு தொகுதி மக்கள் சார்பாக கோடானுகோடி நன்றியைத் தெரிவித்து வாழ்த்தி, வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2011–2012, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2011–2012 ஆம் ஆண்டுக்கான திருத்திய நிதிநிலை அறிக்கை பொது விவாதம்-தொடர்ச்சி. மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள்.

**திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னில் பிறந்தவர்களுக்காக ஆட்சி நடத்திய சுயநலவாதிகளின் சகாப்தம் முடித்து, இந்த மண்ணில் பிறந்தவர்களுக்காக ஆட்சி நடத்தும் எங்கள் மாதரசியே, ஏர் பிடிக்கும் குடும்பத்தில் பிறந்த எனக்கு, நாட்டின் சீர்மிகு சட்டமன்றத்திலே இடம்; சமஸ்கிருதம் சொல்கிறது “தெய்வம் மனுஷ்ய ரூபேன” என்று. எங்கள் மாண்புமிகு இதய தெய்வம் இருக்கும் திசை நோக்கி வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கொங்கு மண்டலத்திலே, பெருந்துறை அருகே சிறிய கிராமத்தில் சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்து, மாணவப் பருவத்திலேயே கழகத்தால் ஈர்க்கப்பட்டு, மாண்புமிகு கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர், தமிழகத்தினுடைய ஒப்பற்ற முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய சீரிய தலைமையின்கீழ் விசுவாசமிக்க தொண்டனாகப் பணியாற்றி வந்த என்னை, கழகத்தின் பேரூராட்சி செயலாளர், மாண்புமிகு அம்மா பேரவையினுடைய மாவட்ட தலைவர், ஒன்றிய கழகத்தினுடைய செயலாளர், மாவட்ட கழகத்தினுடைய செயலாளர், கழகத்தினுடைய வேட்பாளராகப் படிப்படியாக புடம் போட்டு வளர்த்த, நான் அனுதினமும் விசுவாசத்தோடு வணங்குகின்ற எங்கள் அன்னையே!

காட்டில் விதையாகக் கிடந்த என்னை, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எனும் தோட்டத்திற்குக் கொண்டுவந்து, பாசத்துடனும், பரிவுடனும் வளர்த்து, பெருந்துறை சட்டமன்ற உறுப்பினர், சட்டமன்றப் பேரவை உறுதிமொழிக் குழுத் தலைவர் என எனது கற்பனைக்கெட்டாத பொறுப்புகளைக் கொடுத்து அழகுபார்த்த எங்கள் அன்னைக்கு நான் மட்டுமல்ல, எனது குடும்பம் மட்டுமல்ல, எங்கள் தலைமுறையே விசுவாசத்தோடு நன்றி உள்ளவர்களாக இருப்போம். மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் ஆசியோடு எனக்கு வாக்களித்த பெருந்துறை தொகுதி மக்களுக்கும், எனது நெஞ்சார்ந்த நன்றியைத்



தெரிவித்துக்கொள்கிறேன். கன்னிப் பேச்சுக்கு வாய்ப்பளித்த கண்ணியம்மிக்கத் தாயே, பணிவான வணக்கம் தங்கள் பாதங்களில்.

முற்பகல் 11-00

மே 13, தமிழக மக்கள் மீண்டும் சுதந்திரக் காற்றை சுவாசிக்கின்ற திருநாளாக அமைந்தது.

“மாகாளி பராசக்தி உருசியநாட்
டினிற் கடைக்கண் வைத்தா ளங்கே
ஆகாவென் ஹெழுந்ததுபார் யுகப்புரட்சி;”

என புலவன் பாரதி பாடியதைப்போல, தமிழகத்திலே அமைதிப் புரட்சி நடைபெற்றது. சீனப் புரட்சி, பிரெஞ்சுப் புரட்சி போல தமிழகத்தில் ஒரு குடும்ப ஆட்சிக்கு வாக்குச் சீட்டு எனும் ஆயுதத்தாலே மக்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையில் ஒன்று திரண்டு முடிவுரை எழுதினார்கள்.

மங்கம்மா சபதம் என்பதுபோல, எங்கள் அம்மா சபதத்தால் தமிழகம் மீட்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) தேனாம்பேட்டையிலே இருந்து கோட்டையிலே குடியேறி, தமிழகத்தை கண்ணம்மாப்பேட்டை ஆக்கியவர்களை பொதுத் தேர்தலில் பொங்கி வந்த மக்கள் சக்தி என்ற புது வெள்ளம் அடித்துச் சென்றது. காலத்தை வென்றவர் நீங்கள் அம்மா; காவியமானவர் நீங்கள் அம்மா; வேதனை தீர்த்தவர் நீங்கள் அம்மா; விழிகளில் நிறைந்தவர் நீங்கள் அம்மா; வெற்றித் திருமகள் நீங்கள் அம்மா என தமிழக மக்கள் தேர்தல் வெற்றியைக் கொண்டாடி மகிழ்கின்றார்கள்.

கடந்த கால திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே கடுமையான மின் வெட்டு, நில அபகரிப்பு, அரிசிக் கடத்தல், மணல் கொள்ளை, வழிப்பறி, திருட்டு, கள்ள லாட்டரி என தமிழகத்திலே உள்ள ஒவ்வொரு குடும்பமும் ஏதேனும் ஒரு வகையிலே ஆட்சியாளர்களால் பாதிக்கப்பட்டிருந்தனர். அந்த நிலை தற்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே மாற்றப்பட்டு வந்து கொண்டிருக்கிறது.

கடந்த ஆட்சியிலே குடும்பச் சண்டையாலே பத்திரிகை அலுவலகத்திற்கு தீ வைத்து 3 உயிர்களைப் பலிவாங்கிய சம்பவம்; முன்னாள் அமைச்சர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம்; திரைத் துறையிலே அராஜகம்; கேபிள் துறையிலே ஆதிக்கம், மிரட்டல்; வழக்கறிஞர்களுக்கு அடி, உதை; நீதிபதியே தாக்கப்பட்ட சம்பவம்; கூட்டுறவுச் சங்கத் தேர்தலில் கட்சிக்காரர்களைத் தவிர மற்றவர்களுக்கு வேட்பு மனுவே தராமல் அராஜகம் செய்தது என்பன அவர்களுடைய சாதனைகளாகும்.

உள்ளாட்சித் தேர்தலில் தேர்தல் முறைகளை மாற்றி, தில்லுமுல்லு செய்து, மிரட்டிப் பதவிகளைக் கைப்பற்றிய அராஜகமும் நடைபெற்றது. தேர்தலில் வெற்றி பெற்றால் தமிழகமெங்கும் நடைபெற்ற நில அபகரிப்பு வழக்குகளைப் பதிவு செய்து பறிகொடுத்த நிலங்கள், சொத்துக்கள் மீட்டுத் தரப்படும் என மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தேர்தல் அறிக்கையிலேயே தெரிவித்திருக்கின்றார்கள். அதன்படி சட்டப்படி தீர விசாரித்து பாதிக்கப்பட்ட பொதுமக்கள் புகாரின் பேரிலே காவல் துறை நடவடிக்கை எடுப்பதை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் நடவடிக்கையை, இன்றைக்கு வரவேற்கின்றார்கள், வாழ்த்துகின்றார்கள். குற்றவாளிகளோ அய்யோ, அய்யோ என கூக்குரல் இடுகின்றார்கள். உப்பைத் தின்றவன் தண்ணீர் குடித்துத்தானே ஆக வேண்டும். 'பாவத்தின் சம்பளம் திகார் சிறை' என்ற காலத்திலே இருக்கின்றோம் என்பதை மறந்துவிட்டு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பொய் வழக்குப் போடுவதாகக் கதை வசனம் எழுதுவதை மக்கள் நம்பத் தயாராக இல்லை.

நீறுபூத்த நெருப்பாக இருந்த மக்கள் கோபத்தை திருமங்கலம் பார்முலாமூலம் அணைத்துவிடலாம் என தி.மு.க.-வினர் தப்புக் கணக்குப் போட்டனர். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமையிலே கட்டுக்கோப்பாக இருந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு முடிவு காலம் நெருங்கிவிட்டது என மதுரையிலே இருந்து எக்காளமிட்டனர். காலச் சக்கரம் சுழன்றது, பொதுத் தேர்தல் வந்தது, மக்கள் மாண்புமிகு அம்மா அவர்களை நம்பினார்கள். "நம்பினார் கெடுவதில்லை, இது நான்கு மறைத் தீர்ப்பு" என்பதற்கிணங்க மக்கள் மாண்புமிகு அம்மா அவர்கள்மேல் வைத்த அன்பினாலும், நம்பிக்கையினாலும் வரலாறு காணாத வெற்றியை அம்மா அவர்கள் பெற்றார்கள்.

மடங்கா வீரமும், அடங்கா ஆற்றலும் கொண்ட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை இந்திய துணைக் கண்டமே வியந்து போற்றியது. "கோட்டை கட்டிக் கொண்டாட்டம் போட்ட கூட்டங்கள் என்னானது? ஓட்டை வந்து தண்ணீரில் மூழ்கும் ஓடங்கள் போலானது" என்ற கருத்து இன்றைக்கு உண்மையாகியுள்ளது.



கடந்த ஆட்சியிலே "அரைக் குத்தரிசி அன்னதானம், விடிய விடிய மேள தாளம்" என்ற பழமொழிப்படி அரசின் திட்டங்கள் விளம்பரத் திட்டங்களாக இருந்தன. ஐயாயிரம் ஆண்டுகள் பழைமை வாய்ந்த தமிழ் மொழியை செம்மொழி என 2,000 ஆண்டு தகுதிக்கு மத்திய அரசின்மூலம் குறைத்த பெருமை கருணாநிதியைச் சாரும் என தமிழறிஞர்கள் கூறுவதை இன்றைக்குக் கேட்க முடிகிறது. செம்மொழி மாநாடு என்ற பெயரில் குடும்ப சுய தம்பட்ட மாநாட்டை நடத்தியதையும், தமிழ் அறிஞர்கள், குடும்ப உறுப்பினருக்குப் பின் நிற்க வைக்கப்பட்டு அவமானப்படுத்தப்பட்டதையும் மானமுள்ள தமிழன் யாரும் ஏற்கவில்லை என்பதை மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இலங்கைத் தமிழர்களுக்காக தி.மு.க. அரசு செய்தது என்ன என்ற கேள்வி தேர்தல் சமயத்தில் தமிழகம் முழுவதும் எதிரொலித்தது. இறுதிப் போரின்போது தமிழர்கள் கொத்து கொத்தாக சுட்டுக் கொல்லப்பட்டபோது, ரோம் நகரம் பற்றி எரிகின்றபோது, பிடில் வாசித்துக்கொண்டிருந்த நீரோ மன்னரைப் போல அல்லவா தி.மு.க. அரசும், கருணாநிதியும் இருந்தனர். இவர்களுடைய தமிழர் துரோகத்தைப் பார்த்து பக்கம் பக்கமாக பத்திரிகைகள் எழுதின, நாடே கொந்தளித்தது. இவர்களுக்கு முடிவுரை எழுதினார்கள்.

*முற்பகல் 11–05*

புரட்சித் தலைவி மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றவுடன் இலங்கை அரசுக்குப் பொருளாதார தடை விதிக்கவும், தமிழர்களை ஈவிரக்கமின்றிக் கொன்று குவித்தற்காக இலங்கை அரசைப் போர்க் குற்றவாளி என அறிவிக்க வேண்டும் என தமிழகச் சட்டமன்றத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். இது சர்வதேச அளவில் வரவேற்பைப் பெற்றுள்ளதை அனைவரும் மெய்சிலிர்த்துப் பார்க்கின்றோம்.

'நீலச் சாயத் தொட்டியில் விழுந்த நரி, நானே காட்டுக்கு ராஜா எனக் கூறி மற்ற மிருகங்களை ஏமாற்றி வந்ததாம். ஒரு நாள் பெய்த மழையில் நனைந்தபோது நரியின் நீலச் சாயம் வெளுத்து, ராஜா வேஷமும் கலைந்ததாம்'. அதுபோல உலகத் தமிழினத் தலைவர் என தனக்குத் தானே பட்டம் சூட்டிக் கொண்டவர்கள் நிலை இன்றைக்கு பரிதாபகரமானதாக உள்ளது.

புனித நதியைத்தேடி வந்த கடல்போல், உலக வல்லரசாம் அமெரிக்காவின் வெளி விவகாரத் துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் சென்னை கோட்டைக்கே வந்து மாண்புமிகு அம்மா அவர்களைச் சந்தித்து, இலங்கைப் பிரச்சினை குறித்து விவாதிக்கின்றார் என்றால், இலங்கைப் பிரச்சினையை உலக அரங்குக்குக் கொண்டு சென்ற பெருமை மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்ட பல்வேறு வாக்குறுதிகள், நிதிநிலை அறிக்கையில் அற்புதமாகப் பிரதிபலிப்பதை இன்றைக்கு நாம் பார்க்க முடிகின்றது. முந்தைய ஆட்சியாளர்களால் செயல்படுத்தப்பட்ட காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக, நோயாளிகள் பயன்பெறுவதைத் தவிர்த்து, காப்பீட்டு நிறுவனம் பயன்பெறுகின்ற வகையிலே அன்றையத் திட்டம் இருந்தது. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனைத்து மக்களும் பயன்பெறுகின்ற வகையிலே, அனைவருக்கும் முழுமையான மருத்துவ சேவை வழங்குகின்ற நோக்கத்தோடு, 'முதலமைச்சர் அவர்களின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்' என புதிய பொலிவோடு, முந்தைய அரசினுடைய குறைபாடுகளை முழுமையாக நீக்கி, மக்கள் நலன் காக்கின்ற அற்புதமான திட்டத்தைக் கொண்டு வந்துள்ளார்கள். இது தமிழக மக்கள் மத்தியில் மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளது. இந்தத் திட்டம் இந்திய நாட்டிற்கே எடுத்துக்காட்டான திட்டமாக இருக்கும் என மருத்துவத் துறை சார்ந்த அனைவரும் ஆச்சரியத்தோடு பார்க்கின்றார்கள். இந்த அற்புதமான திட்டத்தின் மூலமாக, சிகிச்சையின் மூலமாக ஒவ்வொரு நபரும் பெறக்கூடிய தொகையின் அளவை அறிய மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களை நோக்கி மக்கள் ஆவலோடு பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கன்னிப் பேச்சில் தலையிடக்கூடாது என்று இருந்தேன். ஆனால் அவர் ஒரு வினா எழுப்பியிருக்கிறார். அதற்கு பதில் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் கொண்டு வரப்பட்ட முந்தைய காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் ஒரு குடும்பத்திற்கு



நான்கு ஆண்டுகளுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வீதம் அதிகபட்ச மருத்துவச் செலவு அனுமதிக்கப்பட்டது. இந்தப் புதிய திட்டத்தின்கீழ், அதாவது கழக அரசு தற்போது கொண்டு வந்துள்ள புதிய திட்டத்தின்கீழ், ஒரு வருடத்திற்கு ஒரு இலட்சம் ரூபாயும், குறிப்பிட்ட சில நோய்களுக்கு 1½ இலட்சம் ரூபாய் வரையிலும் அனுமதிக்கப்படும். அதாவது நான்கு வருடங்களில் ஒரு குடும்பம் அதிகபட்சமாக நான்கு இலட்சம் ரூபாய்க்கான மருத்துவச் செலவினைப் பெற இயலும். (மேசையைத் தட்டும் ஒலி) முந்தைய காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்டிருந்த 642 வகையான சிகிச்சை முறைகள் மாற்றி அமைக்கப்பட்டு, தற்போது மருத்துவ மேலாண்மை மற்றும் பச்சிளம் குழந்தைகளுக்கான சிகிச்சை முறைகளையும் சேர்த்து இந்தப் புதிய காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் 950 வகையான சிகிச்சை முறைகள் அனுமதிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம்.

**திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அற்புதமான அறிவிப்புக்கு, அவருடைய பாதங்களில் என்னுடைய கோடானுகோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகிறேன், விவசாயமும், தொழிலும் இரு கண்கள் என்பதைக் கருத்தில் கொண்டு, திருப்பூர் சாயக் கழிவுநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண தொலைநோக்குப் பார்வையுடன் இரு தரப்பினருக்கும் ஏற்ற தீர்வை முன்வைத்துள்ள மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைத் தொழில் முனைவோரும், தொழிலாளர்களும், விவசாயிகளும் பாராட்டுகிறார்கள். இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசை, இதுதான் செயல்படுகின்ற அரசு எனப் பாராட்டுகின்றார்கள்.

மின் உற்பத்தி மிகை மாநிலமாகத் தமிழகத்தை உருவாக்க பல்வேறு திட்டங்கள் வரவு–செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் ஆட்சியிலே மின் மிகை மாநிலமாக விட்டுச் சென்றதை, கடந்த தி.மு.க. ஆட்சியிலே நிர்வாகம் ஸ்தம்பித்ததன் காரணமாக, தமிழகம் இருளிலே மூழ்கியது. மின்வெட்டு அறிவிப்பு குறித்துப் பேச மட்டுமே ஓர் அமைச்சர் நியமிக்கப்பட்டு, அவர் மின்வெட்டுத் துறை அமைச்சர் என பொது மக்களால் விமர்சிக்கப்பட்ட அவல நிலை இருந்தது. வரும் காலங்களிலே 3,280 மெகாவாட் உற்பத்தி

செய்வது என்ற அறிவிப்பு 2012–ல் மின்வெட்டு முற்றிலும் நீக்கம் என்ற தற்போதைய அறிவிப்பால் தமிழக தொழில் முனைவோரும், மக்களும் நிம்மதியடைந்துள்ளனர். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நிர்வாகத் திறனுக்குச் சான்றாக இந்த அறிவிப்பு உள்ளது எனத் தமிழக மக்கள் வியந்து பாராட்டுகிறார்கள்.

*முற்பகல் 11–10*

இன்றைக்கு விவசாயத்திற்கும், கூட்டுறவுக்கும் முன்னுரிமை அளித்து உணவு தானியங்களை 115 இலட்சம் டன் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயித்து பல்வேறு திட்டங்கள் விவசாயப் பெருமக்களுக்காக அறிவிக்கப்பட்டுள்ளன. இரண்டாம் பசுமைப் புரட்சிக்கு வித்திட உறுதி செய்து, மதிப்புக் கூட்டியும், வேளாண் உற்பத்தியை அதிகரித்தும் விவசாயிகளின் தனி நபர் வருமானத்தை வரும் ஐந்து ஆண்டுகளில் இரு மடங்காக உயர்த்த எடுத்துள்ள முயற்சி, 'ஏர் பின்னது உலகம்' என்ற கருத்திற்கேற்ப, விவசாயிகள் வாழ்வில் ஒளியேற்றும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை. திருந்திய நெல் சாகுபடி, நவீன முறையில் கரும்பு உற்பத்தி, தரமான விதை, உரம், வட்டியில்லாத பயிர்க் கடன், நுண்ணுயிர்ப் பாசனத்திற்கு முன்னுரிமை ஆகிய திட்டங்களை அறிவித்துள்ள மாண்புமிகு தமிழகத்தினுடைய ஒப்பற்ற முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை நன்றியோடு இன்றைக்கு விவசாயிகள் பாராட்டுகிறார்கள்.

வறுமையில் வாடும் குடும்பங்களுக்கு 60,000 கறவை மாடுகள் வழங்குகின்ற அற்புதமான திட்டமும், பால் உற்பத்தி குறைவாக உள்ள கிராமங்களில் 12,000 ஜெர்சி கலப்பின கறவை மாடுகள் வழங்குகின்ற அற்புதமான திட்டமும், விவசாயிகளுக்கு உபதொழிலாக உபரி வருமானத்தைப் பெற்றுத் தரும் என்பதில் ஐயமில்லை.

கிராமப்புற வறுமையை ஒழிக்கின்ற திட்டமாக விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் ஒன்றரை இலட்சம் குடும்பங்களுக்கு தலா 4 ஆடுகள் வழங்குவதாக மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த அரசு அறிவித்துள்ளதை இன்றைக்கு மக்கள் அமோகமாக வரவேற்கின்றார்கள்.

கடல் மீன் உற்பத்தித் திறன் 7 இலட்சம் டன் என்ற இலக்கை எட்ட இயந்திரப் படகுகள் வாங்க மானியத்துடன் நிதியுதவி; நடுக்கடலில் மீன் பதப்படுத்தும் வகையில் தாய்க் கப்பல் அமைத்தல்; கடலோர நகரங்களில் மீன்பிடிப் பூங்காக்கள் அமைத்தல்; மீன்பிடி



இல்லாத காலங்களில் மீனவர் குடும்பத்துக்கு ரூ.4,000 சிறப்பு உதவி; மீன்பிடித் தடை உள்ள காலத்தில் உதவித் தொகையை ரூ.1,000/– லிருந்து ரூ.2,000 ஆக உயர்த்தியது உள்ளிட்ட திட்டங்கள்மூலம் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா ஒருவர்தான் மீனவர்களுடைய நண்பனாக விளங்குகிறார்கள் என்று மக்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

உலக வங்கி உதவியுடன், 'அணைக்கட்டுப் புனரமைப்புத் திட்டம்' அறிவிக்கப்பட்டு, 104 அணைக்கட்டுகளைப் புனரமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அறிவித்துள்ளதையும், நிலத்தடி நீரைப் பாதுகாக்க ரூ.200 கோடி ஒதுக்கியுள்ள மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திட்டத்தையும் தமிழக மக்கள் இன்றைக்கு வரவேற்றுக் கொண்டிருக்கின்றார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள நதிகள் இணைப்பு, வெள்ளத் தடுப்புப் பணிகளுக்கு ரூ.5,166 கோடி ஒதுக்கீடு என்பது போன்ற திட்டங்கள் "வரப்புயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும், நெல் உயர குடி உயரும், குடி உயர கோன் உயர்வான்" என்ற வரிகளுக்கேற்ப பட்டினிச் சாவுகளே இல்லாத மாநிலமாகத் தமிழகம் விளங்கும் என்பதிலே ஐயமில்லை.

பொது விநியோகத்தில் கடந்த ஆட்சியைப்போல அல்லாமல், இன்றைக்குப் பொன்னி அரிசியைப்போல சுத்தமான இலவச அரிசியை ஒரு கோடியே 83 இலட்சம் பேருக்கு வழங்க மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், முதல் ஆணையைப் பிறப்பித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு மானியமாக ரூ.4,500 கோடி அதிகரிப்பு என்பனவற்றை எல்லாம் வறுமை ஒழிப்புத் திட்டங்களாக மக்கள் பார்க்கின்றார்கள். முன்பேர வர்த்தகத்தில் மாற்றம் செய்யக் கோரிக்கை, சமையல் எரிவாயு சிலிண்டர் விலையை மத்திய அரசு ரூ.50 கூட்டியபோதும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மதிப்புக் கூட்டு வரியை இரத்து செய்து, மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்த நடவடிக்கைகள் பெண்கள் மத்தியில் மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளது.

வாகன உதிரிப் பாகங்கள், துணி, தோல் பொருள்கள், தகவல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள் ஆகிய துறைகளில் தமிழகம் சமீப காலங்களில் பின்னடைவைச் சந்தித்து

வருவதைத் தடுத்து நிறுத்தும் வகையில், 9.2 விழுக்காடு தொழில் வளர்ச்சிக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. புதிய தொழில் கொள்கையை உருவாக்க முனைந்திருப்பது தொழில் முனைவோர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

இதற்காக நில உரிமையாளர்களைப் பாதிக்காத வண்ணம் நிலமெடுப்புக் கொள்கை, அரசின் வசம் உள்ள நிலங்களை ஒருங்கிணைத்தல், நில வங்கிகள் உருவாக்குதல், தொழில் பூங்காக்கள் அமைத்தல், தமிழ்நாடு கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் உருவாக்குதல் ஆகிய திட்டங்களால் தமிழகத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமையிலான அரசில் தொழில் மறுமலர்ச்சி ஏற்படும் எனத் தொழில் துறை வல்லுநர்கள் இன்றைக்குக் கருதுகின்றார்கள்.

படித்தும் பயிற்சி இல்லாததால், வேலை கிடைக்காமல் உள்ள இளைஞர்களுக்கு உரிய பயிற்சி அளிக்க 'தமிழ்நாடு திறன் மேம்பாட்டு இயக்கம்' தொடங்கப்பட்டு 1.5 இலட்சம் இளைஞர்களைப் பயிற்றுவிக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அறிவித்துள்ளது. இது இளைஞர்கள் நலனில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசுக்கு உள்ள அக்கறைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

தமிழ்நாட்டில் திறன் மிகுந்த தொழிலாளர்கள் தேவையைக் கருதி, 10 புதிய தொழில் பயிற்சி மையங்கள் தொடங்கப்படுமென்று நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுதவிர உயர் தொழில்நுட்பமான வானூர்தி பராமரிப்பு, கப்பல் துறைப் பயிற்சி, உற்பத்தி சார்ந்த தொழில்கள் ஆகியவற்றுக்காக உலகத் தரம் வாய்ந்த பயிற்சி மையம் தொடங்க மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு அறிவித்துள்ளதை அறிவுசார் இளைஞர்கள் வரவேற்பார்கள் என்பதில் ஐயமில்லை. இத்தகைய தொழில் பயிற்சி மையங்களில் ஒன்றை அனைத்துக் கட்டமைப்பு வசதிகளும் உள்ள எனது பெருந்துறை தொகுதியில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அமைக்க பரிசீலிக்க வேண்டுமென்று பணிவுடன் பாதம் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–15

ரூபாய் 248 கோடியில் 1,000 கிராமங்களில் சூரிய சக்தியில் எரியும் ஒரு இலட்சம் தெரு விளக்குகள் அமைக்கும் மகத்தான திட்டம்; சூரிய சக்தியுடன்கூடிய பசுமை வீடுகள் அமைக்கின்ற



திட்டம்; 50 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட சூரிய ஒளியில் மின்சாரம் தயாரிக்கும் பூங்கா ஆகியவை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்குப் பார்வையால் அறிவித்துள்ள திட்டங்களாக இன்றைக்கு மக்கள் பேசுகின்றார்கள்.

உலக வங்கி உதவியுடன் 2,500 கிலோ மீட்டர் சாலைகளை ரூபாய் 5,000 கோடியில் பராமரித்து மேம்படுத்தும் பணி; ரூபாய் 450 கோடியில் ஒருங்கிணைந்த சுற்றுலா கட்டமைப்புத் திட்டம்; கோயில்களிலே அன்னதானத் திட்டத்தை முழுவேகத்தில் செயல்படுத்துவது, ஒருகால பூஜைக்காக நிரந்தர வைப்புத் தொகையை ரூபாய் ஒரு இலட்சமாக உயர்த்தியது என பல்வேறு திட்டங்களை மக்கள் பயன்பெற மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மாவின் அரசு இன்றைக்கு அறிவித்துள்ளது.

கிராமப்புற மாணவர்கள், நலிவடைந்த மாணவர்கள், தொழில்நுட்பப் புரட்சியின் நன்மை அடையும் வகையில் +1, +2 மாணவ, மாணவியருக்கு நடப்பாண்டில் 9.12 இலட்சம் மடிக்கணினிகள் வழங்குகின்ற மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசின் திட்டம் மாணவர் சமுதாயத்திடம் மகத்தான வரவேற்பைப் பெற்றுள்ளது. இவைதவிர பள்ளியில் இடைநிற்றலைக் குறைக்க +1 மாணவருக்கு ரூபாய் 1,500 உதவித் தொகை, +2 மாணவருக்கு ரூபாய் 2,000 உதவித் தொகை, நடப்பாண்டில் 2 செட் சீருடைகள் வரும் ஆண்டுகளில் 4 செட் சீருடைகள், மாணவருக்கு முழுக்கால் சட்டை, மாணவியருக்கு சல்வார் கமீஸ் என்ற அறிவிப்புகள் நாளைய தலைமுறைபால் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு கொண்டுள்ள அக்கறையை எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

ஒரு நாடு முன்னேறியுள்ளது என்பதனை அந்த நாட்டு மக்கள் எந்த அளவு ஆரோக்கியமாக இருக்கிறார்கள் என்பதை வைத்தே சொல்ல முடியும் என்று அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். அனைவருக்கும் சுகாதாரம் என்ற குறிக்கோளுக்காக மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மாவின் அரசு ரூபாய் 4,761 கோடி ஒதுக்கியுள்ளதை மக்கள் இன்றைக்கு ஏகோபித்து வரவேற்கின்றார்கள். 108 ஆம்புலன்ஸ் சேவையை மருத்துவமனைக்கு இடையிலேயான போக்குவரத்துக்குப் பயன்படுத்துதல், சிறப்பு மருத்துவ ஊர்திமூலம் பழங்குடி மக்கள் வாழும் மலைப்பகுதிகளில் சேவை, நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்துதல் ஆகியவை மக்களின் மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளன.

மாவட்ட மருத்துவமனைகளில் ரூபாய் 55 கோடி செலவில் டயாலிசிஸ் யூனிட், எக்கோ கார்டியோகிராம், டிஜிட்டல் எக்ஸ்ரே, மேமோகிராம், வென்டிலேட்டர், விஷ முறிவுக்கான உயிர்காக்கும் உபகரணங்கள் ஆகியவற்றைக் கூடுதலாக அளிக்கும் அறிவிப்பு, மக்கள் வீட்டிற்கே சென்று மருத்துவம் அளிக்க நடமாடும் மருத்துவமனை, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின்கீழ் உதவியை ரூபாய் 6,000—லிருந்து ரூபாய் 12,000 ஆக உயர்த்தி வழங்குகின்ற உத்தரவு ஆகியவை சாதாரண மக்களிடமும், ஏழைத் தாய்மார்களிடமும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு காட்டும் அக்கறையை எடுத்துக் காட்டுகிறது.

கடந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட உழவர் பாதுகாப்புத் திட்டத்தை மீண்டும் புதுப்பொலிவுடன் செயல்படுத்த ரூபாய் 166 கோடி ஒதுக்கியுள்ளதற்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை அடித்தட்டு விவசாயிகள் நன்றியுடன் நினைத்துப் பார்க்கின்றார்கள்.

இந்திய துணைக் கண்டத்திலேயே எந்த ஒரு அரசும் நினைத்துப் பார்த்திராத திட்டமான வீடற்ற ஏழை மக்களுக்காக 300 சதுர அடியிலே ரூபாய் 1.80 இலட்சம் செலவில் சூரிய ஒளி மூலமாக மின் வசதி பெற்று 60,000 பசுமை வீடுகள் ரூபாய் 1,080 கோடியில் கட்டும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசினுடைய அறிவிப்பு, அம்மாவின் சாதனைத் திட்டமாகத் திகழும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

2011—2012 ஆம் ஆண்டிலே சுத்தமான குடிநீர்த் தேவைக்காக ரூபாய் 844 கோடி ஒதுக்கீடு, குடிசை மாற்று வாரியம்மூலம் ரூபாய் 400 கோடி செலவில் 8,733 குடியிருப்புகள் கட்டுகின்ற அற்புதமான திட்டம், வீட்டு வசதி வாரியம்மூலம் ரூபாய் 340 கோடி செலவிலே 2,427 குடியிருப்புகள் கட்டும் திட்டம் ஆகிய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசினுடைய திட்டங்கள் நடுத்தர மக்களிடம் இன்றைக்கு மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளன.

தாட்கோமூலம் தொழில் துவங்க “கலந்தாலோசனை மையம்” துவங்குதல், தொழில் துவங்க மானியத் தொகை ரூபாய் 7.5 இலட்சமாக உயர்வு, 1,080 ஆதி திராவிட பள்ளி விடுதிகளை



மேம்படுத்த ரூபாய் 80.80 கோடி, ஆதி திராவிட பள்ளி மாணவர்களுக்கு மாத உணவுப் படி ரூபாய் 450/—லிருந்து ரூபாய் 650 ஆக உயர்த்தி வழங்குதல், கல்லூரி மாணவர்களுக்கு ரூபாய் 550/—லிருந்து ரூபாய் 750 ஆக உயர்த்தி வழங்கும் முடிவு, ஆதி திராவிட மாணவர்களுக்கு இலவச மிதிவண்டி வழங்க ரூபாய் 43 கோடி ஒதுக்கீடு, ஆதி திராவிடர் திறன் வளர் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்க ரூபாய் 25 கோடி ஒதுக்கீடு என பல நல்ல திட்டங்களை வரவு—செலவு அறிக்கையில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மாவுடைய அரசு அறிவித்துள்ளது.

இதுதவிர, பழங்குடி மக்களுக்கு வாழ்விடங்களில் குடிநீர் வசதிகளை மேம்படுத்த ரூபாய் 13.9 கோடியும், அழிவின் விளிம்பில் உள்ள பழங்குடிகளின் நலனை மேம்படுத்த ரூபாய் 10.76 கோடியும் ஒதுக்கி மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மாவுடைய அரசு அறிவித்துள்ளது மக்கள் மத்தியில் மாபெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

முற்பகல் 11—20

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோர் நலனில் அக்கறை உள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நீதியரசர் ஜனார்த்தனம் அவர்கள் அளித்த பரிந்துரையை ஏற்று, தற்போது பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு அளிக்கப்பட்டு வரும் 50 சதவீத இட ஒதுக்கீட்டைப் பாதுகாக்கின்ற வகையிலே, 11—7—2011 ஆம் ஆண்டிலே ஆணை வெளியிட்டு, நமது மாநிலத்திலே பின்பற்றப்படும் மொத்த ஒதுக்கீடு 69 சதவீதம் தொடர்ந்து கடைபிடிக்கப்பட வழிவகை செய்துள்ளார்கள். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சமூக நீதி காத்த செயல்பாட்டை நாடு முழுவதும் உள்ள நல்லவர்கள் இன்றைக்கு வரவேற்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

சிறுபான்மையினர் நலன் காக்கும் வகையிலே வக்ஃபு வாரியத்துக்காக வழங்கப்படும் நிருவாக மானியத்தை ரூபாய் 45 இலட்சத்திலிருந்து ஒரு கோடி ரூபாயாக உயர்த்தியதுடன், உலமாக்கள் ஓய்வூதியத்தை ரூ.750/—இலிருந்து ரூ.1000/— ஆக உயர்த்தியதுடன், வக்ஃபு வாரிய சொத்துகளைத் திரும்ப அதன்வசம் கொண்டுவருகின்ற முடிவு இன்றைக்கு எடுக்கப்பட்டுள்ளதை, இசுலாமிய சகோதரர்களும், இசுலாமிய சகோதரிகளும், மாண்புமிகு

முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசினுடைய அறிவிப்பை, இன்றைக்கு ஏகபோகமாக வரவேற்றுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முடங்கிப் போயிருக்கும் தொழிலாளர் நல வாரியத்தைச் சீரமைப்பது, சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின்கீழே ஏழை மக்கள் பெற்று வந்த மாதாந்திர ஓய்வூதியத் தொகை ரூ.500/–இலிருந்து ரூ.1,000/– ஆக உயர்த்தி வழங்குகின்ற உத்தரவு, இன்றைக்கு ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு உதவித் தொகை ரூ.25,000/– உடன் 4 கிராம் தங்கம், அதுவே பட்டதாரிப் பெண்களாக இருந்தால், அவர்கள் திருமணத்துக்கு ரூ.50,000/– உதவித் தொகை என நல்ல திட்டங்களை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அறிவித்ததைப் பார்த்து, 4 கிராம் தங்கம் தந்த அம்மாவே 'எங்கள் தங்கம்' என இன்றைக்கு மக்கள் பாராட்டுகின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எங்களுடைய பெருந்துறை தொகுதியிலே கீழ்க்கண்ட கோரிக்கைகளைக் கனிவோடு பரிசீலித்து நிறைவேற்றித் தருமாறு பணிவோடு பாதங்களில் வைத்து கேட்டுக்கொள்கின்றேன்.

முந்தைய ஆட்சியாளர்கள் சுயநல நோக்கோடு, பூகோள ரீதியாக ஈரோடு மாவட்டத்திலிருந்த ஊத்துக்குளி ஒன்றியத்தை திருப்பூர் மாவட்டத்தில் சேர்த்த காரணத்தினாலே, ஊத்துக்குளி ஒன்றிய மக்கள் அரசு அலுவலகங்களுக்குச் செல்ல பெரும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். தற்போது, ஊத்துக்குளி வட்டார மக்களுக்கு அவினாசி தாலுகா தலைமையிடமாக உள்ளது. கிராம மக்கள் அவினாசி செல்ல மூன்று பேருந்துகள் மாறிச் செல்ல வேண்டிய நிலை உள்ளது. பெருந்துறை தொகுதியில் இருக்கும் ஊத்துக்குளி ஒன்றியத்தை முன்பு இருந்ததுபோல ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டத்திலே சேர்க்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கனிவோடு நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் பணிவோடு தங்களது பாதங்களிலே என்னுடைய கோரிக்கையாக வைத்துக்கொள்கின்றேன்.

குன்னத்தூரில் ஆரம்ப சுகாதார நிலையம் முந்தைய நமது கழக ஆட்சியில் தரம் உயர்த்தப்பட்டது. ஆனால் கடந்த ஆட்சியில் சரிவர கவனிக்காமல் இருந்த குன்னத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பொது மருத்துவமனையாகத் தரம் உயர்த்தி, போதிய மருத்துவர்கள், பணியாளர்களை நியமித்து மருத்துவமனையைச்



சீரமைக்குமாறு மக்கள் இன்றைக்குக் கேட்டுக்கொண்டுள்ளனர். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை நம்பிக்கையோடு மக்கள் பார்த்துக்கொண்டிருக்கின்றார்கள்.

குன்னத்தூரில் 3 மாவட்டங்களின் தலைமை அலுவலகமாக உள்ள கருப்பட்டி உற்பத்தி ஃபெடரேஷனை நலிவுற்ற நிலையிலிருந்து மாற்றி, பனைத் தொழிலாளர்கள் வாழ்வில் ஒளியேற்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆவன செய்து உதவ மாண்புமிகு அம்மா அவர்களின் பாதங்களைத் தொட்டுக் கேட்டுக்கொள்கின்றேன்.

பெருந்துறையிலே போக்குவரத்துத் துறையின் மூலமாக நடைபெறுகின்ற மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலே பல்வேறு நோய் ஆய்வு உபகரணங்கள் தேவை. மேலும் தேவையான அனைத்துத் துறை மருத்துவர்களை நியமித்து மேம்படுத்தி மாண்புமிகு அம்மா அவர்கள் கனிவோடு நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கோரிக்கையைப் பாதங்களிலே வைத்துக் கேட்டுக்கொள்கின்றேன்.

குன்னத்தூர் அல்லது ஊத்துக்குளியிலே அரசு கலைக் கல்லூரி அல்லது அரசு பாலிடெக்னிக் கல்லூரி அமைத்து உதவ ஆவன செய்யுமாறு மாண்புமிகு அம்மா அவர்களுடைய பாதங்களிலே வைத்துக் கேட்டுக்கொள்கிறேன்.

கம்பரது ராமாயணத்தில் அயோத்தி நகரைப் பற்றி குறிப்பிடுகின்றபொழுது, "வன்மை இல்லை, வறுமை இல்லையால்" என்று கூறுவார். அதாவது அயோத்தியில் ஈகை செய்பவர்கள் யாரும் இல்லை. ஏனெனில் அங்கு வறியவர்கள் யாரும் இல்லை என்று குறிப்பிடுவார். அதுபோல மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தொலைநோக்குப் பார்வையுடன் இந்த நிதிநிலை அறிக்கையைத் தமிழக மக்களின் நல்வாழ்வினைக் கருத்தில்கொண்டு இன்றைக்கு வழங்கியுள்ளார்கள்.

தமிழ்க் கடவுளான முருகப்பெருமானின் வாகனம் என இந்துக்கள் நம்பக்கூடிய மயில்களினுடைய எண்ணிக்கை எங்கள் தொகுதியில் அதிகமாகிவிட்ட காரணத்தாலே, விவசாய நிலங்களைப் பாதுகாக்கும்பொருட்டு, எங்கள் பெருந்துறை பகுதியில் மயில்கள் சரணாலயம் அமைக்க மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கனிவோடு பரிசீலிக்க வேண்டுமாய் பணிவோடு பாதங்களைத் தொட்டுக் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்தத் தாய்த் தமிழ்நாட்டை இந்தியாவின் தலைசிறந்த மாநிலமாக உருவாக்கிட, தன்னலம் பாராமல் மெழுகுவர்த்திபோல, நாளொன்றும் 22 மணி நேரம் கண் துஞ்சாது பணியாற்றும்,

'நீங்க நல்லா இருக்கோணும் இந்த நாடு முன்னேற,
தமிழ்நாட்டிலுள்ள ஏழைகளின் வாழ்வு முன்னேற,
இங்கு நல்லவங்க எல்லோரும் உங்க பின்னாலே
அம்மா, நீங்க நினைச்சதெல்லாம் நடக்குதுங்க
கண்ணு முன்னாலே! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புனித ஆட்சியில் நானும் ஒரு தொண்டனாக இருந்து பணியாற்றும் வாய்ப்பு அளித்த காரணத்தாலே, காலத்தால் பெறுவதற்கரிய கன்னிப்பேச்சுக்கு அனுமதியளித்த மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து, வணங்கி, மகிழ்ந்து எனது உரையை விசுவாசம் கலந்த நன்றியுடன் நிறைவு செய்கின்றேன். வணக்கம்.

முற்பகல் 11–25

## 4. அறிவிப்பு

### பேரவை நிகழ்ச்சி நிரல், வினாக்கள் பட்டியல் உள்ளிட்ட பேரவைச் செயலக ஆவணங்கள் உறுப்பினர்களின் பிரத்தியேக மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப் பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ஏற்கெனவே பிரத்தியேகமாக மின்னஞ்சல் முகவரியும் (E-mail address) இரகசியக் குறியீடும் (Password) வழங்கப்பட்டுள்ளன. இவற்றினை உறுப்பினர்கள் உபயோகப்படுத்தி இனி தங்களுக்கு வரும் மின்னஞ்சல்களைப் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம்.

மேலும், முதன்முறையாக, சட்டமன்றப் பேரவைச் செயலகத்திலிருந்து அனுப்பப்படும் நிகழ்ச்சி நிரல், வினாக்கள், கடிதங்கள், செய்தித் தாள்கள் உள்ளிட்ட அனைத்துக் கடிதப் போக்குவரத்துகளும் இனி மின்னஞ்சல்மூலம் ஒவ்வொரு உறுப்பினருக்கும் அனுப்பி வைக்கப்படும். உறுப்பினர்கள் அனைவரும்



இந்த வசதியைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே உள்ள நடைமுறைப்படி, இச்செயலகத்திலிருந்து அனுப்பப்படும் நிகழ்ச்சி நிரல் உள்பட அனைத்துக் கடிதங்களும், தகவல்களும் தபால் மூலமும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2011–2012, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார்.

**திரு. டி. சுரேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் என் இதய தெய்வம் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, பேரவை உறுப்பினர்களே, உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது கன்னிப் பேச்சைத் தொடங்கும் முன்னால் மரியாதைக்குரிய என் இதய தெய்வம், வாழ்வின் வழிகாட்டி, எங்கள் குடும்பத்தின் குலவிளக்கு, கேப்டன் அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) திருவண்ணாமலையிலே சாதாரண விவசாயக் குடும்பத்திலே பிறந்த என்னை, எங்கள் அமைப்பு, மன்றங்களாக இருந்தபோது, நகரத் தலைவராக்கி, பிறகு என்னை மாவட்டத் தலைவராக 15 ஆண்டுகளாகச் செயலாற்ற வைத்து, பிறகு தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் துணைச் செயலாளராக ஆக்கி, இந்த மாபெரும் அவையிலே என்னை சட்டமன்ற உறுப்பினராக்கி, பேசுவதற்கு வாய்ப்பளித்து அழகுபார்க்கும் தேசிய முற்போக்கு திராவிட கழகத்தினுடைய தலைவர் அவர்களே, என் வாழ்வின் ஒளி விளக்கே, உங்கள் பொற்பாதங்களைத் தொட்டு எனது கோடானுகோடி வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

என் கன்னிப் பேச்சைத் தொடங்குவதற்கு முன்னாலே, காவல் துறை சிறப்புப் பிரிவு உருவாக்கப்பட்டு இந்த ஆண்டு மே திங்கள் முதல் 24,099 புகார்கள் பெறப்பட்டு, நில ஆக்கிரமிப்பில் ஈடுபட்டவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுத்த திட்டத்தை வரவேற்கின்றேன்.

பள்ளிக் கல்வியில் அனைத்துப் பள்ளிக் குழந்தைகளை தொடக்கப் பள்ளிகளிலும், இடைநிலைப் பள்ளிகளிலும் சேர்த்து, தரமான கல்வியை வழங்கும் திட்டத்தை வரவேற்கின்றேன்.

விவசாயக் கூலித் தொழிலாளர்கள் குடும்பங்களுக்குத் தலா 4 வெள்ளாடுகளும் அல்லது 4 செம்மறி ஆடுகளும், மாடுகளும் வழங்கும் திட்டத்தை வரவேற்கின்றேன்.

உணவு தானிய உற்பத்தியில் 2011–2012 ஆம் ஆண்டில் 115 இலட்சம் மெட்ரிக் டன் என்ற உயர் இலக்கை அடையும் திட்டத்தை வரவேற்கின்றேன். நுண்ணீர்ப் பாசன இயக்கத்தின்கீழ் 87,500 ஏக்கர் பரப்பும், தமிழ்நாடு நீர்வள–நிலவள திட்டத்தின்கீழ் 37,500 ஏக்கர் பரப்பும், ஆக மொத்தம் 1,25,000 ஏக்கர் பரப்பு நுண்ணீர்ப் பாசன முறை வழங்கும் திட்டத்தை வரவேற்கின்றேன்.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின்மூலம் சேமிப்புகள் செய்ய வசதி வாய்ப்புகள் ஏற்படுத்தியதையும், அதிக அடமானக் கடன் வழங்கும் திட்டத்தையும் வரவேற்கின்றேன். கால்நடைகளுக்காக 115 நடமாடும் கால்நடை மருத்துவ மையங்களை ஏற்படுத்தும் திட்டத்தை வரவேற்கின்றேன்.

ஆதி திராவிடர் நலன் கருதி, 2011–2012 ஆம் ஆண்டில் சிறப்பு உட்கூறுத் திட்டத்தில் 5,500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள திட்டத்தை வரவேற்கின்றேன். ஆதி திராவிட மாணவர்களுக்குத் தற்போது வழங்கப்படும் மாத உணவுப் படி 450 ரூபாயிலிருந்து 650 ரூபாயாக உயர்த்தப்பட்டு இருப்பதை வரவேற்கின்றேன்.

முதியோர் மற்றும் ஆதரவற்றோர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை மாதம் 500 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாக உயர்த்தப்பட்டதை வரவேற்கின்றேன்.

முற்பகல் 11–30

திருமண உதவித் திட்டத்தின்கீழ் தாலிக்கு 4 கிராம் தங்கம் என்று சொன்ன அருமையான திட்டத்தை வரவேற்கின்றேன். மற்றும் என்னுடைய தொகுதியிலே வாழும் அனைத்து வாக்காளப் மக்களுக்கும் என்னை வெற்றி பெறச்செய்த அன்பு நெஞ்சங்களுக்கும்,



கூட்டணிக் கட்சியைச் சார்ந்தவர்களுக்கும் எனது கோடானுகோடி நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களின் பார்வைக்கு ஒன்றை வைக்க விரும்புகிறேன். செங்கம் தொகுதி விவசாய, மலைவாழ் மக்கள் வசிக்கும் பகுதி. இங்கு தண்ணீர் பிரச்சினை உள்ளது. ஜவ்வாது மலையில் வசிக்கும் மக்களுக்கு சாலை வசதி இல்லை; உடல்நிலை சரியில்லையென்றால், 10 கி.மீ. தூரம் வரை ஒருவரை சுமந்துதான் செல்லவேண்டும். செங்கம் வட்டம் காந்தி நகர், தீத்தண்டம்பட்டு கிராமத்தில் ஆற்றின் குறுக்கே பாலம் அமைத்திட வேண்டும். மழை வந்தால் பள்ளி மாணவர்களும், பொது மக்களும் கழுத்தளவு தண்ணீரிலேதான் நடந்து செல்லவேண்டியுள்ளது. பரமனந்தல் எம்.ஜி.ஆர் நகர், தீபம் நகர், திருவள்ளுவர் நகர் அங்கேயும் இதே நிலை உள்ளது. அங்கும் பாலம் அமைத்திட வேண்டுகிறேன். ஜவ்வாதுமலை வாழ் மக்களுக்கு அங்கே விளையும் வாசனை திரவியங்களையும், பழ வகைகளையும், பிற பொருட்களையும் மாவட்ட அளவிலே விற்பனை செய்ய குளிரூட்டும் நிலையம் அமைத்திட ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கின்றேன். வலசை கிராமத்தில் பாலம் அமைத்திட ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

காலம் காலமாக மலைவாழ் மக்களாக வசிக்கும் லம்பாடி இன மக்களுக்குச் சாதிச் சான்றிதழ் வழங்கிட ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன். செங்கம் பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்ய ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன். செங்கத்தில் ஹவுசிங் போர்டு மூலமாக சுமார் 100 வீடுகள் கட்டி பராமரிப்பு இல்லாமல், அந்த வீடுகள் மோசமான சூழ்நிலையில் இருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முந்தைய அரசால் போக்குவரத்துத் துறையின் சார்பாக டெப்போ அமைத்திட அடிக்கல் நாட்டப்பட்டது. ஆனால், அது கிடப்பில் போடப்பட்டுவிட்டது. அங்கு டெப்போ அமைத்திட ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தண்டராம்பட்டில் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பராமரிப்பு இல்லாததோடு, மருந்துகளும் இல்லை. இதைச் சீர்செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மலைமஞ்சனூர் கிராமத்தில் 8 ஆம் வகுப்பு வரையுள்ள நடுநிலைப் பள்ளியை 10 ஆம் வகுப்பு வரையுள்ள உயர்நிலைப் பள்ளியாக மாற்றிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இராயண்டபுரம் கிராமப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தவேண்டும். இதற்காக கிராமப் பஞ்சாயத்துமூலம் ரூபாய் 2 இலட்சம் செலுத்தப்பட்டிருக்கிறது, அதைத் தரம் உயர்த்திடத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். தென்மடியனூர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டிக்கொள்கின்றேன். மலைமஞ்சனூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் முந்தைய ஆட்சியில் சீர்கெட்ட நிலையில் இருந்தது. இப்போது அதைத் தரம் உயர்த்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

நாராயணங்குப்பம் கிராமத்தில் மலைமஞ்சனூர் செல்லும் பகுதியில் ஒரு மேம்பாலம் அமைத்திட ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன். செங்கம் தொகுதியில் பொது மருத்துவமனையில் 40 ஆண்டுகளுக்கு முன் வழங்கப்பட்ட ஆம்புலன்ஸ் வாகனம் பழுதடைந்த நிலையில் இருக்கிறது. தற்போது அங்கே ஒரு ஆம்புலன்ஸ் வாகனம் வழங்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

செங்கத்திலிருந்து திருவண்ணாமலைக்கு சுமார் 35 கி.மீ. என்பதால் ஜி.எச்–ல் பாம்பு கடி, நாய் கடி என அவசர உதவி கோரி மக்கள் வரும்போது, மருந்து இல்லாத நிலை உள்ளது. அதனைத் தரம் உயர்த்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

செங்கம் தொகுதி விவசாயம் சார்ந்த பகுதியில் இருப்பதால், அங்கே ஒரு வேளாண்மைக் கல்லூரி அமைத்திடுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

மேல்செங்கம் பகுதியில் 11 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் மத்திய அரசு பண்ணை அமைத்து நெல் வகை, பழ வகை, செடி வகைகளை உற்பத்தி செய்து வந்தது. அதை மத்திய அரசு மாநில அரசுக்குக் கொடுத்துவிட்டது. 1971 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 2005 ஆம் ஆண்டுக்குப் பிறகு செயல்படாமல் உள்ளது. தற்போது மீண்டும் மாநில அரசு அதைச் செயல்படச் செய்தால், சுமார் 10 கிராம மக்கள் பயன் அடைவார்கள். தற்போது நீலகிரி மரங்களை வைத்திருக்கின்றார்கள். நீலகிரி மரங்கள் நடுவதால் நீர்வளம் குறைந்துவிடும். மீண்டும் அங்கே பண்ணை அமைத்திட ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கின்றேன்.



கடந்த ஆட்சியில் 75 ஆயிரம் ரூபாயில் வீடு கட்டும் திட்டம் என்று சொல்லி, இருந்த வீட்டையும் இடித்து முடித்து, இன்று வீடு கட்டி, வீட்டுக்கு தளம் போடமுடியாத நிலையில் மக்கள் அவதிப்படுகின்றார்கள். எனவே, அரசு அந்தக் குடும்பங்களுக்கு உதவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேற்கண்ட கோரிக்கைகளை மாண்புமிகு பேரவைத் தலைவர் மற்றும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் பார்வைக்குக் கொண்டுவருகின்றேன். இங்கே எனக்குப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி, நன்றி என்று கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 11–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. மோகன்.

**திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011–2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது பேச எனக்கு வாய்ப்பளித்த கோடானுகோடி தமிழக மக்களின் நெஞ்சங்களில் குடியிருக்கும் எங்கள் தாயே, தமிழகத்தில் புதிய வரலாறு படைத்த எங்கள் அன்னையே,

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்று ஆய்ந்து
அதனை அவன்கண் விடல்."

என்ற வள்ளுவனின் வாக்கிற்கிணங்கவும், "வெற்றி மீது வெற்றி வந்து என்னைச் சேரும்" என்ற பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவரின் வைர வரிகளுக்குப் பட்டை தீட்டுவது போலவும், தமிழகத்தின் வாக்காளப் பெருமக்கள் நடந்து முடிந்த சட்டமன்றப் பேரவைத் தேர்தலில் அலை கடலெனத் திரண்டு வந்து மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை மூன்றாவது முறையாக அரியணை ஏற்றி (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலே ஒப்படைத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் இயக்கத்திற்கு மக்கள் பெருவாரியாக வாக்களித்ததன்மூலம், மைனாரிட்டி தி.மு.க.வின் ஊழலாட்சி ஊரை விட்டே விரட்டப்பட்டுவிட்டது. குடும்ப ஆதிக்கத்தின் கொட்டம் கொலை நடுங்க ஒடுங்கிவிட்டது. குடும்ப வாரிசுக்குப் பதவி கேட்டு டெல்லிக்குப் போனவர்கள், இப்பொழுதும்

டெல்லிக்குப் போய்க் கொண்டுதான் இருக்கிறார்கள். எதற்காக? திஹார் சிறையைப் பார்வையிடுவதற்காக. தி.மு.க. இப்பொழுது திஹார் முன்னேற்றக் கழகமாக மாறிக் கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரண விவசாயக் குடும்பத்திலே பிறந்த என்னை, இரண்டாவது முறையாக இந்தப் பொறுப்புள்ள சட்டமன்றப் பேரவையினுடைய உறுப்பினராக ஆக்கி, அரசு தலைமைக் கொறடாவாகவும், கழகத்தினுடைய மாவட்டச் செயலாளராகவும் நியமித்து, என் வாழ்வில் ஒளியேற்றிக் கொண்டிருக்கும் இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து, என்னுடைய வணக்கத்தைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பொறுப்பான இந்த மாமன்றத்திலே பேசுகிற நல்லதொரு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த சங்கராபுரம் சட்டமன்றப் பேரவைத் தொகுதியினுடைய வாக்காளப் பெருமக்களுக்கும், என்னுடைய வெற்றிக்காக உழைத்திட்ட கழக முன்னோடிகளுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையானது, கடந்த கால மைனாரிட்டி ஆட்சியாளர்கள் கஜானாவைக் காலி செய்துவிட்டு களஞ்சியத்திலே சாதனை செய்துள்ளதாகக் கூறி, சோதனைகளை உருவாக்கிச் சென்றுள்ளதன் மத்தியில், மக்களின் மனநிலைக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட, பாராட்டுக்குரிய, உன்னதமான நிதிநிலை அறிக்கை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையை முழுமையாகப் பாராட்டுவதோடு, அதிலே இருக்கிற பல்வேறு உணர்வுகளையும் நான் இந்த நேரத்திலே பகிர்ந்துகொள்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

'பணம் பாதாளம் வரை பாயும்' என்ற பழமொழியையே உடைத்தெறிந்து, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாகப் பதவியேற்றவுடன், பல்வேறு திட்டங்களை, முதலாவதாக 7 திட்டங்களை அறிவித்தார்கள். அந்தத் திட்டத்தினுடைய அடிப்படையைத்தான் அன்று பேரறிஞர் அண்ணா அவர்களும் விரும்பினார்கள். தமிழ்நாட்டில் மிகப் பெரிய அரிசிப் புரட்சியை ஏற்படுத்தி இந்த



நாட்டினுடைய ஏழைகளுக்கு நன்மை செய்திட வேண்டுமென்று பேரறிஞர் அண்ணா அவர்கள்கூட விரும்பினார்கள். படி அரிசித் திட்டத்தை துவக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் அதை முழுமையாக நிறைவேற்ற முடியவில்லை. ஆனால் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தன்னுடைய பொது விநியோகத் திட்டத்தின் மூலமாக ஒரு கோடியே 83 இலட்சம் குடும்பத்திற்கு இலவசமாக அரிசியைத் தருகிற ஒரு மகத்தான திட்டத்தை தமிழ்நாட்டிலே தோற்றுவித்தார்கள்.

அதேபோன்று 23.9 இலட்சம் வயது முதிர்ந்தோருக்கும், ஆதரவற்றோருக்கும் அவர்கள் சமுதாயப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் பெற்று வந்த மாத ஓய்வுத் தொகையை 500 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாக உயர்த்தியும், ஏழைப் பெண்களின் திருமணத்திற்காக 25 ஆயிரம் ரூபாயுடன் 4 கிராம் தங்கத்தையும், பட்டபட்டயப் படிப்பு முடித்திருப்பின், ஐம்பதாயிரம் ரூபாய் உதவித் தொகையையும் தருகிற திட்டத்தை, பெண்களுடைய முன்னேற்றத்திற்காக தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் எண்ணிய எண்ணங்களுக்கு ஏற்ப, பெண்களுக்கு ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்திட வேண்டும்; சுய உணர்வுகளை ஏற்படுத்திட வேண்டும் என்பதற்காக நம்முடைய தாய், தலைவி ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள்.

முற்பகல் 11—40

அதேபோன்று மீனவச் சமுதாயத்திற்காக மீன்பிடித் தடைக் காலத்தில் மீனவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர உதவித் தொகையை ரூ.1,000/—லிருந்து ரூ.2,000/— ஆக உயர்த்தியும், மீன்பிடி அல்லாத காலங்களில் மீனவக் குடும்பங்களுக்கு 4,000 ரூபாய் சிறப்புத் தொகை வழங்கப்படும் என்றும் அறிவித்து மீனவ மக்களுக்கு மிகப் பெரிய திட்டங்களை மீனவ நண்பனாக இந்த அரசு, அம்மாவினுடைய அரசு, சிறப்பாகத் தீட்டிக் கொண்டிருக்கிறது. இந்தத் திட்டங்கள் எல்லாம் சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்பதற்காக, சிறப்புத் திட்டங்கள் அமலாக்கத் துறை என்ற ஒரு துறையை அரசு உருவாக்கியுள்ளது. அரசின் நலத் திட்டங்கள் விரைவில் மக்களைச் சென்றடைய எடுத்த முயற்சியாகத்தான் சிறப்புத் திட்டங்கள் அமலாக்கத் துறை என்ற ஒரு மகத்தானத் துறையை இந்த அரசு, அம்மாவினுடைய அரசு உருவாக்கி, செயலாற்றிக் காட்டி இருக்கிறது. இப்படிப்பட்ட துறை, இந்தியத் துணைக் கண்டத்திலே வேறு எந்த மாநிலத்திலேயும் இல்லை என்பதையும் நான் இந்த நேரத்தில் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மத்திய அரசாங்கம் சமையல் எரிவாயு சிலிண்டர் விலையை 50 ரூபாய் உயர்த்தினாலும்கூட, இந்த நாட்டு மக்களுடைய நன்மையைக் கருதி மிகப் பெரிய அளவிலே அதனுடைய விற்பனை விலையைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன், அதன்மீதான மதிப்புக் கூட்டு வரியை மாநில அரசு 1–7–2011 முதல் அறவே இரத்து செய்திருப்பதை, தாய்மார்கள் மிகச் சிறப்பாக வரவேற்றிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியிலே 1992 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட தொட்டில் குழந்தைத் திட்டம், பெண் சிசுக் கொலையைக் கட்டுப்படுத்த உதவியது. அன்னை தெரசாவால் பாராட்டப்பட்ட அத்திட்டம், இன்றைக்கு மிகச் சிறந்த திட்டமாக, அமெரிக்க நாட்டினுடைய உயர் அதிகாரிகள் எல்லாம் அந்தத் திட்டத்தைப் பார்க்கக்கூடிய வகையில், அந்தத் திட்டத்தை அமெரிக்க நாட்டிலே எப்படிச் செயலாற்றலாம் என்று எண்ணுகிறவகையில், ஒரு நிலைப்பாட்டை ஏற்படுத்தியுள்ளது அந்தத் திட்டம். அம்மா அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட திட்டம் என்பதனாலேயே, கடந்த ஆட்சியாளர்களால் அந்தத் திட்டம் கிடப்பிலே போடப்பட்டு, இப்போது நமது அரசு பொறுப்பேற்றவுடன் மீண்டும் அந்தத் திட்டம் புனரமைக்கப்பட்டு, முதலமைச்சர் பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ஒரு பெண் குழந்தைக்கான வைப்புத் தொகையை ஐம்பதாயிரம் ரூபாயாகவும், இரண்டு பெண் குழந்தைகள் இருந்தால், வைப்புத் தொகையை இருபத்தைந்தாயிரம் ரூபாயாகவும் உயர்த்தி வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்களைப் பெண் குழந்தையைப் பெற்ற பெற்றோர்கள் எல்லாம் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

மேலும், தேர்தல் அறிக்கையிலே அறிவித்தபடி, பெண்களுக்கு மின் விசிறியும், மிக்சி, கிரைண்டர் போன்ற உபகரணங்களையும் இலவசமாகத் தருகிற இந்தத் திட்டம் தமிழ்நாட்டு மக்களிடம் மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றிருக்கிறது என்பதை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். அதேபோன்று, பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் ஆகியோர் ஒவ்வொரு வீட்டிற்கும் அரசுமூலம் நன்மைகள் கிடைத்திட வேண்டும் என்று விரும்பிய அந்த எண்ணங்களின் அடிப்படையில்தான், கிராமப்புறத்திலே இருக்கிற வீடற்ற ஏழை எளிய மக்களுக்குப் பயன்தரும் வகையில், 60,000 பசுமை வீடுகளை நடப்பாண்டிலே கட்டித்தருகிற வகையில், 1,080 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து அம்மா அவர்கள் கிராமப்புற





ஏழை எளிய மக்களுக்கு மிகப் பெரிய சாதனையைப் படைத்திருக்கிறார்கள். அரசுப் பள்ளிகள் மட்டும் அல்லாது; அரசு உதவிபெறும் பள்ளிகளில் பதினொன்று, பன்னிரண்டாம் வகுப்பில் பயிலுகின்ற மாணவ, மாணவிகள் அனைவருக்கும் இலவசமாக மடிக் கணினி வழங்குகிற அற்புதமான திட்டத்தை நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு நடைமுறைப்படுத்த இருக்கிறார்கள்.

முற்பகல் 11–45

இதேபோன்று, மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களிடையே உள்ள இடைநிற்றலைத் தவிர்க்கும் பொருட்டு, அரசுப் பள்ளிகளிலே படிக்கக்கூடிய பத்தாம் வகுப்பு, மேல்நிலை முதலாம் ஆண்டு பயிலும் மாணவ, மாணவியர்களுக்குத் தலா 1,500 ரூபாயும், மேல்நிலை இரண்டாம் ஆண்டு பயிலும் மாணவ, மாணவியர்களுக்குத் தலா 2,000 ரூபாயும், சிறப்புத் தொகையாக அளித்து, இந்தத் தொகை வைப்பு நிதியாக வைக்கப்பட்டு, மாணவ, மாணவியர் பள்ளிப் படிப்பை முடித்தவுடன், அவர்கள் வெளியே செல்லும்போது அவர்களுக்குத் தரப்படும் என்று அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

அதேபோன்று, கால்நடை வளர்ப்புக்கு முக்கியத்துவத்தை அளித்து வருகின்ற அம்மாவினுடைய அரசு, பால் உற்பத்தியில் இரண்டாவது வெண்மைப் புரட்சியை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது. அடுத்த ஐந்து ஆண்டுகளில் வறுமையில் வாடும் குடும்பங்களுக்கு 60,000 கறவை மாடுகள் இலவசமாக வழங்கப்படும் என்கிற அந்த மகத்தான திட்டத்தை இன்றைக்குக் கிராமப்புறங்களில் இருக்கின்ற ஏழை, எளியவர்கள் மிகுந்த சிறப்போடு வரவேற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோன்று, இந்த நிதியாண்டில் ஒரு இலட்சம் கூலித் தொழிலாளர் குடும்பங்களுக்கு இலவசமாக நான்கு வெள்ளாடுகள் அல்லது செம்மறி ஆடுகள் வழங்குகின்ற திட்டமும் கிராமப்புறங்களிலே சிறப்பான வரவேற்பைப் பெற்றிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் தமிழ்நாட்டில் மின்சாரம் எந்த நிலையிலே இருந்தது என்பதை நீங்கள் எண்ணிப் பார்த்திட வேண்டும். மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கடந்த ஐந்தாண்டுகளிலே தமிழகத்திலே எப்படிப்பட்ட மின் பற்றாக்குறை இருந்தது என்பதை நீங்கள் எண்ணிப்பார்த்திட

வேண்டும். கடந்த ஐந்தாண்டுகளில் கூடுதல் மின் உற்பத்தி வெறும் 206 மெகாவாட் மட்டுமே. இதன்மூலம் தமிழகத்தில் கடந்த ஐந்தாண்டுகளில் மின்வெட்டு மிக மோசமான ஒரு சூழ்நிலையை அடைந்தது என்பதையும், அதே நேரத்தில் விவசாயப் பெருங்குடி மக்களோடு, தொழிற்சாலைகளும் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டன என்பதையும் இந்த நாடே மிக, மிக நன்றாக அறியும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்றவுடன், படிப்படியாக மின்வெட்டு குறைக்கப்படும் என்று அறிவித்தார்கள். கடந்த தி.மு.க. ஆட்சியில் ஊரகப் பகுதிகளில் மூன்று மணி நேரம் மின்வெட்டு அமல்படுத்தப்பட்டது. அம்மா அவர்களுடைய ஆட்சியில், 1–7–2011 முதல் மூன்று மணி நேரமாக இருந்த மின்வெட்டை இரண்டு மணி நேரமாக அரசு குறைத்தது (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மிகப்பெரிய வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது. அதே நேரத்தில் 2012 ஆகஸ்டு மாதத்திற்குள் மாநிலம் முழுவதும் மின்வெட்டு முற்றிலுமாக நீக்கப்படும் என்று அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்ற மிகப் பெரிய அந்த அறிவிப்பை, விவசாயப் பெருங்குடி மக்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று, மருத்துவ வசதி உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை இந்த நாட்டினருக்கு அறிமுகப்படுத்திக் கொண்டிருக்கின்ற அம்மா அவர்களுடைய ஆட்சியில், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நினைவுத் திட்டத்தின்கீழ், இரண்டு மகப்பேறுவரை வழங்கப்படும் உதவித் தொகையை 6,000 ரூபாயிலிருந்து 12,000 ரூபாயாக உயர்த்தித் தந்த அம்மா அவர்களை (மேசையைத் தட்டும் ஒலி) நாட்டு மக்களும், தாய்மார்களும் வரவேற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

அது மாத்திரம் அல்ல; ஆதி திராவிட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட பள்ளி மாணவர்களுக்கு தற்போது வழங்கப்படுகின்ற உணவுப் படி போதாது என்பதற்காக, அவர்களுக்குச் சீரிய உணவு தந்திட வேண்டும் என்ற நல்ல உணர்வோடு, தாயுணர்வோடு 450 ரூபாயாக இருந்த அப்படியை 650 ரூபாயாக உயர்த்தியும், கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படும் மாத உணவுப் படியை 550 ரூபாயிலிருந்து 750 ரூபாயாக உயர்த்தியும் வழங்கிய நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) மாணவர்கள் பெருத்த வரவேற்பளித்து, நன்றி உடையவர்களாக இருந்துகொண்டிருக்கிறார்கள்.



நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சென்னை மாநகர் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் தேங்கியுள்ள குப்பைகளையும், அசுத்தமான நீரையும் அகற்ற ஒரு சிறப்புத் தூய்மைப்படுத்தும் திட்டம், “Mass Cleaning Programme” என்ற வகையில், மக்களை நலமோடு வாழச்செய்யும் திட்டத்தை நேற்று முன்தினம் இந்த நாட்டு மக்களுக்கு அறிவித்துள்ளார்கள்.

அதேபோன்று, மைனாரிட்டி தி.மு.க.வின் தனியார் தொலைக்காட்சியின் ஏகபோக ஆதிக்கத்தைத் தடுக்கும்பொருட்டு, அரசு கம்பிவடத் தொலைக்காட்சிக் கழகத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தி, மக்களுக்குத் தொலைக்காட்சியின் சேவை சிறப்பாகக் கிடைத்திட வழிவகை செய்துள்ள மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இந்த நாட்டு மக்கள், ஏழையெளியவர்கள் நன்றியைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 11–50

அதேபோன்று, எதுவாக இருந்தாலும் தமிழர்களினுடைய நலனிலே, தான் மட்டுமே அக்கறை கொண்டதாக முன்னாள் முதலமைச்சராக இருந்த ஒருவர் சொல்லிக்கொண்டிருந்த நிலைமைகளையெல்லாம் மாற்றி, இலங்கைத் தமிழர்களுக்காகக் குரல்கொடுத்த தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

இதே அவையிலேதான் எப்படிப்பட்ட சூழல்கள் எல்லாம் நடந்தன என்பதையும் நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். இலங்கைத் தமிழர்களுக்காக, தமிழனுக்காகப் போராடுகிறேன் என்று சொல்லுகிறவர், எதைச் செய்தார் என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். அதற்கு மாறாக இந்த நேரத்தில், இலங்கைப் பிரச்சினைக்காக இதே மன்றத்திலே எப்படிப்பட்ட தீர்மானத்தை அனைத்து எதிர்க்கட்சிகள் எல்லாம், தோழமைக் கட்சிகளெல்லாம் பாராட்டக்கூடிய வகையில் இலங்கையினுடைய பொருளாதாரத்தை தடை செய்ய வேண்டுமென்கின்ற ஒரு மகத்தான தீர்மானத்தைக் கொண்டுவந்த ஓர் உன்னதத் தலைவிதான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் தமிழர்களுடைய உயர்ந்த தலைவி என்பதையும், சர்வதேச அளவில் இன்றைக்கு உலக மகா தலைவியாக நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உயர்ந்திருக்கிறார்கள் என்பதையும்

நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அப்படிப்பட்ட நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இலங்கைத் தமிழ் அகதிகளில் குடும்பத் தலைவர்களுக்கு மாத உதவித் தொகையை ஆயிரம் ரூபாயாக உயர்த்தித் தந்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே பணிவன்போடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சட்டமன்றப் பேரவையினுடைய உறுப்பினர்கள் சிறப்பாகச் செயலாற்றிட வேண்டுமென்பதற்காக, தொகுதி மேம்பாட்டு நிதியை இரண்டு கோடி ரூபாயாக உயர்த்தி மிகச் சிறந்த பணியைச் செய்த அம்மா அவர்களுக்கு அத்துணை சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாகவும் நன்றியைப் பணிவன்போடு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சாலைப் பாதுகாப்பிற்கும், விபத்துகளைக் குறைப்பதற்கும் சாலை விபத்துத் தகவல் கண்காணிப்புத் திட்டத்தை (Road Accident Data Monitoring System) கணினிப் பயன்பாட்டின்மூலம் நடைமுறைப்படுத்த திருத்திய நிதிநிலை அறிக்கையில் 40 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து, வருங்காலத்தில் சாலை விபத்துகளைக் குறைப்பதற்கு வழிசெய்யும் ஓர் அற்புதத் திட்டத்தை நம்முடைய அற்புதத் தலைவி நமக்கு வழங்கியிருக்கிறார்கள்.

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்படும் நிதியானது, கடந்த ஆண்டின் ஒதுக்கீட்டு அளவான 197 கோடி ரூபாயிலிருந்து நடப்பாண்டிற்கு 467 கோடி ரூபாயாக உயர்த்தியும், (மேசையைத் தட்டும் ஒலி) தேசிய தோட்டக் கலை இயக்கத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியை 91.18 கோடி ரூபாயிலிருந்து நடப்பாண்டிற்கு 145 கோடியாக உயர்த்தியும் அறிவித்து, விவசாயிகள் அத்துணை பேர்களின் வயிற்றில் பால் வார்த்ததைப் போன்ற ஒரு நல்ல செய்தியை மாண்புமிகு அம்மா அவர்கள் தந்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று, மாண்புமிகு அம்மா அவர்களினுடைய அரசு, நீர்ப்பாசனத்தைப் பெருக்குவதற்கும், வெள்ளத் தடுப்புப் பணிகளுக்கும் உலக வங்கி உதவியுடன் அணைக்கட்டுப் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம் என்ற திட்டத்தை நடப்பாண்டு முதல் 6 ஆண்டுகளில் 745.49 கோடி ரூபாய்ச் செலவில் 104 அணைக் கட்டுகள் புனரமைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். இவ்வாண்டில் மட்டும் 18 அணைக்கட்டுகள் புனரமைக்கப்படும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.



அதேபோன்று, சிறுபான்மை மக்களுக்காக தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தின் நிர்வாகத்திற்கு மானியத் தொகையை ஒரு கோடி ரூபாயாக உயர்த்தித் தந்ததும், உலமாக்களுக்கான மாதாந்திர ஓய்வூதியத்தை 750 ரூபாயிலிருந்து ஆயிரம் ரூபாயாக உயர்த்தித் தந்ததும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மகத்தான செயல்பாடு என்பதை நான் இந்த நேரத்திலே பணிவன்போடு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

நாம் இந்த நேரத்திலே பல்வேறு பாராட்டுகளையெல்லாம், பல்வேறு உணர்வுகளையெல்லாம் வெளிப்படுத்தி, இந்த மாமன்றத்தினுடைய உறுப்பினர்களெல்லாம், புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பாராட்டி பேசிக் கொண்டிருக்கிறோம். ஆனால், இந்த அவையிலே முன்னாள் முதலமைச்சராக இருந்த கருணாநிதி அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களை வசைபாட வேண்டுமென்கிற நோக்கத்தோடே, பல்வேறு செய்திகளையெல்லாம் இன்றைக்கு நாட்டு மக்கள் முன்னாலே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 11–55

நான் இந்த நேரத்திலே ஒன்றைப் பணிவன்போடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அவையிலே நடந்த விஷயங்களை நான் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்கு கருணாநிதி அவர்கள் மனித நேயத்தைப் பற்றிப் பேசுகிறார்கள். இன்றைக்கு முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் “என்ன நிலைப்பாடு” என்றெல்லாம் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இந்த அவையிலேதான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்மீது எப்படிப்பட்ட வசைகள் எல்லாம் பாடப்பட்டன என்பதையும், இதே அவையிலேதான் அவர்கள் எப்படி அசிங்கப்படுத்தப்பட்டார்கள் என்பதையும், 1989–ல் இதே மாமன்றத்தில் எப்படிப்பட்ட நிகழ்வுகள் ஏற்பட்டன என்பதையும் நான் இந்த நேரத்திலே நினைத்துப்பார்த்து, அந்த தங்கத் தலைவிமீது அன்றைக்குச் சிறப்பாக இந்த நாட்டுமக்கள் நம்பிக்கை வைத்த காரணத்தால், அவர்கள் சிறப்பாகச் செயலாற்றிய காரணத்தால், அன்றைக்கு அப்படிச் செய்தவர்கள் எல்லாம் இன்றைக்கு ஓடோடி ஒளிந்து, இன்றைக்கு இந்த அவைக்கே வரமுடியாமல் பார்த்துக் கொண்டிருக்கிற நிலையை, தமிழ்நாட்டு மக்கள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே பணிவன்போடு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல; இன்றைக்கு அம்மா அவர்கள்மீது வக்கணம் பேசிக்கொண்டிருக்கிறவர்களுக்கு, நான் இந்த நேரத்திலே சொல்ல விரும்புவது, இதே கருணாநிதி அவர்கள், "என்மீது போடப்பட்டிருக்கிற வழக்குகளெல்லாம் வாபஸ் பெறுகிறேன்" என்று இதே மாமன்றத்திலே அவர்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக வந்ததற்கு பின்னாலும் சரி, முன்னாலும் சரி, அவர்மீது அதே முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் பல்வேறு வழக்குகளையெல்லாம் தொடுத்தார்கள். ஆனால், அந்த வழக்குகளையெல்லாம், 12 வழக்குகளில் தனி நீதிமன்றத்தாலே தீர்ப்பு சொல்லப்பட்டது. மிகப் பெரிய நல்ல தீர்ப்பு, குற்றவாளியே அல்ல, புரட்சித் தலைவி நீதிமான் என்று நீதிமன்றத்திலே அவர்கள் நல்ல தீர்ப்பைப் பெற்றார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்குப் பொய் வழக்குகள் எல்லாம் போடப்பட்டிருக்கின்றன என்று புலம்புகிறார்களே, அதற்கு ஒரு உதாரணத்தை மாத்திரம் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். நடந்து முடிந்த இடைத் தேர்தல்களின்போது, நம்முடைய நிதி அமைச்சர் அண்ணன் அவர்கள்மீதும், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்மீதும் குண்டு வைத்தார்கள் என்று ஒரு பொய் வழக்கு போட்டார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய நிதி அமைச்சர் அவர்களைப் பார்த்து இப்படிச் சொல்லலாமா என்பதை நீங்களே புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக, அது எப்படிப்பட்ட பொய் வழக்கு என்பதை நீங்கள் எண்ணிப் பார்ப்பதற்காகச் சொல்லிக்கொள்கிறேன்.

மிகப் பெரிய நில அபகரிப்பில் யார் ஈடுபட்டிருந்தாலும், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தவுடன், பல்வேறு பெரு நகரங்களில் எல்லாம், சேலம், திருச்சி போன்ற நகரங்களில் எல்லாம், இரவோடு இரவாக, பொது மக்களிடம் சென்று "இந்தாருங்கள் உங்களுடைய பணம், இந்தாருங்கள் உங்களுடைய சர்டிபிகேட்" என்று சான்றிதழ்களை எல்லாம் கொடுத்துவிட்டு, எங்கள்மீது வழக்குகளைப் போடவேண்டாமென்று அவரவர்களே தீர்த்துக்கொள்கிற ஒரு நிலை தமிழ்நாட்டிலே வந்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



நேரத்தின் அருமை கருதி என்னுடைய தொகுதி சம்பந்தமான சில கோரிக்கைகளை மாத்திரம் பணிவன்போடு சமர்ப்பிக்க விரும்புகிறேன். சின்னசேலம் என்கிற ஒரு புதிய தாலுகாவை உருவாக்க வேண்டும். அதாவது தற்போது விழுப்புரம் மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் கள்ளக்குறிச்சி மற்றும் சங்கராபுரம் என்று இரண்டு தாலுகாக்கள் உள்ளன. இந்த இரண்டு தாலுகாக்களிலும் 330 வருவாய் கிராமங்கள் மற்றும் ஊராட்சிகள் செயல்பட்டு வருகின்றன. எனவே, சின்னசேலம் என்கின்ற பெயரில் புதிய தாலுகா ஒன்றை உருவாக்கித் தந்திட வேண்டுமென்று அம்மா அவர்களைப் பணிந்து பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று சின்னசேலத்தில் புதிதாகத் தீயணைப்பு நிலையம் ஒன்றை அமைத்திட வேண்டுமென்று 20 ஆண்டுகளாகக் கேட்கப்படும் அந்தக் கோரிக்கையும் நிறைவேற்றப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 'கேளுங்கள் தரப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்' என்ற ஏசுவின் சொல்லுக்கிணங்க, நம்முடைய தங்கத் தாய், நம்முடைய தமிழினத் தாய் இவற்றையெல்லாம் செய்வார்கள் என்று அந்தப் பகுதிவாழ் மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் தாயே!

அதேபோன்று, கோமுகி ஆற்றின் குறுக்கே ஒரு மிகப் பெரிய பாலத்தை அமைத்தால், சர்க்கரை ஆலைக்கு வரக்கூடிய கரும்பு விவசாயிகளுக்குப் பயனுள்ளதாக இருக்குமென்று இந்த நேரத்தில் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். கல்வராயன் மலைப் பகுதியைச் சுற்றுலாத் தலமாக அறிவித்திட வேண்டுமென்றும், மலைவாழ் மக்களுக்காக மின்சார அலுவலகம் ஒன்று வெள்ளிமலையிலே அமைத்திட வேண்டுமென்றும் இந்த நேரத்தில் இந்த மாமன்றத்திலே பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*நண்பகல் 12—00*

கல்வராயன் மலைப் பகுதி பிற்படுத்தப்பட்ட பகுதி. அந்தப் பகுதியிலே, சங்கராபுரம் பகுதியில் ஒரு பாலிடெக்னிக் கல்லூரியை அமைத்துத் தர வேண்டுமென்று பணிவன்போடு கேட்டு, சங்கராபுரம் ஒன்றியத்தில் அரசம்பட்டு கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றைத் தொடங்கிட வேண்டுமென்று பணிவன்போடு கேட்டு, 'சுற்றி நின்ற பகை முடித்து சூழ்ந்து வந்த சதியழித்து, வெற்றி என்னும் தேர் ஏறி வீர உலா வரும் எங்கள் தாயே!' (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாபெரும் சபையிலே மக்கள் போற்றும் நிதிநிலை அறிக்கையின் மீதான பொது விவாதத்தில் பேசுவதற்கு அரிய வாய்ப்பினை வழங்கிய இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித்

தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்) சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011–2012 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையின்மீதான பொது விவாதத்தில் பங்கெடுத்துக்கொள்ள வாய்ப்பளித்த தங்களுக்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 14–வது சட்டமன்றப் பேரவையின் அரூர் சட்டமன்ற உறுப்பினராக என்னைத் தேர்தலிலே வெற்றிபெற உழைத்திட்ட, அரும்பாடுபட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், தேசிய முற்போக்கு திராவிட இயக்கத்தைச் சேர்ந்த எனது அருமைத் தோழர்களுக்கும் மற்றும் அனைத்துத் தோழமை கட்சிகளைச் சார்ந்தவர்களுக்கும், தலைவர்களுக்கும், ஊழியர்களுக்கும், தேர்தல் பிரச்சாரத்திற்காக தருமபுரி மாவட்டத்திற்கு வருகை தந்து, எனது தொகுதி மக்களிடம் வாக்கு சேகரித்து வெற்றி பெறச் செய்திட்ட மாண்புமிகு மதிப்பிற்குரிய முதல்வர் அவர்களுக்கும் எனது பணிவான நன்றியினைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டாவது முறையாக என்னை வெற்றி பெறச் செய்திட்ட அரூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு மீண்டும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைப் பொற்பாதங்களிலே சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

"கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்
உடையான்ஆம் வேந்தர்க்கு ஒளி."

கொடையும், இரக்க குணமும், செங்கோன்மையும், ஏழ்மையான மக்களைக் காத்தலும் ஆகிய நான்கும் உடைய வேந்தன், வேந்தருக்கெல்லாம் ஒளி மிக்கவனாவான் என்ற குறளுக்கேற்ப, 2011–2012 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மூலம், துவக்கத்திலேயே அ.தி.மு.க. அரசு தனது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருப்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே வரவேற்கின்றோம். தமிழக விவசாயிகளின் மனதில் இந்த நிதிநிலை அறிக்கை மிக ஆழமாக இடம் பிடித்திருக்கிறது.



வட்டியில்லாக் கடனாக 150 கோடி ரூபாய், பல கோடி ரூபாய்க்கு மானியத் திட்டங்கள், ரூ.745 கோடியில் புதிய அணைக்கட்டுகள் புனரமைப்புத் திட்டங்கள், நதி இணைப்புத் திட்டத்தின்கீழ் விவசாயிகளின் நீண்ட காலக் கோரிக்கையான அக்னி ஆறு, தெற்கு வெள்ளாறு, மணிமுத்தாறு ஆகியவற்றை, இணைத்திட 3,787 கோடி ரூபாயில் திட்டங்கள், வெள்ளத் தடுப்பு அணைப் பணிகளுக்கு பல கோடி ரூபாய்த் திட்டங்கள், வனவிலங்குகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, மனித உயிர்களுக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. டில்லி பாபு அவர்கள், விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வட்டியில்லாக் கடனாக மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தது மூன்று ஆயிரம் கோடி ரூபாய் என்று திருத்தி வாசிக்க வேண்டும். அவர் 150 கோடி ரூபாய் என்று சொன்னார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கு நன்றி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளத் தடுப்புப் பணிகளுக்காக 5,166 கோடி ரூபாய்க்கான திட்டம், வன விலங்குகளால் மனித உயிர்கள் பாதிக்கப்பட்டால் ரூபாய் ஒன்றரை இலட்சத்திலிருந்து இரண்டு இலட்சம் இழப்பீடு, சூரிய சக்தியில் ஒரு இலட்சம் தெரு விளக்குகள், புதிய நில எடுப்புக் கொள்கை உருவாக்குவது, பல வருட காலமாக கட்டாமல் இருந்த, கவனிப்பாரற்று இருந்த ஆதி திராவிட மாணவர்கள் நல விடுதிகளுக்கு இந்த ஆண்டிலேயே 93 விடுதிகள் கட்டடம், பழுதடைந்த விடுதிகளைச் சீரமைக்க 83.40 கோடி ரூபாய், பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு 148 கட்டடங்கள், ஒட்டுமொத்தமாக ஆதி திராவிடர் நலனுக்கு ரூபாய் 5 ஆயிரம் கோடி, மாணவர்களுக்கான உணவு மானியத் தொகை உயர்த்தி அறிவிப்பு, பொது மருத்துவக் காப்பீடு; இவையெல்லாம் இதுவரை தமிழக மக்கள் கண்டிராத சலுகைகள், புதிய திட்டங்கள். இத்தகைய திட்டங்களை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி வரவேற்கின்றது.

அதேநேரத்தில் கடுமையான விலைவாசி ஏற்றத்தால் இன்றைக்கு வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் மக்களது அவல நிலையை இந்திய அரசினுடைய பொருளாதார நிபுணர் திரு. அர்ஜுன் சென் குப்தா அவர்கள் இந்திய நாட்டில் 72 சதவீத மக்கள், தினம் ஒரு நாளைக்கு 20 ரூபாய்கூட சம்பாதித்திட முடியாத அளவில் வாழ்ந்து வருகிறார்கள் என்று பாராளுமன்றத்திற்கு தனது அறிக்கையைச் சமர்பித்துள்ளதை இந்த மாமன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

முன்பேர வர்த்தகத்தை முழுமையாகத் தடை செய்தலின் மூலமே, விலைவாசி உயர்வினைக் கட்டுப்படுத்திட முடியும். இவ்வரசு ஆன்–லைன் வர்த்தகத்தை முழுமையாகவே தடை செய்திட மத்திய அரசை வலியுறுத்த வேண்டுகிறேன்.

பிற்பகல் 12–05

கல் தோன்றி, மண் தோன்றா காலத்து முன்பே, முன் தோன்றிய மூத்த குடிமகன் தமிழ்க் குடிமகன். இந்த மூத்த குடிமகன் இன்றைக்கும் பல பகுதிகளில் புறம்போக்கு இடத்திலே பிறந்து, புறம்போக்கு வீட்டிலே வாழ்ந்து, புறம்போக்கு இடத்திலே அடக்கமாகின்றான். தமிழகத்தில் இன்று வரை சுமார் 14 இலட்சம் குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் கிடைக்கவில்லை.

கோயில் மனைப் புறம்போக்கு, தோப்புப் புறம்போக்கு, மந்தைவெளிப் புறம்போக்கு இவற்றில் எல்லாம் 50 ஆண்டுக் காலமாகக் குடியிருப்பவர்கள் பட்டா கேட்கிறார்கள். ஆனால், பட்டா வழங்கப்பட்டதில்லை. இவ்வரசு வீட்டுமனைப் பட்டா கோரி விண்ணப்பித்த அனைவருக்கும் தகுதி அடிப்படையிலே பட்டா வழங்கிட வேண்டுகிறேன். தமிழகத்தில் சுமார் 7 இலட்சம் மலைவாழ் மக்கள் வசிக்கும் பகுதிகளில், கடந்த தி.மு.க. ஆட்சியில் வீடுகளுக்கும், நிலங்களுக்கும் பட்டா வழங்க மறுத்தது மட்டுமல்ல; பட்டா வழங்கக் கூடாது என்று அரசு ஆணை வெளியிடப்பட்டது. 1989ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட அரசாணை எண் 1168-ஐ பழங்குடி மக்களின் நலனில் அக்கறை காட்டும் இவ்வரசு இரத்து செய்து பட்டா வழங்கிட வேண்டுகிறேன். அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளபடி, அழிவின் விளிம்பு நிலையிலுள்ள குறிப்பிட்ட பழங்குடியினரின் நலனை மேம்படுத்த பழங்குடி மக்களுடைய நிலம் உரிமையாக்கப்பட வேண்டும் என்பது உள்ளிட்ட ஜீவாதார உரிமைகள், கோரிக்கைகளை இவ்வரசு நிறைவேற்றிட வேண்டுகிறேன்.



வன உரிமைச் சட்டம், 2006 இந்தியாவிலேயே அனைத்து மாநிலங்களிலும் அமலாக்கப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய 44 இலட்சம் ஏக்கர் நிலம் அவர்களுக்கு ஒப்படை செய்யப்பட்டிருக்கிறது. அதாவது மேற்கு வங்காளம், திரிபுரா, சத்தீஸ்கர், ஜார்கண்ட் போன்ற பல மாநிலங்களிலும், பக்கத்தில் இருக்கக்கூடிய ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களிலும் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. துரதிர்ஷ்டவசமாக, கடந்த ஐந்தாண்டுக் காலத்தில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இதை அமலாக்காமல் கிடப்பிலே போட்டுவிட்டனர். உயர் நீதிமன்றம் பட்டா வழங்கலாம் என்று முன்வந்த நிலையில், வன உரிமைச் சட்டத்தின்கீழ் பழங்குடி மக்களது அனுபோக நிலங்களுக்குப் பட்டா வழங்கிட இவ்வரசு துரித நடவடிக்கையை மேற்கொண்டு, பட்டா வழங்கிட வேண்டுகிறேன்.

யானை வழித்தடங்கள் அமைத்திடும்போது, ஆதிவாசி மக்களின் கிராமங்கள் பாதிக்காத வகையில் மாற்றியமைக்கப்பட வேண்டும். இன்றையதினம் குன்னூர் பகுதியில் ஆயிரக்கணக்கான பழங்குடி மக்கள், விவசாயிகள் யானை வழித்தடத்தால் அப்புறப்படுத்தப்படுவதால் போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதனை மாண்புமிகு வனத் துறை அமைச்சருடைய பணிவான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பச்சைத் தேயிலை விவசாயிகளுக்கு மானியமாக கிலோ ரூபாய் 2 வழங்கிய இவ்வரசை வரவேற்கின்றேன். கூட்டுறவில் உள்ள தேயிலை விவசாயிகள் 30 சதமானவர்களுக்கு மட்டுமே இது கிடைக்கிறதாம். மீதமுள்ள 70 சதமான தேயிலை விவசாயிகளுக்கும் இது கிடைத்திட இவ்வரசு முன் வரவேண்டும். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், 2001–2006 ஆம் ஆண்டுகளில் முதல்வராக இருந்தபோது, அனைத்துத் தேயிலை விவசாயிகளுக்கும் மானியம் வழங்கியதுபோல், இவ்வாண்டும் அனைத்துத் தேயிலை விவசாயிகளுக்கும் அந்த 2 ரூபாய் மானியத்தை வழங்கிட வேண்டுகிறோம்.

அதேபோல், தமிழக அரசின் புறம்போக்கு நிலங்களை, உச்சவரம்பு நிலங்களை, முழுமையாக நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு வழங்கிட வேண்டுகிறோம்.

உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் அறிவிப்பை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி வரவேற்கின்றது. ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள், பேரூராட்சி, நகராட்சித் தலைவர் பதவிகளுக்கு நேரடித் தேர்தல் முறையினை இவ்வரசு கொண்டு வரவேண்டும்.

மருத்துவத் துறையில் உள்ள பல்வேறு திட்டங்களில் முக்கியமாக முதலமைச்சரின் விரிவான பொது மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை வரவேற்கின்றோம். இத்திட்டத்தை L.I.C., G.I.C. போன்ற பொதுக் காப்பீட்டு நிறுவனங்களின்மூலம் அமலாக்க வேண்டும்.

தமிழகத்தில் மக்கள் மருத்துவம், இயற்கை மருத்துவம், தாய்வழி மருத்துவம் முறைப்படுத்தப்பட வேண்டும். அனைத்து அரசு பொது மருத்துவமனைகளிலும் போதிய மருந்துகள் வழங்கப்பட்டு, காலியிடங்களில் மருத்துவர்களும், ஊழியர்களும் நிரப்பப்பட வேண்டும்.

108 ஆம்புலன்சில் பணியாற்றிடும் தொழிலாளர்களது கோரிக்கையை ஏற்று, அவர்களது பணியை முறைப்படுத்தி, பணி நிரந்தரம் செய்திட இவ்வரசு முன் வரவேண்டும்.

அதேபோல், சமச்சீர் கல்வி குறித்த முடிவைத் தமிழகமே இன்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. சுமார் ஒரு கோடியே 25 இலட்சம் மாணவர்கள் காத்திருக்கின்றனர். உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை இவ்வரசு அமலாக்கிடும் என்று நேற்றையதினம்கூட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், தெரிவித்ததை வரவேற்கின்றோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றம் இன்று காலையில்தான் தனது தீர்ப்பை வழங்கியுள்ளது. தமிழக அரசின் மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றம் ஏற்கெனவே பிறப்பித்த ஆணையை 10 நாட்களுக்குள் செயல்படுத்த வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் ஆணையிட்டுள்ளது. ஆகவே, அந்த சமச்சீர் கல்வித் திட்டத்தை உடனடியாகத் தமிழக அரசு செயல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.



**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க சமச்சீர் கல்வித் திட்டத்தைப் பற்றி பல்வேறு தலைவர்கள் எல்லாம், பல்வேறு மாமன்ற உறுப்பினர்கள் எல்லாம் பேசிய பின்னர், நான் பேசுகின்றபோது அதற்கான தீர்ப்பை, நல்லதொரு தீர்ப்பை இங்கே மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கியதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கோடானுகோடி மாணவர்களுடைய எதிர்காலம் நிச்சயமாக நல்ல முறையில் அமையும் என்று கருதுகிறேன்.

ஆதி திராவிட மாணவர்கள் மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான விடுதிகளில் உணவு மானியத் தொகை உயர்த்தியதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி வரவேற்கிறது. கடுமையான விலைவாசி உயர்வு ஏற்பட்டுள்ள இந்தச் சூழ்நிலையில், கர்நாடகா, கேரளா போன்ற மாநிலங்களில் பள்ளி, கல்லூரி, மாணவர் விடுதிகளுக்கு வழங்கிய உணவு மானியம்போல் வழங்க வேண்டும். கேரளாவிலே பள்ளி மாணவர்களுக்கு ஒரு மாதம் 1,300 ரூபாயும், கல்லூரி மாணவர்களுக்கு 1,500 ரூபாயும் வழங்கப்படுகிறது.

பிற்பகல் 12—10

உண்மையிலேயே, கடந்த தி.மு.க. ஆட்சியிலே வெறும் 50 ரூபாய் மட்டும்தான் உயர்த்தி வழங்கப்பட்டது. இப்போது அ.தி.மு.க. ஆட்சியிலே 200 ரூபாய் உயர்த்தியிருப்பது வரவேற்கத்தக்க விஷயம்; பாராட்டப்பட வேண்டிய ஒரு விஷயம். ஆனால், இன்றைக்கு இருக்கக்கூடிய விலைவாசி அடிப்படையில் மேலும் உயர்த்த வேண்டும். இன்னும் சொல்லப்போனால், தமிழகம் முழுவதும் இந்த அரசு புதிய விடுதிகளைக் கூடுதலாகத் திறக்க வேண்டும். ஆதி திராவிட மாணவர்களுக்குக் கல்லூரியில் இடம் கிடைத்தும், விடுதியில் இடம் கிடைக்காமல் இருக்கக்கூடிய அவல நிலையைப் போக்குவதற்கு அரசு முன்வர வேண்டுகிறோம்.

ஆதி திராவிட மற்றும் பழங்குடியினருக்கான இட ஒதுக்கீடு 19 சதமானத்தை மக்கள் தொகை வளர்ச்சி அடிப்படையிலே 20 சதமானமாக உயர்த்திட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி வலியுறுத்துகிறது.

அரசு வழங்கும் திட்டங்களையும், சலுகைகளையும், வேலைவாய்ப்புகளையும், உயர் கல்வியையும் பெற வேண்டுமாயின்,

பழங்குடியின மாணவர்களுக்கு, பழங்குடியின மக்களுக்கு இனச் சான்று மிகவும் இன்றியமையானதான ஒன்றாக இருக்கிறது. பழங்குடியின பெற்றோர்கள் இனச் சான்று பெற்றிருந்தால் அவர்கள் பெற்ற பிள்ளைகளுக்கு இனச் சான்று வழங்கலாம் என்று ஏற்கெனவே வருவாய்த் துறை ஆணையாளர் மூலமாக அறிவுறுத்தப்பட்டிருந்தும், அப்பிள்ளைகளுக்குச் சாதிச் சான்றிதழ் வழங்கிட சில வருவாய்க் கோட்டாட்சியர்கள் மறுக்கிறார்கள். சரியான, தெளிவான வழிகாட்டுதலை இவ்வரசு அறிவித்திட வேண்டுகிறேன்.

திருப்பத்தூர் கோட்டாட்சிக்கு உட்பட்ட பகுதியிலே, நந்தகுமார் என்று ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி இருந்தபொழுது, சான்றிதழ் உள்ள பெற்றோர்கள் பெற்ற பிள்ளைகளுக்குச் சான்றிதழ் வழங்க வேண்டுமென்று நானே நேரடியாக வலியுறுத்தியபோது, 'இவர்கள் பெற்ற பிள்ளைதானா' என்று பிறப்பையே சந்தேகப்படுத்திய சம்பவங்கள் கடந்த கால ஆட்சியிலே நடைபெற்றிருக்கிறது. அதேபோல சிவகாசி கோட்டாட்சியராக இருந்தவர், 'காட்டுநாயக்கர் இனத்தைச் சேர்ந்த இந்தப் பழங்குடியினருக்கு சாதிச் சான்றிதழ் வழங்கினால் எனது பிள்ளைகளின் எதிர்காலம் என்னாவது,' என்று இப்படியெல்லாம் சில அதிகாரிகள் பேசி, உயர் அதிகாரிகள் திட்டமிட்டு, பழங்குடியினர் சான்றிதழ் வழங்க மறுத்திருப்பதை இந்த மாமன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

தமிழகத்தில் படித்து முடித்து வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்து காத்திருக்கும் 70 இலட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்திட . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தந்தையாருக்கு கொடுக்கப்பட்ட சான்றிதழ் அடிப்படையில் மகனுக்குக் கேட்கின்றபோது, அங்கே அதிகாரிகள் அலட்சியப்படுத்தினார்கள் என்று சொன்னார்கள். அது கடந்த கால ஆட்சியிலே நடைபெற்றிருக்கலாம். இப்பொழுது மாண்புமிகு அம்மா அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றதற்குப் பின்னால், இதுபோன்ற நிகழ்வுகள் வரக்கூடாது என்று தெளிவான ஆணை பிறப்பித்திருக்கின்றார்கள். அதேபோல், அவர் சொன்னதில், தந்தை சான்றிதழ் வாங்கியிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கின்றார்கள்.



அது ஒரு சில இடங்களில் தவறாக இருக்கின்ற காரணத்தினால், அதற்கு ஒரு குழு போட்டு ஆராய்ந்து கொண்டிருக்கின்றார்கள். அப்படிப்பட்ட தவறுகள் இருந்தால் அவை களையப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்திலே காட்டுநாயக்கர் இனத்தைச் சேர்ந்த ஒருவருக்கு 3 பிள்ளைகள். அந்த 3 பிள்ளைகளுக்கும் மூன்று விதமான இனச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஒருவர் 2 பிள்ளைகள் பெற்றிருந்தால் ஒரு பிள்ளைக்கு சாதிச் சான்றிதழ் வழங்கி, அடுத்த மகளுக்கு சாதிச் சான்றிதழ் வழங்க மறுக்கப்பட்டிருக்கிறது. அது எனது அரூர் தொகுதியிலும் சரி, அரூர் கோட்டத்திலும் சரி, தருமபுரி கோட்டத்திலும் சரி, ஒரு குழந்தையை உயர் படிப்புக்கு படிக்க வைப்பதற்கு முடிகிறது. இன்னொரு குழந்தையைப் படிக்க வைக்க முடியவில்லை. இனச் சான்றிதழ் இல்லாததனால், அந்தப் படிப்பு படிக்க முடியாமல் பரிதவிக்கின்ற நிலைமை இன்றைக்கும் தொடருவதைத்தான் நான் இந்த நேரத்திலே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுச் சொல்வாரேயானால் நிச்சயமாக மாண்புமிகு அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டில்லி பாபு, எந்த வருடம் என்பதைச் சொல்லுங்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** இந்த ஆண்டு; இந்த ஆண்டுதான். நான் விவரத்தைக்கூட அமைச்சருக்குக் கொடுத்துவிடுகிறேன்.

தமிழகத்தில் படித்து முடித்து வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து காத்திருக்கும் சுமார் 70 இலட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்திட, அரசுத் துறைகளான சுகாதாரத் துறை, மின்சாரத் துறை, வருவாய்த் துறை, கல்வித் துறை, காவல் துறை என இந்தத் துறைகளிலுள்ள காலியிடங்களில் 2 இலட்சம்

பணியிடங்களை இவ்வரசு நிரப்புவதன்மூலம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உறுதி செய்திட முன்வர வேண்டுகிறேன்.

தமிழகத்தில் வாழும் சிறுபான்மையினரான இஸ்லாமிய மக்களுக்கு சச்சார் கமிட்டியின் பரிந்துரைகளைத் தமிழகம் முழுவதும் முழுமையாக அமலாக்கிட வேண்டும். வக்ஃபு வாரியத்திற்கு ஒரு முறை 3 கோடி ரூபாய் நிதி வழங்கப்படும் என்பதை வருடா வருடம் வழங்கிட வேண்டுகிறேன்.

மாற்றுத் திறனாளிகளுக்காக வழங்கிடும் உதவித் தொகை உயர்வை வரவேற்கின்றோம். ஆந்திரா, கர்நாடகம், கேரளா ஆகிய மாநிலங்களில் 40 சதமானம் ஊன அடையாளம் இருந்தாலே, சான்றிதழ் அளித்தாலே, அனைத்து மாற்றுத் திறனாளிகளுக்கும் சலுகைகளும் உதவித் தொகைகளும் வழங்கப்படுவதுபோல், தமிழகத்திலும் 40 சதமானம் ஊனமுற்றவர்களுக்குப் பராமரிப்புச் செலவும், உதவித் தொகையும் அரசு வழங்கிட முன்வர வேண்டுகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, புதிய வரிகள் அல்லாத உபரி பட்ஜெட் என்றாலும், பரவலாகப் பாராட்டப்படுகின்ற இந்த நிதிநிலை அறிக்கையில், மேலும் பொலிவு செய்திருந்தால் முன்கூட்டியே போடப்பட்ட வரிகளைத் தவிர்த்திருக்கலாம். இருப்பினும் இந்த நிதிநிலை அறிக்கையினை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி பொதுவாக மீண்டும் வரவேற்கிறது.

நேற்றையதினம் 'தினமணி' தலையங்கத்தில்கூட, இந்த அரசிடமிருந்து, குறிப்பாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடமிருந்து அளவுக்கு அதிகமாக மக்கள் எதிர்பார்க்கின்றார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆம், அது நிதர்சனமான உண்மையும்கூட. தமிழகத்திலே கல்வி அறிவிலே மிகவும் பின்தங்கியிருக்கிற, கடைக்கோடி மாவட்டமான தருமபுரி மாவட்டத்தினைச் சேர்ந்தவருக்கு உயர் கல்வித் துறை அமைச்சர் பொறுப்பை வழங்கி, இரண்டு மாதங்களிலே இரண்டு கல்லூரிகளைத் திறந்து, அப்பகுதி மாணவர்களுக்கு உயர் கல்வி கிடைத்திட தாங்கள் செய்த முயற்சிக்கு தருமபுரி மாவட்டத்து மக்களின் சார்பில் உங்களுக்கு நன்றியைச் செலுத்துகின்றோம்.

*பிற்பகல் 12–15*

பள்ளிக்கூடமே முளைக்காமல் எனது தொகுதியில் ஏறக்குறைய 14 கிராமங்கள் இருக்கின்றன. காட்பாடி, கோரையாறு, புறாக்கல் உட்டை உள்ளிட்ட 14 கிராமங்களில் துவக்கப் பள்ளிகளைத்



துவக்கிட வேண்டுகிறேன். அதேபோல், தருமபுரி மாவட்டம் என்றாலே, நக்சலைட் பாதித்த மாவட்டம் என்று சொல்கிறார்கள். கந்து வட்டி, கட்டப் பஞ்சாயத்து போன்ற பல்வேறுபட்ட சொல்லொணாக் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டப் பகுதியாக தருமபுரி மாவட்டம் உள்ளது. இந்த நிலையை மாற்றி, தருமபுரியிலே சிப்காட் தொழிற்சாலையை அமைத்திட வேண்டும். அதேபோல், அரூரிலே மாலிப்டினம் தொழிற்சாலைக்கான சாத்தியக்கூறுகள் உண்டென்று Geological Survey of India (GSI) மூலமாக பல்வேறுபட்ட ஆய்வுகளை மேற்கொண்டு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** தொகுதிப் பிரச்சினைகளுக்கு வந்துவிட்டேன். பல்வேறுபட்ட ஆய்வுகளை மேற்கொண்டு, தங்கம், வெள்ளி, செப்பு, பித்தளை போன்ற உலோகங்கள் கிடைப்பதாக அங்கு கணக்கிடப்பட்டுள்ளது. ஆகவே, அங்கு மாலிப்டினம் தொழிற்சாலையை உருவாக்கினால், அதில் 10,000–க்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கிடமுடியும்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தேர்தலிலே அறிவித்தபடி, கிருஷ்ணகிரி கே.ஆர்.பி. அணையிலிருந்து, உபரி நீரான வடதுபுறக் கால்வாயை கெரகோடஹள்ளியிலிருந்து நீட்டிப்பு செய்து, கீரனஹள்ளி, அரியகுளம், மேட்டுப்பட்டி, ஐக்குப்பட்டி, பொம்பட்டி, போனையம்பள்ளி, பள்ளிப்பட்டி வழியாக தாசர்ஹள்ளி, மொரப்பூர், எளவடை, நவலை அண்ணாமலைஹள்ளி வழியாக, ஈச்சம்பாடி வரை அந்தத் திட்டத்தை நீட்டிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. டில்லி பாபு அவர்கள் பேசுகின்றபோது, கால்வாயை நீட்டித்துத் தரவேண்டும் என்று கோருகிறார்; புதிய பள்ளிகள் துவங்கப்படவேண்டும் என்று கோருகிறார்; இன்னும் ஏராளமான பணிகளை அரசு செய்யவேண்டுமென்று கோருகிறார். இதற்கெல்லாம் பணம் தேவை. அதேநேரத்தில், முன்பு போட்ட வரிகளைத் தவிர்த்திருக்கலாம் என்றும் கூறுகிறார். அப்படியானால், இந்த வளர்ச்சிப் பணிகளையெல்லாம் செய்வதற்கு அரசுக்கு வருவாய் எங்கிருந்து வரும்? *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு வருவாய் ஈட்டக்கூடிய பல்வேறுபட்ட அம்சங்களை அறிக்கையிலே மாண்புமிகு முதல்வர் அவர்களும், நிதியமைச்சர் அவர்களும், தலைமைச் செயலாளர் மற்றும் நிதிச் செயலாளர் அவர்களெல்லாம் அருமையான நிதிநிலை அறிக்கையை வகுத்து, அவைமுன் வைத்திருக்கிறார்கள். நான் குறிப்பிட்டது, இந்த நிதியாண்டிலே அறிவிக்கப்படுகின்ற திட்டங்களோடு, இந்தத் திட்டங்களையும் இணைத்துக் கொள்ளவேண்டும் என்பதுதான். கெரகோடஹள்ளியிலிருந்து அந்தக் கால்வாயை நீட்டிப்பதை எங்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தேர்தல் காலத்திலே வாக்குறுதி அளிக்கின்றபோது, எங்களுக்காக வாக்கு சேகரித்தபோது, அங்கு அறிவித்தத் திட்டத்தை, இந்த நிதி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றமாட்டோம் என்று சொல்லவில்லை. கால்வாயை நீட்டித்துத் தருகிறோம். அதற்குப் பணம் தேவை, அந்தப் பணம் எங்கிருந்து வரும் என்றுதான் நான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள். என்னம்மா point of order?

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கேள்வி மிக நியாயமானது. உங்களோடு நாங்களும் இருக்கிறோம். இணைந்து மத்திய அரசிடம் நாம் கேட்போம். (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசுதான் நிதி தரவேண்டும். மாநில அரசினுடைய நிதி உரிமையை மத்திய அரசு தொடர்ந்து பறித்துக்கொண்டிருக்கிறது. ஆகவே கட்டாயமாக மத்திய அரசிடமிருந்து நாம் கேட்டுப் பெறுவோம். முதலமைச்சர் அவர்கள் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளுக்கு நாங்கள் ஆதரவு தருவோம். மாநில அரசுக்கு கட்டாயமாக நிதி தேவை. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன்.



**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வரி வருவாயின் மூலமாக வருவாயை ஈட்டவேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். எங்களுடைய கருத்து, வரி வருவாய் மூலமும் ஈட்டவேண்டும்; அதேசமயத்தில், நிலையான, உறுதியான திட்டங்களின் மூலமாகவும் வருவாயை ஈட்டவேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த நிதிநிலை அறிக்கையை சரியாக வகுத்திருக்கிறார்கள். மக்கள் நலத் திட்டங்களைக் கொடுத்திருக்கிற அதேநேரத்தில், தொலைநோக்குப் பார்வையோடு விவசாய உற்பத்தி, தொழில் உற்பத்தியை அதிகப்படுத்தி, வருவாயைப் பெருக்குவதற்கு நிதி மூலதனத்தை உருவாக்குவதற்கான திட்டங்களையெல்லாம் அறிவித்திருக்கிறார்கள். அதைக் கண்டிப்பாக இந்த அரசு முழுமையாகச் செயல்படுத்தி, மக்களிடமிருந்து வரி வருவாயைப் பெறுவதைவிட, உற்பத்தி சார்ந்த துறையிலே வருவாயைப் பெற்று, இந்தத் திட்டங்களைத் தீட்டினால், மக்களுக்கும் கொஞ்சம் சுமை குறையும் என்று எதிர்பார்க்கிறோம். அதைப்போல, மத்தியத் தொகுப்பிலிருந்தும் இன்னும் கூடுதலான நிதிகளைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்றும் அன்போடு நமது தமிழக முதல்வர் அவர்களை நான் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலேயே மிகவும் பின்தங்கிய மாவட்டம், தருமபுரி மாவட்டம். அந்த மாவட்டத்தினுடைய கட்டமைப்பு குறித்த சில கோரிக்கைகளைத்தான் எங்களுடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடத்திலே முன்வைக்கின்றேன். அந்தக் கால்வாயை நீட்டிப்பதன் மூலமாக, 27 கிராமங்களின் விவசாயிகள் பயனடைவர். எனவே, இந்த நிதியாண்டிலே இந்தக் கால்வாய்த் திட்டத்திற்கான நிதியை ஒதுக்கி, தாங்கள் அறிவித்தால், அந்தப் பகுதி மக்கள் நிச்சயமாக நன்றிக் கடன்பட்டவர்கள் ஆவர். அதேபோல், தென்னை மரங்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள். என்ன point of order?

*__திருமதி எஸ். விஜயதரணி:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் எல்லோருக்கும் தெரிந்திருக்கும். மத்திய அரசு, நமது தமிழக அரசு கேட்டதற்கும் மேலாக, ரூ.23,000/– கோடிகள், கேட்டதற்கும் மேலாக (குறுக்கீடு). . .

*பிற்பகல் 12–20*

__மாண்புமிகு பேரவைத் தலைவர்:__ மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

__மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்ன பேசுகிறோம் என்று தெரியாமல் பேசிக் கொண்டிருக்கிறார். மத்திய அரசிடம் பலமுறை கேட்டாகிவிட்டது. நாங்கள் கேட்ட எந்தச் சிறப்பு உதவியையும் மத்திய அரசு செய்யவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) எத்தனையோ இனங்களில் நிதியுதவி கேட்டிருக்கிறோம்; எதையும் மத்திய அரசு நிறைவேற்றி வைக்கவில்லை. எங்கள் கோரிக்கைகளுக்கு பதில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

__மாண்புமிகு பேரவைத் தலைவர்:__ மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

__திரு. ப. டில்லி பாபு:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னை மரங்கள் அதிகமுள்ள பகுதியான வாரூர், அரசம்பட்டி, கம்பைநல்லூர் உள்ளடங்கிய அந்தப் பகுதிகளில், குறிப்பாக, கம்பைநல்லூர் பகுதியிலே மகளிர் வேலைவாய்ப்பைப் பெறுவதற்காக தென்னை நார்மூலம் கயிறு தயாரிக்கும் சிறிய தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தித் தர வேண்டுகிறேன்.

ஏற்கெனவே ஆய்வுக்கு எடுக்கப்பட்டுள்ள கல்லாறு அணைக்கட்டுத் திட்டமும், மதிகெட்டான் கால்வாய்த் திட்டமும் உங்கள் ஆட்சியிலாவது, இந்த ஆட்சியிலாவது நிறைவேற்றித் தர வேண்டுகிறேன். எனது தொகுதியில், பழங்குடி மக்களாகிய மலைவாழ் மக்கள் சுமார் ஒரு இலட்சம் பேர் வாழ்ந்து வருகிறார்கள். (மணியடிக்கப்பெற்றது). கடைசி பாயின்ட், முடித்துவிடுகிறேன். சித்தேரி மலைப் பகுதியிலே ஏறக்குறைய—நான் நேற்றையதினம்கூட குறிப்பிட்டிருந்தேன் பாதை வசதிதான் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.



__மாண்புமிகு பேரவைத் தலைவர்:__ மலையிலிருந்து சீக்கிரம் இறங்குங்கள்.

__திரு. ப. டில்லி பாபு:__ இந்தக் காலத்திலாவது தார்ச்சாலைகளைப் பெற்றுத் தர வேண்டும். அதேபோல, தருமபுரி நகருக்குப் புதிய பேருந்து நிலையத்தை அமைத்திட வேண்டுகிறேன். நேற்றைய முன்தினம் எனது தொகுதியிலே சுண்டக்காப்பட்டி என்கிற கிராமத்தில் ஏறக்குறைய 150 பேர் ஒரு மர்ம நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பல பத்திரிகைகளில், குறிப்பாக தினமணியில்கூட இந்தச் செய்தி இடம்பெற்றிருந்தது. அந்தப் பகுதியில் போதிய சிகிச்சையும், உரிய முன்தடுப்பு நடவடிக்கைகளும் எடுப்பதற்குப் பொதுச் சுகாதாரத் துறைமூலமாக மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். கடந்த ஆட்சிக் காலத்தில் அரூரிலே. . .

__மாண்புமிகு பேரவைத் தலைவர்:__ மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

*__மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொல்லியதுபோல, தருமபுரி மாவட்டத்திலே விஷக் காய்ச்சல் இருப்பது தெரிய வந்தவுடன், மாவட்ட சுகாதாரத் துறையைச் சேர்ந்த மருத்துவக் குழு அங்கு சென்று சிகிச்சை அளித்திருக்கிறது. மேலும் தகுந்த தொடர் சிகிச்சை அளிக்கப்படும் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

__மாண்புமிகு பேரவைத் தலைவர்:__ திரு. ப. டில்லி பாபு, அடுத்த உறுப்பினரை அழைக்கப் போகிறேன். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் அவர்கள். (குறுக்கீடு)

__திரு. ப. டில்லி பாபு:__ நன்றி சொல்லி முடித்துவிடுகிறேன்.

__மாண்புமிகு பேரவைத் தலைவர்:__ நன்றி சொல்லிவிடுங்கள்.

__திரு. ப. டில்லி பாபு:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்திலே, அரூரிலே பெரிய தலைமை மருத்துவமனை ஆரம்பிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டு, அரசியலுக்காகப் பழிவாங்கப்பட்ட தொகுதி அரூர் தொகுதி. அத்தனை உப கருவிகளும், இயந்திரங்களும் அத்தனையும் இறக்கப்பட்டு, திறப்பதற்காக நாட்களைக் குறிக்க இருக்கின்ற நேரத்தில்,

திடீரென்று இடமாற்றம் செய்யப்பட்டது. ஏதோ காரணத்தால் அந்த மருத்துவமனை வராமல் பழிவாங்கப்பட்டது, இன்றைக்கு ஆறரை இலட்சம் மக்கள் வாழ்கின்ற அரூர், மொரப்பூர், பாப்பிரெட்டிப்பட்டி—எங்கள் பகுதி அமைச்சருக்கு நன்றாகத் தெரியும். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது அரசியலுக்காக மாற்றப்பட்டது; அது மக்கள் நலனுக்காக மாற்றப்பட்டது அல்ல. திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரியும். வாக்குகளைப் பெறுவதற்காக, பெண்ணாகரம் இடைத்தேர்தல் வந்ததன் காரணமாக அது மாற்றப்பட்டதே தவிர, மக்களுடைய நலனுக்காக அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** ஆறரை இலட்சம் மக்கள் வாழக்கூடிய அந்தப் பகுதியில் அந்த மருத்துவமனையை, ஒரு சிறப்பு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தி, Multi Speciality Hospital என்ற அளவுக்கு 200 படுக்கைகள் கொண்ட வசதியுடன் அந்தப் பகுதி மக்களை பாதுகாப்பதற்கான ஆக்கபூர்வமான திட்டத்தை இந்த அரசு நிச்சயமாகச் செயல்படுத்தும் என்று எதிர்பார்க்கிறேன்.

பொதுவாக 2011–2012ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை, பரவலாக தமிழ்நாடு முழுவதும் உழைப்பாளி மக்கள், தொழிலாளர்கள், மத்திய, மாநில அரசு ஊழியர்கள் அனைவரும் வரவேற்கத்தக்க இந்தப் பட்ஜெட்டை, மீண்டும் ஒருமுறை இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்) சார்பில் வரவேற்று அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ்.

***திரு. ஏ.கே. போஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே மற்றும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களே, அனைவருக்கும் என் மனமார்ந்த வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



அம்மா என்கிற சொல்லைக் கேட்டால் அற்புதமும், அதிசயமும் அடுக்கடுக்காக அரங்கேறும்; அம்மா என்கிற சொல்லைக் கேட்டால் துன்பமும் துயரமும் காணாமல் போய்விடும்; அம்மா என்கிற சொல்லைக் கேட்டால் அனைத்தும் தலை நிமிரும். அம்மா, அன்னைத் தமிழகத்தை தலைநிமிரச் செய்துவரும் அன்னையே, பருவங்கள்கூடப் பொய்க்கும், ஆனால் நம்பினோருக்குத் தவறாமல் பொழியும் அருள் மழையே, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் முதலமைச்சராக மூன்றாவது முறையாகப் பொறுப்பேற்றுள்ள தமிழகத்தின் காவல் தெய்வமே, தமிழ்கூறும் நல்லுலகத்தின் தனிப்பெரும் தலைவியே, அகிலம் புகழும் அன்னையே, உலகம் போற்றும் உத்தமத் தலைவியே, வையகம் போற்றும் வரலாற்றுத் தலைவியே, தமிழகத்தின் விடிவெள்ளியே, மனிதர்குல மாணிக்கமே, கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே! (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12–25*

ஏழைத் தொண்டனாகிய என்னை மதுரை மாவட்ட கழகச் செயலாளராக நியமனம் செய்து, மேலும் 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் என்னை வேட்பாளராகப் போட்டியிட வாய்ப்பு வழங்கியும், மீண்டும் 2006–ல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் திருப்பரங்குன்றம் தொகுதியிலே போட்டியிட வாய்ப்பு கொடுத்து வெற்றி பெறச் செய்து, 2011–ல் இரண்டாவது முறையாக மதுரை வடக்கு சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட வாய்ப்பு கொடுத்து, என்னை வெற்றி பெறச் செய்து, மேலும் மதுரை மாநகர் மாவட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்ற எனக்கு வாய்ப்பளித்து, தொடர்ந்து நல்லாசி வழங்கிவரும் எங்களது குல தெய்வம் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே! (மேசையைத் தட்டும் ஒலி) 2011–2012 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் எனக்குப் பேச அனுமதியளித்த தாய்க்கு கோடானுகோடி நன்றியைத் தங்கள் பொற்பாதம் தொட்டு வணங்கி என் உரையைத் தொடங்குகின்றேன்.

அம்மா, தாங்கள் அறிவித்த நிதிநிலை அறிக்கையில் ஏழை, பாட்டாளி மக்களுக்கும், நடுத்தர வர்க்கத்தினருக்கும், விவசாயப் பெருங்குடி மக்களுக்கும், மாணவ, மாணவிகளுக்கும், மீனவ மக்களுக்கும், தமிழக முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கும் மற்றும் முக்கியமாக வயதானவர்களுக்கும் பல்வேறு

நலத் திட்டங்களை வழங்கிய தங்களை, இந்த நாடும், ஏடும் மற்றும் அனைத்து சமுதாய மக்களும் பெரிதும் பாராட்டி மகிழ்கிறார்கள் தாயே!

அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் திருமதி ஹிலாரி கிளிண்டன் அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களை தலைமைச் செயலகத்திலே சந்தித்தபோது, இலங்கைத் தமிழர்களுக்கு நேர்ந்த துயரங்களையும், இன்னல்களையும், போர் விதிமீறல்களையும் விரிவாக எடுத்துக்கூறி, இலங்கைமீது அமெரிக்க நாடாளுமன்றத்தின் வெளிவிவகாரக் குழு பொருளாதாரத் தடை விதிக்கும் அளவிற்கு ராஜதந்திர நடவடிக்கையை மேற்கொண்ட மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை உலகத் தமிழர்கள் அனைவரும் போற்றி வணங்குகிறார்கள் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தில் கடந்த ஐந்தாண்டு கால தி.மு.க. ஆட்சியில் தீர்த்து வைக்கமுடியாமல் இருந்த மின்வெட்டை ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே படிப்படியாகக் குறைத்து, இன்னும் ஒரு வருடத்திற்குள் மின்சார வெட்டே தமிழகத்தில் இல்லையென்ற நிலையை ஏற்படுத்துவேன் என இருண்ட தமிழகத்தை ஒளிமயமாக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்ட மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை தமிழ்நாடே பாராட்டுகிறது தாயே! (மேசையைத் தட்டும் ஒலி)

கருணாநிதியின் குடும்பத்தினராலும், தி.மு.க.—வைச் சார்ந்த முன்னாள் அமைச்சர்களாலும், தி.மு.க. கூலிப் படைகளாலும் அபகரிக்கப்பட்ட நிலங்களை உரியவர்களுக்குத் திருப்பித்தரும் வகையில், ஒவ்வொரு மாவட்டத்திலும் தனிக் காவல் பிரிவுகளையும், நீதிமன்றங்களையும் அமைத்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கச் செய்தும், தி.மு.க. ஆட்சியில் நடைபெற்ற குடும்ப அராஜகத்தையும், கட்டப் பஞ்சாயத்துகளையும், ரௌடியிசத்தையும் ஒழித்து சட்டம்—ஒழுங்கைக் காப்பாற்றிய தங்களை நீதி தேவதையாக தமிழக மக்கள் வணங்குகிறார்கள் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி)

அம்மா, எதிர்க்காலத் தூண்களாக விளங்கும் மாணவச் செல்வங்கள் ஏழ்மையின் காரணமாக படிப்பை இடையிலே நிறுத்துவதைத் தடுக்கும்வகையில் இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு *10* மற்றும் *11* ஆம் வகுப்பு வரை பயிலும்



மாணவ, மாணவிகளுக்கு ரூ.*1,500*/—ம், *12* ஆம் வகுப்பு படிக்கிற மாணவ, மாணவிகளுக்கு ரூ.*2,000*/—ம் ஊக்கத் தொகையாக வழங்க ஆணையிட்ட, மாணவச் செல்வங்களின் விடிவெள்ளி, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு எதிர்கால மாணவச் சமுதாயம் நன்றிகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறது.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் *+1, +2* மாணவ, மாணவிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவிகளும் பயன்பெறும்வண்ணம் இலவச மடிக் கணினி வழங்கி எதிர்காலத் தமிழகத்தை வளமாக்கத் திட்டம் வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை தமிழக மக்கள் அனைவரும் பாராட்டுகிறார்கள்.

*பிற்பகல் 12—30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. போஸ், கொஞ்சம் வேகமாகப் பேசுங்கள்.

**திரு. ஏ.கே. போஸ்:** சென்ற ஆட்சியில்தான் சபாநாயகர் என்னைக் கண்டால் பேசவே விடமாட்டார். நீங்கள் இப்போது சபையை நன்றாக நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். எல்லோரும் நல்ல முறையிலே கருத்துகளை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த அரசுக்கும், சபாநாயகருக்கும் நன்றியைக் கூறிக்கொள்கிறேன். ஏனென்றால், சென்ற தடவை நான் பட்ட அவஸ்தை உங்களுக்கே தெரியும். அந்த அளவுக்கு அவஸ்தை கொடுத்தார்கள். பேச விடமாட்டார்கள். இன்றைக்குப் பேச்சு சுதந்திரம் கிடைத்திருக்கிறது. இதற்கு முன்னால், இல்லை.

தமிழக மீனவர்கள், மீன்பிடித் தடைக்காலமான *45* நாட்களில் வறுமையில் வாடக்கூடாது என நினைத்து, மீனவக் குடும்பங்களுக்கு உதவித் தொகையை ஆயிரம் ரூபாயிலிருந்து இரண்டாயிரம் ரூபாயாக அதிகரித்து வழங்கி, மீனவச் சமுதாயத்தின் காவல் தெய்வமாகப் போற்றப்படும் எங்கள் அன்னையே, உங்களை மனதார வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

மணமாகாத ஏழைப் பெண்களுக்குத் திருமண உதவித் தொகையாக *25,000* ரூபாயும், தாலிக்கு *4* கிராம் இலவசத் தங்கமும், இளங்கலைப் பட்டம் மற்றும் பட்டயப் படிப்புப் படித்த பெண்களுக்கு திருமண உதவித் தொகையாக *50,000* ரூபாயும், தாலிக்கு *4* கிராம் இலவசத் தங்கமும் வழங்கி, பணிபுரியும் பெண்

அரசு ஊழியர்களுக்கு குழந்தையைப் பேணிப் பாதுகாக்கும் பொருட்டு, ஆறு மாத காலம் சம்பளத்துடன் மகப்பேறு விடுமுறையும் வழங்கிய தாய்க்குலம் போற்றும் மனித குல மாணிக்கமே, உங்களைப் போற்றுகிறேன் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி)

அம்மா, கேபிள் டி.வி. மூலமாக மக்கள் பணத்தைக் கொள்ளையடித்து வந்த கருணாநிதியின் குடும்பத் திட்டத்தை முறியடித்து, கேபிள் டி.வி.–யை அரசுடைமையாக்கி, குறைந்த கட்டணத்தில் மக்கள் பயன்பெறும் விதத்தில் கேபிள் டி.வி. இணைப்பு வழங்க நடவடிக்கை எடுத்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை இந்த நாடே போற்றுகிறது தாயே! (மேசையைத் தட்டும் ஒலி)

அம்மா, மதுரை மாநகராட்சியில் மக்களின் வரிப் பணத்தை வைத்து மத்திய அரசால் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட சுமார் 900 கோடி ரூபாயையும் முறையாகச் செலவு செய்யாமல், மாநகராட்சி அதிகாரத்தில் இருக்கும் தி.மு.க. வர்க்கத்தினர் பல கோடி ரூபாய் ஊழல்கள் செய்திருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் மதுரை மாநகராட்சியில் நடைபெற்ற ஊழல்களை விசாரிக்க விசாரணைக் கமிஷன் ஒன்றை அமைத்திட தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மதுரை மக்கள் விரும்புகிறார்கள் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி)

அம்மா, புரட்சித் தலைவர் ஆட்சியிலும், அவர் வழிவந்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியிலும், மதுரை மாநகரம் கோயில் நகரமாகச் சிறப்புப் பெற்றிருந்தது. அதற்குப் பின்பு கோயில் நகரமாக இருந்த மதுரையை கொலைகார நகரமாக ஆக்கிய முந்தைய தி.மு.க. அரசில் அதிகார துஷ்பிரயோகம், அராஜகம், கொலை, கொள்ளை, சொத்து அபகரிப்பு ஆகிய சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டு, மு.க. அழகிரியின் அடியாட்கள் வளர்ந்து மதுரையை நாசப்படுத்தி விட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மகாபாரதத்தில் நடந்ததைப்போல கொடூரமான அரக்கனை, கம்சனை அழிப்பதற்கு அவதாரம் எடுத்த கிருஷ்ண பரமாத்மாவைப்போல், இன்று மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) கொலைகார நகரமாக இருந்த மதுரையை மீட்டு, மீண்டும் கோயில் நகரமாக ஆக்கிக் காட்டிய வீரத் தாய் அவர்களுக்கு மதுரை மக்கள் நன்றியைத் தெரிவிக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



அம்மா, கடந்த காலங்களில் மதுரை மத்திய தொகுதி, மேற்குத் தொகுதி மற்றும் திருமங்கலம் தொகுதிகளில் நடந்த இடைத் தேர்தல்களில், முந்தைய தி.மு.க. அரசில் பண பலம், அதிகார பலம், ரௌடியிசம் போன்றவற்றால் ஜனநாயகத்தின் குரல்வளையை நெரித்து, அதன்மூலம் வெற்றிகண்ட தி.மு.க.வினர், அதே பாணியில் தென்னகப் பகுதி முழுவதும் வெற்றிபெற்றுவிடுவோம் என ஆணவத்துடன் 2011–ல் அ.தி.மு.க.–வே இருக்காது என்று சொன்ன மு.க. அழகிரி, தனது கோட்டையாகக் கனவு கண்ட மதுரை மாவட்டத்தில் ஒரு தொகுதியில்கூட வெற்றி பெற முடியாமல், இன்று இருக்கிற இடம் தெரியாமல், காணாமல் போய்விட்டார் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தில் வேளாண்மையை வளப்படுத்தவும், குடிநீர் ஆதாரத்தைப் பெருக்கவும், தமிழக நதிகளை இணைக்கின்ற திட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து பல ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கி, விவசாயிகளின் வாழ்வை வளப்படுத்த திட்டம் வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சரை, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை, விவசாயப் பெருங்குடி மக்கள் மனதார வாழ்த்துகிறார்கள் தாயே!

*பிற்பகல் 12–35*

அம்மா, என்னுடைய தொகுதிக்கு நான் சில கோரிக்கைகளைக் கேட்கிறேன். அவற்றை அம்மா அவர்கள் கருணையுள்ளங்கொண்டு செய்து கொடுக்கவேண்டுமாய்ப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய மதுரை வடக்குத் தொகுதி மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க, கடந்த ஆட்சிக் காலத்திலே 46 கோடி ரூபாயில் ஜவஹர்லால் நேரு புனரமைப்புத் திட்டத்தில் அத்தொகுதி சேர்க்கப்பட்டாலும், அந்தத் திட்டத்தைக் கிடப்பில் போட்டுவிட்டார்கள். ஏறத்தாழ 580 ஏக்கர் நிலப்பரப்பு உள்ள வண்டியூர் கண்மாயில் நீர்ப்பாசனம் உள்ள நிலங்கள் எல்லாம் வீட்டு மனைகளாக ஆகிவிட்டபடியால், தற்போது அந்த ஏரிப் பகுதியை, மக்களின் குடிநீர்ப் பயன்பாட்டிற்காக மேன்மைப்படுத்தி, அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்கவேண்டும். அந்தத் திட்டத்திலே, வண்டியூர் கண்மாய்க்கு சாத்தையாறு அணையிலிருந்தும், அழகர்கோயில் மலையிலிருந்தும், உபரி நீர் வந்து கொண்டிருக்கிற பிரதான கால்வாயினைச் சீரமைத்து, இந்த ஏரியை ஆழப்படுத்தியும், சுற்றுச்சுவர் கட்டியும் வேலைகளைச் செய்தால், மதுரை வடக்குப் பகுதியில் வாழும் மக்களின் குடிநீர்ப்

பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உதவியாக இருக்கும். கருணையுள்ளம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள், சென்னைக்கு புதிய வீராணம் திட்டத்தைச் செயல்படுத்தியதுபோல், மதுரைக்கும் இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்கவேண்டுமாய்ப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன், தாயே!

எனக்கு இந்த அவையிலே பேச வாய்ப்பு வழங்கிய, நான் நித்தம் நித்தம் வணங்கும் என்னுடைய குலதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்கி, நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன் தாயே! *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தே.மு.தி.க. சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே.டி. ராஜா.

**திரு. ஏ.கே.டி. ராஜா:** மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கேப்டன் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, இச்சபையில் அமர்ந்திருக்கும் அனைத்துக் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களே, உங்கள் அனைவருக்கும் முதற்கண் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு என் கன்னிப் பேச்சைத் துவங்குகின்றேன்.

தமிழ்நாட்டின் தலையெழுத்தை நிர்ணயித்துக் கொண்டிருக்கும் இந்தச் சபையில், தமிழ்நாட்டு வரலாற்றுக்கு ஆதாரமாக, தமிழ் மக்களின் வாழ்விற்கும், வளர்ச்சிக்கும் இதயமாக விளங்கிக் கொண்டிருக்கும் இச்சபையில் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். போன்றவர்கள் முதலமைச்சராக அமர்ந்த இந்தச் சபையில், தமிழுக்கும், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும் பாடுபட்ட பல உறுப்பினர்கள் இருந்த இந்தச் சபையில், என்னைப் போன்ற சாதாரணமானவனை, இன்னும் குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால், உசிலம்பட்டியில் ஒரு டீக்கடை நடத்தி வந்த என்னை ஒரு மாவட்டச் செயலாளராக ஆக்கி, பின்பு சட்டமன்ற உறுப்பினராக ஆக்கி புனிதமான இந்தச் சபையில் மக்கள் பணியாற்றுவதற்கு வாய்ப்பளித்த தே.மு.தி.க. நிறுவனத் தலைவரும், இம்மாபெரும் சட்டமன்றத்தின் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருமான, எனது உயிரினும் மேலான எனது இதய தெய்வம் கேப்டன் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*



என்னைப் பெற்றெடுத்த தாய், என் வாழ்விலும், வளர்ச்சியிலும் காட்டுகின்ற அக்கறையைக் காட்டிலும் ஒரு படிக்கு மேலாக எனது வளர்ச்சியில் அக்கறை காட்டிக் கொண்டிருக்கிற எனது பாசமிகு அண்ணியார் அவர்களுக்கும், எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* எனது வெற்றிக்குப் பிரச்சாரம் செய்ய வந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கேப்டன் அவர்களுக்கு மீண்டும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நான் சார்ந்த தே.மு.தி.க.—வினருக்கும், அ.தி.மு.க. உள்ளிட்ட அனைத்து கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கும், திருப்பரங்குன்றம் வாக்காளப் பெருமக்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த அரசு மக்களுக்கு நன்மை செய்யும் என்ற நம்பிக்கையுடன் நமது கூட்டணிக்கு மாபெரும் வெற்றியை அளித்துள்ளார்கள். அந்த நம்பிக்கையுடன் நான் கீழ்க்கண்ட எனது கோரிக்கைகளையும், வேண்டுகோளையும் இந்தச் சபையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12—40*

நில அபகரிப்பு புகாரில், புகார் மனு பெற்றவுடன் உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து பாதிக்கப்பட்டவர்களின் வயிற்றில் பாலை வார்க்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என் சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஆட்சியில் மதுரையில் ரௌடி ராஜ்ஜியம், கட்டப் பஞ்சாயத்து, அடுத்தவர்களின் நிலம் அபகரிப்பு என்றிருந்த நிலையில், நாட்டில் தெற்கு, வடக்கு, கிழக்கு, மேற்கு என்று நான்கு திசைகள் இருப்பதைப்போல, முன்னாள் முதல்வர், அவருடைய பிள்ளைகளையும் நான்கு திசைகளுக்கும் அனுப்பினார். தெற்கே ஒரு மகன்; கிழக்கே ஒரு மகன்; மேற்கே ஒரு மகன்; வடக்கே ஒரு மகள் எனத் தமிழ்நாட்டையே கூறுபோட்டவர்களின் கொடுங்கோல் ஆட்சி ஒழிய வேண்டுமெனவும், மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆட்சி மலர வேண்டுமெனவும் எண்ணி, கூட்டணி ஏற்படுத்தி, நல்லாட்சி அமையச் செய்த மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், எனது இதய தெய்வம் கேப்டன் அவர்களுக்கும், *(மேசையைத் தட்டும் ஒலி)* அவரது அன்பு உள்ளங்களுக்கும் எனது கோடானு கோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குடும்ப அரசியலை அடியோடு ஒழித்து, இன்றைக்கு இந்தச் சட்டசபையில் அவர்களை எதிர்க்கட்சியாகக்கூட இல்லாமல், மக்கள் அவர்களை ஒரு குழுவாக ஆக்கியுள்ளனர். ஆனால், இந்தப் புனிதமான தீர்ப்பை ஏற்க மனமில்லாமல், தினமும் ஒரு பொய்யைக் கூறி, சட்டசபைக்கு வருகின்றபோதெல்லாம் ஏதாவது ஒரு காரணம் கூறி, சட்டசபைக்கு வருவதைத் தவிர்க்கின்றனர் தி.மு.க.—வினர். ஓட்டுப் போட்டு அவர்களைத் தேர்ந்தெடுத்த மக்களுக்குச் செய்யும் சேவையா இது?

“எந்தத் தேர்தல் வந்தாலும், இடைத் தேர்தல் வந்தாலும், தென் மாவட்டங்களில் என்னை மீறி யாரும் ஜெயிக்க முடியாது” என்று கொக்கரித்துக் கொண்டிருந்த மு.க. அழகிரி, “எங்கும், எதிலும் திருமங்கலம் பார்முலா பயன்படுத்தப்படும்; தென் மாவட்டங்களில் உள்ள அனைத்துத் தொகுதிகளிலும் எங்கள் கூட்டணி வெற்றி பெறும்” என முழக்கமிட்ட முன்னாள் முதல்வரின் மகன் அழகிரி, இப்போது எங்கே போனார் என்றே தெரியவில்லை. மதுரை மாவட்டத்தில் 10 தொகுதிகளிலும், தென் மாவட்டங்களில் பெரும்பாலான இடங்களிலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கூட்டணியே வெற்றி வாகை சூடியது; திருமங்கலம் ஃபார்முலா பொய்யாகிப் போய்விட்டது.

கோயில்களில் ஒரு கால பூஜையாவது செய்ய வைப்பீடு செய்துள்ள 25 ஆயிரம் ரூபாய் தொகையை, ஒரு இலட்சமாக உயர்த்தி வழங்கவும், கிராமப் பூசாரிகளுக்கான ஓய்வூதியத்தை 750 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாக உயர்த்தி வழங்கவும், ஏழை விவசாயிகள் பயன்பெறும் வகையில், இலவச ஆடு, மாடு வழங்கவும் தமிழ்நாடு கூட்டுறவுத் துறையின்மூலம் பெறும் கடனை ரூ.90 கோடியிலிருந்து ரூ.150 கோடியாக உயர்த்தவும், உரிய காலத்தில் கடனைத் திருப்பிச் செலுத்துபவர்களுக்கு வட்டியில்லாத பயிர்க் கடனாக 3,000 கோடி ரூபாய் வழங்கவும் உத்தரவிட்ட மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், அரசுக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் மதிய சத்துணவு வழங்கினார்கள். அதேபோல, மாண்புமிகு முதல்வர் அவர்கள், பள்ளியில் முதல் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு காலை உணவும் வழங்கும்படி மிகத் தாழ்மையுடன் தே.மு.தி.க. சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன்.



மாண்புமிகு முதல்வர் அவர்கள் முதன்முதலாக நதிநீர் இணைப்புத் திட்டத்திற்கு இந்த பட்ஜெட்டில் நிதி ஒதுக்கியுள்ளார்கள். அதேபோல, எனது திருப்பரங்குன்றம் தொகுதியில் நிலையூர் கால்வாய்த் திட்டம், பனையூர் கால்வாய்த் திட்டம், தென்கால் கால்வாய்த் திட்டம் போன்ற திட்டங்களில், இன்னும் சீரமைக்கப்படாமல் உள்ள கண்மாய்களைச் சீரமைக்க அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனது திருப்பரங்குன்றம் சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ள மிகவும் புகழ்பெற்ற கோயிலான, அறுபடை வீடுகளில், முதல் படை வீடான திருப்பரங்குன்றம் முருகன் கோயிலுக்கு வரும் பக்தர்களின் வசதிக்காக, நவீன வசதிகளுடன்கூடிய தங்கும் விடுதி கட்டித் தருமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். கிரிவலப் பாதையைச் சுற்றி சுகாதாரமான குடிநீர் வசதி, சாலை வசதி, பூங்காக்கள் அமைத்திட வேண்டும். தெப்பக்குளத்தில் தண்ணீரை நிரப்பி, படகு சவாரியை சுற்றுலாத் துறையின்மூலம் உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும். மீதமுள்ள நிதியிலிருந்து இந்த ஆண்டே இதற்காக ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை என்றாலே, அன்னை மீனாட்சி அல்லது மல்லிகைப் பூதான் நமது நினைவுக்கு வரும். திருப்பரங்குன்றம் தொகுதியில், மல்லிகை விவசாயத்தை நம்பி ஏராளமான விவசாயிகள் உள்ளனர். எனவே, திருப்பரங்குன்றம் தொகுதியில் வாசனைத் திரவியங்கள் தயாரிக்கும் சென்ட் தொழிற்சாலையை அமைக்க வேண்டுமென்று மிகத் தாழ்மையுடன் முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12—45

கைத்தறி நெசவாளர்களின் துயர் துடைக்கும் வகையில், அவர்களுக்கு கூலி உயர்வு, இருப்பிடத்திற்கு இலவச மின்சாரம் வழங்கவும், நூல் வகைகள் தங்குதடையின்றிக் கிடைக்கவும், நெசவாளர்களுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் குறைந்த விலையில், தவணை முறையில் வீடுகள் வழங்கவும் ஆவனசெய்யவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அவணியாபுரம் நகராட்சியிலுள்ள காவல் நிலையம் அதிக தூரத்தில் உள்ளதால், சின்ன அனுப்பானடி, பெரிய அனுப்பானடி, சிந்தாமணி போன்ற கிராமங்களுக்கு காவல் மையங்கள் அமைத்துத்

[திரு. ஏ.கே.டி. ராஜா] [2011 ஆகஸ்ட் 9

தருமாறு தாழ்மையுடன் அரசைக் கேட்டுக்கொள்கின்றேன். எங்கள் தொகுதியில் 58 நடுநிலை, உயர்நிலைப் பள்ளிகள் உள்ளன. அந்தப் பள்ளிகளில் 30 ஆயிரம் மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர். பெரும்பாலும் மாணவ, மாணவிகள் மேற்படிப்பு படிப்பதற்குப் போதிய வசதிகள் இல்லாததன் காரணமாக, படிப்பைப் பாதியில் நிறுத்திவிடுகின்றனர். எனவே, எங்கள் தொகுதிக்கு அரசு கலைக் கல்லூரி அமைத்துத் தருமாறு மிகத் தாழ்மையுடன் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் திருப்பரங்குன்றம் நகரிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தினை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டும். சுற்றுப்புறக் கிராமங்களில் சுமார் 1 இலட்சத்து 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நடுத்தர மக்கள் உள்ளனர். மதுரை அரசு மருத்துவமனைக்குச் செல்ல தூரம் அதிகமாக உள்ளதால், போவதற்குச் சிரமப்படுவதால் மற்றும் போக்குவரத்து இடையூறுகள் உள்ளதால், உயிர்ச் சேதமும் ஏற்படும் வாய்ப்புள்ளதால், எனது தொகுதியில் 24 மணி நேரமும் இயங்கும் அரசு மருத்துவமனையை ஏற்படுத்தி, பெரிய மருத்துவர்கள் முழு நேரம் பணியாற்றவும் மற்றும் மருத்துவ வசதிகளுக்கு அறுவை சிகிச்சைப் பிரிவு உள்ளிட்ட பல பிரிவுகளை ஏற்படுத்தித் தருமாறு அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பரங்குன்றம் தொகுதியிலுள்ள அஸ்தம்பட்டி மருத்துவமனையில் காச நோய், அம்மை போன்ற நோய்களுக்குப் போதுமான அளவுக்கு மருத்துவ வசதிகள் இல்லை. எனவே, மேற்கண்ட அஸ்தம்பட்டி மருத்துவமனையின் தரத்தை உயர்த்தவும், அதற்குப்போதிய மருந்து வசதிகள் செய்து தருமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

திருப்பரங்குன்றம் தொகுதியில், பல கிராமங்களில் இன்றுவரை குடிநீர் வசதி போதுமான அளவில் இல்லை. எனவே, வைகை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாக தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க அரசு ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

திருப்பரங்குன்றத்திலிருந்து 15 கிலோ மீட்டர் தூரத்தில் மதுரை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் அருகில் தாலுகா அலுவலகம் உள்ளது. மதுரை தெற்கு தாலுகா அலுவலகத்தை திருப்பரங்குன்றம் தொகுதிக்குட்பட்ட நகரத்தில், பொது மக்கள் நலன் கருதி மாற்றியமைத்துத் தருமாறு அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.



2011 ஆகஸ்ட் 9] [திரு. ஏ.கே.டி. ராஜா]

திருப்பரங்குன்றம் தொகுதி, அவணியாபுரம் நகராட்சியில் வெள்ளக்கல் என்னுமிடத்தில் மதுரை மாநகராட்சியின் குப்பைகள் கொட்டப்படுகின்றன. இக்குப்பைகளை எரிக்கும்போது புகையினால் அவணியாபுரம் மற்றும் திருப்பரங்குன்றம் நகராட்சியில் உள்ள பொது மக்கள், குழந்தைகள் ஆஸ்துமா, காச நோய்களால் பாதிக்கப்படுகின்றனர். இதற்கு அரசு உடனே நடவடிக்கை எடுக்குமாறு மிகவும் தாழ்மையுடன் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அவணியாபுரம் நகராட்சியில் உள்ள வெள்ளக்கல் வார்டு 15 இல் 350 குடும்பங்கள் 70 ஆண்டுகளாக வசித்து வருகின்றன. அவர்களுக்குப் பட்டா வழங்குமாறு அரசைத் தாழ்மையுடன் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

திருப்பரங்குன்றம் நகரில் பல குடிசைகளும், வீடுகளும், சிறு தொழிற்சாலைகளும் அதிகமாக உள்ளன. மேற்கண்ட இடங்களில் தீ விபத்து ஏற்படும்போது மதுரையிலிருந்து தீயணைப்பு வாகனம் வருவதற்குள் சேதாரம் ஏற்படுகின்றது. எனவே, திருப்பரங்குன்றம் நகரில் ஒரு துணை தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று பணிவுடன் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

திருப்பரங்குன்றம் ஒன்றியத்திலுள்ள விரகனூர் ஊராட்சி, நெடுங்குளத்தில் சன்ரைஸ் பிளீச்சிங் நிறுவனத்தின் கழிவுநீர், அப்பகுதி மக்களின் குடிநீரில் கலந்துவிடுகின்றது. இதனால், பொதுமக்கள் பாதிக்கப்படுகின்றனர். அதற்கு உடனடியாகத் தீர்வு காணுமாறு அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பரங்குன்றம் ஒன்றியத்திற்குட்பட்ட நிலையூர்–கம்பிக்குடி கால்வாய்த் திட்டத்தை விரைவுபடுத்த வேண்டுகிறேன். தொட்டியம்பட்டி, பெரிய கூடக்கோயில், நெடு மதுரை போன்ற கிராமங்கள் கால்வாய் அத்திட்டத்தின் செயல்பாட்டில் விடுபட்டதால் அக்கால்வாயை நிலையூர்–கம்பிக்குடி கால்வாய்த் திட்டத்துடன் இணைக்குமாறு அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இச்சபையில் கண்ணியத்தைக் காக்கும் வகையில், எனது மதிப்பிற்குரிய தலைவர் கேப்டன் அவர்களுக்கும், நான் சார்ந்த தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்திற்கும் பெருமை சேர்க்கின்ற வகையில், எனது திருப்பரங்குன்றம் தொகுதிக்கு பல நன்மைகள் அரசிடம் கிடைக்கும் வகையில் செயல்படுவேன் என்று உறுதி கூறி, உங்கள் அனைவருக்கும் நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 12–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. மலரவன்.*

***திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைகளின் இதய தெய்வம், ஏழை மக்களின் இதய தெ.ய்வம், நாட்டு மக்களின் நம்பிக்கை நட்சத்திரம், நாங்கள் தினந்தோறும் உச்சரிக்கும் சுப்ரபாதம், கல்லுக்குள் இருக்கும் தேரைக்கும் உணவு கொடுத்து வாழ வைக்கும் இறைவனைப்போல், கழகத்தில் இருக்கும் 1½ கோடி தொண்டர்களை கண்ணை இமை காப்பதுபோல் கட்டிக் காத்து வரும் (மேசையைத் தட்டும் ஒலி) கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், 3–வது முறையாகத் தமிழகத்தின் முதல்வராகப் பொறுப்பேற்று நாட்டு மக்களைக் காத்து வரும் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

“தேனாறு பாயுது, செங்கதிர் சாயுது, ஆனாலும் மக்கள் வயிறு காயுது” என்று சொன்னான் மக்கள் கவிஞன் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம். இன்னும் ஒருபடி மேலே போய் “நாட்டிலுள்ள மக்களுக்கெல்லாம் அரை வயிற்றுக் கஞ்சி கிடைக்கட்டும், அதுவரையில் ஐ.நா. சபையின் கொடி அரைக் கம்பத்தில் பறக்கட்டும்” என்றான் கவிஞர் காமராசன்.

இந்தியா சுதந்திரம் பெற்று 64 ஆண்டுகள் ஆகியும், இந்தியாவில் 40 கோடி பேர் ஒரு வேளை உணவு இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள் என்று இந்தியாவின் திட்டக் கமிஷன் துணைத் தலைவர் மாண்புமிகு திரு. மான்டேக் சிங் அலுவாலியா அவர்கள் தெரிவித்துள்ளார்கள். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் அந்த நிலை தமிழ்நாட்டில் இல்லை என்பதை நாட்டிற்குப் பறைசாற்றும் விதமாக, தமிழ்நாட்டில் உள்ள ரேஷன் கார்டு வைத்திருப்பவர்கள் அனைவருக்கும் 20 கிலோ அரிசியை இலவசமாக வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு அந்த மக்கள் அனைவரும் அம்மா அவர்களை வாயார வாழ்த்துகிறார்கள்.

கடைக்கோடி தொண்டனாக இருந்த என்னை கோவை மாநகராட்சி மேயராக ஆக்கினீர்கள். 2 முறை சட்டமன்ற உறுப்பினராக்கி, இந்த சட்டப் பேரவையில் பேசுகின்ற பெருவாய்ப்பை எனக்கு அளித்த எங்கள் குல விளக்கு மாண்புமிகு அம்மா



அவர்களுக்கு என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் அம்மா அவர்களின் காலடியில் சமர்ப்பிக்கின்றேன்.

அம்மா அவர்களை அனைத்துத் தரப்பு மக்கள் பாராட்டும் வகையில் இந்த பட்ஜெட் அமைந்திருக்கிறது. முதியோர் உதவித் தொகையை உயர்த்தி ஆயிரம் ரூபாயாக அறிவித்துள்ளீர்கள். முதியோர் உதவித் தொகை பெறும் அனைவரும் அம்மா அவர்களை “மகராசி, நன்றாய் இருக்க வேண்டும்” என்று மனதார வாழ்த்துகிறார்கள். “என்னுடைய மகன் கைவிட்டாலும் பரவாயில்லை, மகராசி எங்கள் அம்மா இருக்கிறார்கள், கடைசிக் காலத்தை நாங்கள் மகிழ்ச்சியோடு நடத்துவோம்” என்கிறார்கள்.

உலகத் தமிழர்களின் ஒட்டுமொத்த தலைவன் நான்தான் என்று தம்பட்டம் அடித்தவர்கள் உண்டு. அவர்களுக்கு தம்பட்டம் அடிக்கத்தான் தெரியும். நாட்டு மக்களைப் பற்றி சிந்திக்கவோ, செயல்படுத்தவோ தெரியாது. அவர்கள் செய்ய முடியாத காரியத்தையெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்கள் செய்து வருகிறார்கள். அதனால்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் இலங்கையிலிருந்து அகதிகளாக வந்துள்ள தமிழர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கி இருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதை அனைத்து தமிழ் மக்களும் பாராட்டுகிறார்கள். உலகத் தமிழர்களின் ஒட்டுமொத்த குத்தகைதாரன் நான்தான் என்று சொன்னவர்கள் இன்றைக்கு இருக்கின்ற இடம் தெரியாமல் போய்விட்டார்கள். ஏனென்றால், அவர்களுடைய மக்களைப் பற்றிதான் சிந்தித்தார்களேதவிர, நாட்டு மக்களைப் பற்றி சிந்திக்கவில்லை. இதனால்தான் தி.மு.க. என்ற கட்சி இன்றைக்கு திஹார் முன்ஜாமீன் கழகமாக மாறிவிட்டது. இலங்கைத் தமிழர்களுக்கு அம்மா உதவி செய்ததால் இன்றைக்கு உலகத் தமிழர்கள் மாண்புமிகு அம்மா அவர்களை வாழ்த்துகிறார்கள்.

“ராமாயி வயதுக்கு வந்துவிட்டாள், தாலிக்குத் தங்கம் இல்லை” என்று போஸ்டர் அடித்து ஒட்டினார் கருணாநிதி. ஆனால், அவரால் சிந்திக்க முடியவில்லை. ஆனால், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாலிக்கு தங்கம் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்த ஏழை மக்களுக்கு தாலிக்குத் தங்கம் மட்டுமல்ல, அதோடு சேர்த்து திருமணத்திற்கு 25 ஆயிரம் ரூபாய் பணமும் தருகிறேன் என்று சொல்லி இன்றைக்குக் கொடுத்திருக்கிறீர்கள். அந்த மக்கள் உங்களை வாழ்த்துகிறார்கள்.

(மேசையைத் தட்டும் ஒலி) அப்பெண்களிலே படித்தவர்களுக்கு, பட்டம் பெற்றவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறீர்கள். அதை அனைவரும் வாழ்த்துகிறார்கள். யாருடைய எண்ணத்திலும் உதிக்காத சிந்தனை அம்மா அவர்களின் எண்ணத்தில் உதித்தது. அந்த சிந்தனையால் இன்றைக்கு ஏழைகள் வளமோடு வாழ்கிறார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967–ல் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றதும், பத்திரிகையாளர்கள் அண்ணாவைப் பார்த்து "நீங்கள் முதலமைச்சர் ஆகிவிட்டீர்கள். யாருக்கு என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்டார்கள். அப்போது பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார், "மாடியில் இருக்கும் மாடசாமி சாப்பிடும் காபிக்கும் சர்க்கரை தேவை; குடிசையில் இருக்கும் குப்பன் சாப்பிடும் கூழுக்கும் உப்பு தேவை. இரண்டையும் நான்தான் கொடுக்க வேண்டும். யாருக்கு எதை எப்போது கொடுப்பது என்பது எனக்குத் தெரியும்" என்றார். ஆனால் சர்க்கரை, உப்பு இரண்டும் வழங்குவது மட்டுமல்லாமல், அனைத்து மக்களும் பயன்படும் வகையில் இந்த பட்ஜெட் அமைந்துள்ளது. இந்த பட்ஜெட் அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்திரமாக விளங்குகிறது.

ஒரே ஆண்டில் மின்வெட்டு இல்லாத மாநிலமாக தமிழ்நாடு மாற்றப்படும் என்று அம்மா அவர்கள் அறிவித்திருப்பது மிகவும் மகிழ்ச்சிகரமானது. இந்த அறிவிப்பால் தொழில் அதிபர்கள் மட்டுமல்லாது தொழிலாளர்களும் மகிழ்ச்சி அடைகிறார்கள்.

பிற்பகல் 12–55

கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் மின்சாரம் கிடைக்காமல் கோவையில் உள்ள தொழிலதிபர்கள் வீதிக்கு வந்து போராட்டம் நடத்தினார்கள். மின்சாரத்தைக் கண்டு பிடித்தவர் தாமஸ் ஆல்வா எடிசன். மின்வெட்டைக் கண்டு பிடித்தவர் ஆற்காடு வீராசாமி என்று மாணவர்கள் கூறும் அளவிற்கு முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு மிகவும் மோசமாக இருந்தது. இன்றைக்கு அந்த நிலை மாறி, மின்வெட்டு இல்லாத மாநிலமாக மாண்புமிகு அம்மா அவர்கள் மாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

குடும்ப அட்டையுள்ள 1.83 கோடி குடும்பங்களுக்கு உணவு வழங்க மானியமாக 4,500 கோடி ரூபாய் ஒதுக்கி இந்த மக்களை வாழ வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். சமூகப் பாதுகாப்புத்



திட்டத்தின்கீழ் முதியோர் ஓய்வூதியதாரர்களுக்காக 2,842 கோடி ரூபாய் ஒதுக்கி உள்ளீர்கள். மின்சார வாரியத்திற்கு மானியமாக 2,196 கோடி ரூபாய் வழங்கியிருக்கிறீர்கள்.

இலவசமாக மிக்ஸி, கிரைண்டர், மின் விசிறி ஏழை எளிய மக்களுக்கு வழங்க 1,250 கோடி ரூபாய்; குழந்தைகள் சாப்பிடும் சத்துணவுத் திட்டத்திற்கு 1,246 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது; பசுமை வீடுகள் திட்டத்திற்கு 1,081 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மாணவ, மாணவியர் பள்ளிகளில் இடை நிற்றலைக் குறைக்க 10, 11–ஆம் வகுப்பு படிப்போருக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ரூ.1,500 ரூபாயும், 12–ஆம் வகுப்பு படிப்போருக்கு 2,000 ரூபாயும் வழங்கப்படும் என்று அறிவித்திருப்பது கிராமப்புற மாணவர்களுக்கு மிகவும் பயன் உள்ளதாக இருக்கும்.

மாண்புமிகு அம்மா, உங்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் கல்வித் துறை வளர்ச்சி அடைந்தது. மாணவர்கள் நலனை மனதில் வைத்து அவர்களுக்கு இலவசமாக பாடப் புத்தகங்களை வழங்கும் திட்டத்தை நீங்கள்தான் கொண்டு வந்தீர்கள். +1, +2 படிக்கும் மாணவ, மாணவியருக்கு இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் கொண்டு வந்தீர்கள். அதனால்தான் இன்றைக்கு கிராமப்புறங்களில் கல்வி வளர்ச்சி அதிகரித்துள்ளது. இதைப்பற்றியெல்லாம் யாரும் சிந்திக்கவில்லை, அவர்களுடைய குடும்பத்தை பற்றி மட்டும்தான் சிந்தித்தார்கள். அதனால்தான் இன்றைக்கு அவர்கள் எல்லாம் திஹார் சிறையிலும், கோவை, பாளையங்கோட்டை சிறையிலும் குடி கொண்டு இருக்கிறார்கள்.

அடுத்த கல்வியாண்டிலிருந்து பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு நான்கு செட் சீருடைகள் வழங்கப்படும் என்ற திட்டம் கல்வி வளர்ச்சிக்கு பெரும் துணையாக இருக்கும். 6 ஆம் வகுப்பு மற்றும் அதற்கு மேற்பட்ட வகுப்பிலும் படிக்கும் மாணவர்களுக்கு அரைக்கால் சட்டைக்குப் பதில் முழுக்கால் சட்டை வழங்கப்படும், அதேபோல் மாணவியர்களுக்கு பாவாடை, தாவணிக்குப் பதில் சல்வார் கமீஸ் வழங்கப்படும் என்ற அறிவிப்பு மாணவ மாணவிகள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

மக்களுக்கு குறைந்த செலவில் கேபிள் டி.வி. வசதி கொடுப்பதற்கு திட்டம் கொண்டு வந்துள்ளீர்கள். 2001–2006 ஆண்டுகளில் மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதே

இந்தக் கேபிள் டி.வி.–ஐ மக்களுக்கு குறைந்த செலவில் கொடுக்க வேண்டும் என்பதற்காக சட்டம் கொண்டு வந்தீர்கள். ஆனால், அன்றைக்கு சுயநலம் எண்ணம் கொண்ட கருணாநிதி சூழ்ச்சி செய்து தடுத்தார்.

சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியை இரண்டு கோடி ரூபாயாக உயர்த்திக் கொடுத்துள்ளீர்கள். இதையெல்லாம் நாங்கள் பயன்படுத்தி மக்களுக்கு தேவையானதை செய்வதற்கு ஏதுவாக இருக்கும்.

அம்மா, மகாபாரதத்திலே ஒரு காட்சி; பதினெட்டு நாள் பாரதப் போர் முடிகிறது. அதர்மத்தின் தலைவனாக இருந்த துரியோதனன் தோற்று ஓடுகிறான். தர்மத்தை நிலை நாட்டிய பாண்டவர்கள் வெற்றி பெறுகிறார்கள். துரியோதனன் ஓடோடி வந்து பீஷ்மரின் தோளைப் பிடித்து உலுக்கி, "பீஷ்மாச்சாரியாரே! போரில் நாம் ஏன் தோற்றோம்? நம்முடைய படை பதினொரு அக்ராசனை கொண்டதாயிற்றே! ஐந்து அக்ராசனை கொண்டதுதானே பாண்டவர்களுடைய படை! அப்படியிருக்கும்போது நாம் எப்படித் தோற்றோம்?" என்று பீஷ்மரை கேட்டான். அதற்கு பீஷ்மர் சொன்னார், "அன்றொரு நாள் அரசவையில் ஒரு பெண்ணை மானபங்கப்படுத்தினீர்களே! அந்தப் பெண் விட்ட சாபத்தினால்தான் தோற்றீர்கள்" என்றார். இதை நம்முடைய சட்டமன்ற கொறடாவும் கோடிட்டுக் காட்டினார்கள். இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இந்த அவையில் 1989ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் தேதி அப்படி ஒரு கொடுமையைச் செய்து காட்டினார்கள். அதனால்தான் அந்த துரியோதனக் கூட்டம், அன்றைக்கு இந்த அவையிலே செய்ததற்கு இன்றைக்கு அவர்கள் நாட்டை விட்டு ஓடக்கூடிய அளவிற்கு மக்கள் பாடம் புகட்டியிருக்கிறார்கள். இந்த அதர்மத்தின் வழிவந்த துரியோதனக் கூட்டத்தை கடந்த தேர்தலில் மக்கள் அடித்து நொறுக்கி இருக்கிறார்கள். இன்றைக்கு அறங்கள் செழிக்கவும், ஆலயங்கள் தழைக்கவும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறீர்கள்.

இந்த பட்ஜெட்டில் குறிப்பிட்ட அனைத்து சாதனைகளையும் சொல்லுவதற்கு ஒரு நாள் போதாது தாயே! வரியே இல்லாமல் மக்களுக்கு வாழ்வளிக்கும் பட்ஜெட்டாகத் திகழ்கிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த திட்டங்கள் மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும் என்ற கவனத்தோடு இன்றைக்கு திட்ட அமலாக்கத் துறை என்ற ஒரு புதிய துறையை உருவாக்கி அதன்மூலம் நன்கு செயலாற்றிக் கொண்டிருக்கிறீர்கள்.



நாட்டு மக்களின் நலனைப் பற்றி மட்டுமே கருத்தில்கொண்டு இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆட்சி நடத்துகிறார்கள். அதனால்தான் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியை யாரும் அசைக்க முடியாது என்று நாட்டு மக்கள் கூறுகிறார்கள். இங்கே 'எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்' என்று மக்களுக்கு எல்லா வளமும் கிடைக்க ஆட்சி நடத்துகிறீர்கள். ஆனால், முன்பு ஆட்சியில் இருந்தவர்கள், மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் மக்களை ஏமாற்ற இலவசத் திட்டங்களைச் சொன்னார்கள். இரண்டு ஏக்கர் நிலம் கொடுப்போம் என்று சொன்னார்கள், ஆனால் யாருக்கும் கொடுக்கவில்லை. இப்படித்தான் மக்களுக்கு ஆசை வார்த்தைகளைச் சொல்லி ஆட்சிக்கு வந்தார்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னது அனைத்தையும் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். அம்மா, உங்களுக்கு துரோகம் செய்தவர்கள் யாரும் உருப்பட்டது கிடையாது. தேர்தலுக்கு முன்னால் ஓடியவர்கள் இன்றைக்கு இருக்கின்ற இடம் தெரியாமல் இருக்கிறார்கள். அந்தத் துரோகிகளுக்கும் மக்கள் மரண அடி கொடுத்திருக்கிறார்கள்.

விவசாயிகளின் தனி நபர் வருமானத்தைப் பெருக்க திட்டங்கள், உணவு உற்பத்தியை உயர்த்த திட்டங்கள். மக்களை வாழ வைக்கும் திட்டங்களாக, ஆவின் மூலமாக நடமாடும் கால்நடை மருத்துவமனை, சுற்றுச்சூழலைப் பாதுகாக்க தனிக் கவனம் செலுத்தும் திட்டம். அண்ணல் காந்தியடிகள் கண்ட ராம ராஜ்யத்தை உருவாக்க கிராம மக்களுக்கு ஆடுகளும் மாடுகளும் வழங்கக்கூடிய அற்புதமான திட்டத்தை அம்மா அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். இந்தத் திட்டங்களினால் கிராமப் பொருளாதாரம் வளர்ச்சியடையும். இந்தத் திட்டத்தை அம்மா அவர்கள் அறிவித்தபோது எங்கே இருக்கிறது இவ்வளவு ஆடு, மாடுகள் என்று கேட்டார்கள். அவர்கள் இப்படித்தான் கேட்பார்கள். ஏனென்றால் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் சத்துணவுத் திட்டம் கொண்டு வந்த நேரத்தில் இந்தத் திட்டத்தை செயல்படுத்த பணம் எங்கே இருக்கிறது என்று கேட்டார்கள்.

நில அபகரிப்பு மோசடியைக் கண்டுபிடித்து உரியவர்களுக்கு நிலத்தை ஒப்படைக்கும் திட்டம் என்பது கனவில்கூட யாரும் நினைத்துப் பார்க்கமுடியாத ஒன்று. அடுத்தவர் சொத்தை அபகரித்தால் ஜெயிலுக்குத்தான் போக வேண்டுமென்ற நீதி நெறியை உருவாக்கி இந்தச் சமுதாயத்தை மாற்றும் முயற்சியில் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் வெற்றி பெற்றுள்ளார்கள். முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் சட்டம்—ஒழுங்கு என்ன பாடுபட்டது என்பது நாட்டு மக்கள் அனைவருக்கும் தெரியும். நில மோசடி வழக்கில் எல்லோரும் 'நான் அன்றைக்கே புகார் கொடுத்தேன்; ஆனால், அப்போது நடவடிக்கை எடுக்கவில்லை' என்றுதான் கூறுகிறார்கள். நில அபகரிப்பு மோசடி ஒழிப்பில் இதய தெய்வம் அம்மா அவர்கள் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியிருக்கிறீர்கள். இந்தத் திட்டம் இந்தியாவிற்கே வழிகாட்டும் திட்டமாக உள்ளது.

மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் வெற்றிவேல் என்ற போலீஸ் அதிகாரி பட்டப் பகலில் ரவுடியால் வெட்டிக் கொலை செய்யப்பட்டார். அவர் உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பதை இரண்டு அமைச்சர்கள் அருகில் நின்று பார்த்துக் கொண்டிருந்தார்களேதவிர, அவருக்கு உதவி செய்யவில்லை. அவர் குடிப்பதற்குத் தண்ணீர் வேண்டுமென்று கேட்கிறார். ஆனால், யாரும் பக்கத்திலே போய் தண்ணீர் கொடுக்கவில்லை. ஒருவர் தண்ணீர் பாட்டிலை எடுத்து தூக்கி வீசுகிறார். அவரைக் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணம் யாருக்கும் இல்லை. அப்படி மனித நேயம் இல்லாதவர்கள்தான் அன்றைக்கு அமைச்சர்களாக இருந்தார்கள்.

சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் நடந்த மோதலில் போலீசார் கை கட்டி வேடிக்கை பார்த்தார்கள்; நீதிபதியின் மண்டையே உடைந்தது. இந்த இலட்சணத்தில்தான் முந்தைய தி.மு.க. ஆட்சியில் சட்டம்—ஒழுங்கு இருந்தது.

அன்றைக்கு மதுரையில் தினகரன் பத்திரிகை அலுவலகத்தை தீ வைத்துக் கொளுத்தினார்கள். அங்கு வேலை பார்த்த மூன்று பேர் உடல் கருகிச் செத்தார்கள். அப்போது அதனுடைய நிர்வாகி கலாநிதி மாறன், 'மு.க. அழகிரியின் தூண்டுதலால்தான் எங்கள் அலுவலகம் கொளுத்தப்பட்டது; அவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும், அவரைக் கைது செய்ய வேண்டும்' என்று



டி.வி.–யில் பேட்டி கொடுத்தார். அவரைக் கைது செய்ய வேண்டும் என்று மதுரை போலீஸ் கமிஷனரிடம் புகார் கொடுத்ததாகக் கூறினார். ஆனால், அதன்பிறகுதான் மு.க. அழகிரியை மத்திய அமைச்சராக்குகிறார்கள். இவ்வளவு கொடுமைகளைச் செய்தவர்கள் இன்றைக்கு சட்டம்—ஒழுங்கைப் பற்றிப் பேசுவதற்கு என்ன யோக்கியதை இருக்கிறது என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்துள்ள புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் எல்லாவிதமான நோய்களுக்கும் பயன்படும் வகையில், ஒரு குடும்பம் நான்கு இலட்சம் ரூபாய் வரையில் பயனடையக்கூடிய வகையில், இந்த ஆண்டு மட்டும் ரூ.150 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது; இது மகிழ்ச்சியளிக்கும் திட்டமாகும். இந்தத் திட்டத்தினால் ஏழை மக்கள் அனைவரும் இதய தெய்வம் அம்மா அவர்களைப் பாராட்டுகிறார்கள். முந்தைய ஆட்சியில் ஆட்சியாளர்களின் குடும்பம் வாழ்வதற்கு மட்டுமே அந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டது. அந்தத் திட்டத்தினால் மக்கள் பணத்தைச் சுரண்டுவதற்கு அரசாங்கம் வழி வகுத்தது. மாண்புமிகு அம்மா அவர்கள் ஏழை மக்களின் நல்வாழ்வு ஒன்றை மட்டுமே மனதில்கொண்டு இந்தப் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை கொண்டு வந்துள்ளீர்கள். இதனால் ஏழை மக்கள் பெரிதும் பயன்பெறுகிறார்கள்.

*பிற்பகல் 1–05*

ஒரு காலத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆறாத சோறும், கிழியாத உடையும், ஒழுகாத வீடும் வேண்டும் என்று சொன்னார்கள். இன்றைக்கு அம்மா அவர்கள் அண்ணாவின் அந்தக் கனவை நிறைவேற்றுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆம், அம்மா! இன்றைக்கு 20 கிலோ அரிசி கொடுக்கிறீர்கள். பள்ளிக் குழந்தைகளுக்கு சத்துணவு கொடுக்கிறீர்கள். ஏழை மக்களுக்கு இலவச வேட்டி—சேலை கொடுக்கிறீர்கள். பள்ளிக் குழந்தைகளுக்கு பேண்ட், சர்ட், சல்வார் கமீஸ் கொடுக்கிறீர்கள். பசுமை வீடு கட்டும் திட்டத்தில் இன்றைக்கு ஒரு இலட்சத்து எண்பது ஆயிரம் ரூபாய் கொடுக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சூரிய ஒளிமூலம் மின்சாரமும் கொடுக்கிறீர்கள். இந்த அற்புதமான திட்டம் அம்மா அவர்களின் சிந்தனையில் உதித்த திட்டமாகும். இதன்மூலம் பேரறிஞர் அண்ணாவின் கனவை நிறைவேற்றியிருக்கிறீர்கள்.

அம்மா, நீங்கள் கடந்த ஆட்சிக் காலத்தில் முதலமைச்சராக இருந்தபோது அண்ணாவின் குடும்பத்திற்கு 75 இலட்சம் ரூபாய் அண்ணாவின் துணைவியார் திருமதி ராணி அண்ணாவிடம் கொடுத்து அந்தக் குடும்பத்தைக் காப்பாற்றினீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, நான் அண்ணாவின் தம்பி என்று சொல்லிக் கொண்டிருக்கிறவர்கள், செய்ய முடியாத காரியத்தை எல்லாம் இதய தெய்வம் அம்மா அவர்கள் செய்து கொண்டிருக்கிறீர்கள்.

போர்க்களத்தில் கர்ணன் போரிட்டுக் கொண்டிருக்கிறான்— அர்ச்சுனனால் கர்ணனை வீழ்த்த முடியவில்லை. இதைப் பார்த்த கிருஷ்ண பரமாத்மா அவர்கள் அந்தணர் வேடம் போட்டு கர்ணனிடம் போய் அங்கே உதவி கேட்கிறார். அதற்கு கர்ணன் கேட்கிறான், "நான், இப்போது என்னப்பா கொடுப்பது? என்னிடம் என்ன இருக்கிறது? என்னிடம் எதுவுமே இல்லையே! இருக்கின்ற நேரத்தில் நீ வந்து கேட்டிருந்தால் நான் கொடுத்திருப்பேன். இப்போது என்னாலே முடியவில்லையே?" என்று சொல்கிறான். அப்போது கிருஷ்ண பரமாத்மா சொல்லுகிறார், "உன்னிடம் கொடுப்பதற்கு இன்னும் இருக்கிறது கர்ணா! நீ செய்த தர்மத்தை எல்லாம் எனக்குத் தானமாகக் கொடு" என்று கேட்கிறார். அப்போது இல்லையென்று சொல்லாமல், "நான் செய்த தர்மத்தை எல்லாம் தானமாகக் கொடுக்கிறேன்" என்று கூறிக் கொடுக்கிறான். அதுவரை போரில் கர்ணனைக் காத்து நின்ற தர்மதேவதைகள் கர்ணனை விட்டு விலகின. அதன்பிறகுதான் அர்ச்சுனன் கர்ணனை வீழ்த்துகிறான். அம்மா நீங்கள் எல்லோருக்கும் வாரி வழங்குகிறீர்கள். வள்ளலின் வாரிசு நீங்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் அரசியல் வாரிசாக இருக்கிறீர்கள். எதிரிக்கும் கருணை காட்டும் உள்ளம் படைத்தவர் நீங்கள். ஒருநாள் கருணாநிதியின் மூத்த மகன் மு.க. முத்து உங்களைத் தேடி வருகிறார். உங்களிடம் உதவி கேட்கிறார். அம்மா, எல்லோருக்கும் அள்ளிக் கொடுக்கிறீர்கள். நீங்கள் கொடுப்பது யாருக்கும் தெரிவதில்லை. ஒரு சதவிகிதம் மட்டுமே வெளியிலே தெரிகிறது. அம்மா, வந்திருப்பது எதிரியின் மகன் என்று தெரிந்தும் அவருக்கு உதவி செய்தீர்கள். "நான் கஷ்டப்படுகிறேன், உதவி செய்யுங்கள்" என்று கேட்டதும் ஐந்து இலட்சம் ரூபாயை அள்ளிக் கொடுத்தீர்கள். வந்திருப்பது எதிரி என்று தெரிந்தும் பால் வார்த்தீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப் பாம்புக்கும் பால் வார்க்கும் கருணை உள்ளம் உங்கள் உள்ளம். அதேநேரத்தில், அந்தப் பாம்பு படமெடுத்து ஆடினால் அதன் பல்லைப் பிடுங்கும் ஆற்றலும் எங்கள் தாய்



புரட்சித் தலைவி அம்மாவுக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி எதிரிக்கும் பால் வார்க்கும் கருணை உள்ளம் உங்களுடைய உள்ளம். இப்படிப்பட்ட கருணை உள்ளத்தினால்தான் எதிரியை வீழ்த்திக் கொண்டிருக்கிறீர்கள்.

அம்மா, மாணவர்களுக்கு லேப்டாப் வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்துள்ளீர்கள். இந்தத் திட்டத்தினால் மாணவர் சமுதாயத்தின் மத்தியில் ஒரு மறுமலர்ச்சி ஏற்படப் போகிறது. மேலைநாட்டைப்போல் நம் நாடும் வளர்ச்சியடையச் செய்ய ஒரு அற்புதமான திட்டத்தைக் கொண்டு வந்துள்ளீர்கள். இன்னும் சில ஆண்டுகளில் பள்ளிக் கல்வித் துறையில் இந்தியாவிலேயே தமிழகம் முதன்மை மாநிலமாகத் திகழும் என்பதையும், அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்கும் என்பதையும் நிரூபிக்கும்வண்ணம் மாண்புமிகு அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்.

அம்மா, என்னுடைய தொகுதியில் வடவள்ளி என்ற நகரப் பஞ்சாயத்து உள்ளது. அந்த நகரப் பஞ்சாயத்தில் ஒரு மாதத்திற்கு ஒரு முறை தான் தண்ணீர் வருகிறது. அப்பகுதிக்குத் தண்ணீர் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால் கடந்த ஆட்சிக் காலத்தில் கவுண்டம்பாளையம்—வடவள்ளி கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்ற ஒன்றைக் கொண்டு வந்தார்கள். ஆனால் திட்டம் முடியாமலேயே வேலை நடந்து கொண்டிருக்கும்போதே அந்தத் திட்டம் முடிந்துவிட்டதாகக் கூறி அப்போதைய துணை முதலமைச்சர் திறந்து வைக்க வேண்டுமென்பதற்காக அதிகாரிகள் அங்கே அரைகுறையாக வேலையை முடித்து திறந்து வைத்தார்கள். அதனால் இப்போது அது முறையாகச் செயல்படுவதில்லை. அந்தப் பகுதி மக்களுக்கு நான்கு நாட்களுக்கு ஒரு முறை குடிதண்ணீர் கிடைக்க உதவி செய்ய வேண்டுகிறேன்.

கோவை மாநகராட்சியில் ஜவஹர்லால் நேரு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தில் 3,500 கோடி ரூபாய் பெற்றதாகக் கூறுகிறார்கள். ஆனால் அங்கு எந்தத் திட்டத்தையும் செயல்படுத்தவில்லை. அதை விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மருதமலை முருகன் கோயில் ஏழாவது படைவீடாக விளங்குகிறது. மருதமலை முருகன் கோயிலுக்கு வரக்கூடிய பக்தர்கள் தங்குவதற்கு இட வசதி இல்லை. ஆகவே, பழனியில் உள்ளதுபோல, மருதமலை

முருகன் கோயிலிலும் அங்கு வரக்கூடிய பக்தர்கள் தங்குவதற்கு வசதியாக இந்து சமய அறநிலையத் துறை சார்பில் தாங்கள் தங்கும் விடுதி கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–10

கோவை–சத்தியமங்கலம் ரோட்டில் டாக்டர் நஞ்சப்பா ரோட்டிலிருந்து மேம்பாலம் தேவை. அதற்காக, கடந்த ஆட்சியில் ஒரு திட்டத்தைப் போட்டார்கள். என்ன செய்தார்கள் என்று சொன்னால், ஒவ்வொரு பக்கமும் இடதுபுறம் 40 அடி எடுக்க வேண்டும், வலதுபுறம் 40 அடி எடுக்க வேண்டும், அப்பொழுதுதான் பாலம் போடமுடியும் என்று சொன்னார்கள். கோவையிலே இப்போது ஒரு சென்ட்நிலம் எத்தனை இலட்சம் ரூபாய் என்பது அம்மா அவர்களுக்குத் தெரியும். அப்படியென்றால், அவ்வாறு 40 அடி கொடுத்தால், அவர்களுடைய வீட்டையே கொடுத்துவிட்டுப் போகின்ற நிலைமை சிலருக்கு ஏற்படுகிறது. ஆகவே, அந்தத் திட்டத்தை மாற்றி பொது மக்கள் பாதிக்காத அளவில், மாண்புமிகு அம்மா அவர்கள் அதனை செய்துகொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். தமிழகத்தினுடைய ஆட்சித் தேரின் சாரதி நீங்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், கோரிக்கைகளைத் தயவு செய்து எழுத்து மூலமாகக் கொடுத்து விடவும். மாண்புமிகு உறுப்பினர், கோரிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலே கொடுத்து விடுங்கள்.

**திரு. தா. மலரவன்:** வீரத்தின் விளைநிலமே, பாசத்தின் பிறப்பிடமே, அன்பு காட்டுவதில் உலகத்தாய், வம்பு செய்வோரை வதைத்திடும் தெய்வத்தாய்! வீம்பு செய்வோரை வீழ்த்திடும் வீரத்தாய், சோம்பிக்கிடந்த தமிழினத்தை துயில் எழச் செய்த வெற்றித்தாய்! (மேசையைத் தட்டும் ஒலி) வேதச் சுவடுகள் படைக்கும் தங்களுடைய பாதச் சுவடுகளைப் போற்றி வணங்கி என்னுடைய உரையை முடித்துக்கொள்கின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் சற்று முன்பு காங்கிரஸ்



கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர், திருமதி விஜயதரணி அவர்கள் மத்திய அரசு, தமிழக அரசின் திட்டச் செலவுக்காக 23,535 கோடி ரூபாய் நிதி உதவி அளித்துள்ளதைக் குறிப்பிடும் வகையில் ஒரு கருத்தைத் தெரிவித்தார். கேட்டதைவிட அதிகமாகக் கிடைத்தது என்றார். அப்போது எனது அரசால் கோரப்பட்ட நிதி உதவிகளை மத்திய அரசு இன்னமும் செய்யவில்லை என்று நான் குறிப்பிட்டேன். எனது தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்பு மீனவர் நலன், நதிநீர் இணைப்பு, சூரிய ஒளி மின்சார உற்பத்தி, மடிக் கணினி வழங்கும் திட்டம் போன்ற திட்டங்களுக்கு 2,52,000 கோடி ரூபாய் அளவுக்கு நிதி உதவி வழங்க வேண்டும் என்று மத்திய அரசிடம் கோரியிருந்தேன். இதுவரை, எந்த நிதி உதவியும் மத்திய அரசிடமிருந்து வரவில்லை. இதைத்தான் நான் குறிப்பிட்டேன்.

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை நான் சந்தித்தபோது இந்தக் கோரிக்கை அடங்கிய கோரிக்கை மனுவை நான் கொடுத்தேன். அதற்கு இதுவரை எந்த உதவியும் கிடைக்கவில்லை. சற்று முன்பு மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி தமிழ்நாடு அரசு அனுமதி பெற்றுள்ள திட்ட நிதியைப்பற்றி குறிப்பிடும் வகையில் பேசினார். 2011–2012 ஆம் ஆண்டிற்கான திட்ட மதிப்பீடு ரூ.23,535 கோடி என நான் சமீபத்தில் புது டில்லி சென்று மத்திய திட்டக் குழுவின் துணைத் தலைவர் திரு. மாண்டேக் சிங் அலுவாலியா அவர்களோடு நடைபெற்ற கூட்டத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டது. இந்த 23,535 கோடி ரூபாயில் மத்திய அரசு வழங்கியுள்ள மொத்த நிதி உதவி 2,829 கோடியே 50 இலட்சம் ரூபாய் மட்டுமே. இந்த நிதி உதவி இயல்பாக வழங்கப்படும் மத்திய உதவியாக, அதாவது Normal Central Assistance ஆக 588 கோடியே 4 இலட்சம் ரூபாயும், வெளிநாட்டு உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கான மத்திய உதவியாக 43 கோடியே 15 இலட்சம் ரூபாயும், பிற திட்டங்களுக்காக மத்திய உதவியாக 2,198 கோடியே 31 இலட்சம் ரூபாயும், ஆக மொத்தம் ஏற்கெனவே நான் குறிப்பிட்ட 2,829 கோடியே 50 இலட்சம் ரூபாய் மட்டுமே மத்திய அரசின் நிதி உதவியாகும். இதுபோக திட்டப் பணிகளுக்காகச் செலவிடப்படும் நிகரத் தொகை 20,705 கோடியே 50 இலட்சம் ரூபாய் மாநில அரசின் நிதி ஆதாரத்திலிருந்துதான் செலவழிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). ஆக, 2011–2012 ஆம் ஆண்டிற்கான

ஒட்டுமொத்த ஆண்டுத் திட்ட ஒதுக்கீடான 23,535 கோடி ரூபாயில், 20,705 கோடியே 50 இலட்சம் ரூபாய் மாநிலத்தின் சொந்த நிதியாகும். இதில் 2,829 கோடியே 50 இலட்சம் ரூபாய் மட்டும்தான் மத்திய அரசு தருகிறது என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 1–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது முறையாக வாக்களித்து வெற்றி பெறச்செய்து, இந்த மாமன்றத்திற்கு என்னை அனுப்பிவைத்த தளி சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், இந்த நல் வாய்ப்பினை நல்கிய, தன் பேச்சாற்றலால், எழுத்தாற்றலால், சூறாவளி வேகத்திலே இன்றைக்கு அரசியல் பணியாற்றிக்கொண்டிருக்கின்ற சிவப்புச் சூறாவளி, இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியினுடைய மாநிலச் செயலாளர் தோழர் தா. பாண்டியன் அவர்களுக்கும், பொது வாழ்விலே நேர்மை, தூய்மை, எளிமை இவற்றிற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்துகொண்டிருக்கின்ற, வாழும் மகாத்மா என்று அனைவராலும் போற்றக்கூடிய, இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியினுடைய முதுபெரும் தலைவர், தோழர் ஆர். நல்லக்கண்ணு அவர்களுக்கும், சுட்டெரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாமல், கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு வந்து தேர்தல் பிரச்சாரம் செய்து, என்னை வெற்றிபெறச் செய்ததோடு, தேர்தல் நேரத்திலே அளித்த வாக்குறுதிகளையெல்லாம் நிறைவேற்றும் வகையில், தான் ஆட்சி பொறுப்பேற்ற அதே நாளில் இதே செயின்ட் ஜார்ஜ் கோட்டையில், 7 கோப்புகளிலே கையெழுத்திட்டு, ஏழரை கோடி தமிழ் மக்களையும் மகிழ்ச்சி என்னும் ஆனந்தக் கடலில் ஆழ்த்திய, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும், *(மேசையைத் தட்டும் ஒலி)* கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும், எங்களுடைய மாவட்டத்திலே கூட்டணிக் கட்சிகள் வெற்றி பெறுவதற்காக தேர்தல் பணியாற்றி வெற்றி பெறச் செய்த எங்களுடைய மாவட்ட அமைச்சர் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆகிய தங்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.



மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆலோசனைப்படி, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களாலே, இந்த மாமன்றத்திலே அளிக்கப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கையை, தமிழகத்திலுள்ள அரசியல் நோக்கர்கள், பொருளாதார வல்லுனர்கள், நடுநிலையாளர்கள், சமூக ஆர்வலர்கள், பத்திரிகையாளர்கள் என அனைவரும் பாராட்டும்போது, பக்கங்கள் அதிகமாக உள்ளன, அந்த அளவிற்கு நிறைகள் அதிகமாக இல்லை என்று முன்னாள் முதல்வர் அவர்கள் மட்டும் வெளியிலே, பத்திரிகையிலே வசைபாடிக்கொண்டிருக்கின்றார். அவர் ஐந்து முறை தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்தவர். மூத்த அரசியல் தலைவர். அவர் இப்போது சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார். இந்த மன்றத்திற்கு வந்து தன்னுடைய கருத்துகளை பதியவைத்திருக்கலாம். அவருடைய கட்சியின் சார்பாக 23 பேர் சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் வந்து அவர்கள் கட்சியின் சார்பிலே இந்த நிதிநிலை அறிக்கையின்மீது கருத்துகளைச் சொல்லியிருக்கலாம். இதில் என்னவென்றால், பச்சிளம் குழந்தைகள் மிட்டாய்க்கு அடம் பிடிப்பதைப்போல, எங்களுக்கு ஒரே இடத்திலே இடம் ஒதுக்கவேண்டுமென்று சட்டமன்றக் கூட்டத்தொடரைத் தொடர்ந்து புறக்கணித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஓர் உதாரணத்தை மட்டும் இந்த மாமன்றத்திலே கூற நான் விரும்புகிறேன். அதாவது, 1948–1950 ஆம் ஆண்டுகளிலே இந்தியாவிலே நாடாளுமன்றம் என்பது இல்லை. மக்கள் நிர்ணய சபை இருந்தது. அந்த மக்கள் நிர்ணய சபையிலே நம்முடைய சட்ட மாமேதை டாக்டர் அம்பேத்கர் போன்ற பல்வேறு வல்லுநர்கள் இடம் பெற்றிருந்தார்கள். அந்த சபையிலே இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே இரண்டே இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தார்கள். அந்த இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள்கூட சிறையில் இருந்தார்கள். என்ன காரணம் என்றால் கம்யூனிஸ்டு கட்சி என்பது தடை செய்யப்பட்டிருந்த காலம் அது. அதாவது சிறையிலே இருந்துகொண்டு, நாடாளுமன்றத்திலே கொண்டுவருகின்ற கருத்துகளுக்கும், திருத்தங்களுக்கும், தங்களுடைய பதிலாக, எழுத்துவடிவமாக நாடாளுமன்றத்திற்கு அனுப்பிவைத்து, நாடாளுமன்றத்திலே அந்தக் கருத்துகளைப் படிப்பார்கள். கடந்த ஆட்சியிலேகூட நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களுக்கு இங்கே இடம் ஒதுக்கினார்கள். எங்கே என்றால் இந்தக் கடைசியில் இருந்தது. நாங்கள் எல்லாம் அவர் பேசும்போது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தக் கடைசியில் இருந்தேன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** அந்தக் கடைசியில் இருந்தார்கள். நாங்கள் எல்லாம் குனிந்து பார்க்க வேண்டியிருந்தது. நம்முடைய மின்சாரத் துறை அமைச்சருக்கு அந்தக் கடைசியில் ஒதுக்கினார்கள். நாங்கள் குனிந்து பார்க்க வேண்டியிருந்தது. இருந்தாலும்கூட, அன்றைக்கு சட்டமன்றத்திலே வந்து அவர்களுடைய கட்சியினுடைய சார்பிலே வெளிப்பாட்டைச் சொல்லி தங்களுடைய ஜனநாயகக் கடமைகளை ஆற்றியிருக்கிறார்கள். அதைவிட முக்கியமானது என்னவென்றால், ஒட்டுமொத்தமாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த 60 சட்டமன்ற உறுப்பினர்களையும் அன்றைக்கு suspend செய்தார்கள். அப்போது எதிர்க்கட்சியில் இருந்த நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த மாமன்றத்திற்கு தன்னந்தனியாக வருகை தந்து தனியாக நின்று பேசினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இப்போதோ இவர்கள் வெளியிலே இருந்துகொண்டு வாக்களித்த மக்களுக்கு நன்றியைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நான் சொல்கின்றேன், இது சரியான அரசியல் நிலைப்பாடு அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையிலும் சரி, தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டங்களிலும் சரி, கிராமப்புற மக்களுடைய முன்னேற்றத்திற்கும், விவசாய மேம்பாட்டிற்கும் உயர் முன்னுரிமை அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. நமக்கு நல்ல காலம் பிறக்கும் என்று கிராம மக்கள், விவசாயிகள், கைத்தறி நெசவாளர்கள், மீனவர்கள் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். அவர்களுடைய கனவு வெறும் கனவாக இல்லை. இப்போது நனவாகும் வகையிலே இந்த நிதிநிலை அறிக்கையிலே பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக முதன்மைத் துறையாக விளங்குகின்ற வேளாண்மைத் துறை, கால்நடை வளர்ப்பு, மீன் வளம் ஆகிய துறைகளுக்கு முத்து முத்தாக பட்ஜெட்டிலே பல அறிவிப்புகள் இடம் பெற்றிருப்பது வரவேற்கத்தக்கது.



பிற்பகல் 1–20

வேளாண்மைத் துறையிலே, குறிப்பாக வேளாண் பொறியியல் துறையில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்க மானியம், அதேபோல நுண்ணீர்ப் பாசனத்திற்காக 100 சதவிகித மானியம், உணவு தானிய சேமிப்புக் கிடங்குகள் அமைக்க 237 கோடி ரூபாய் ஒதுக்கீடு, நெல் உற்பத்தியைப் பெருக்கும் வகையிலே திருந்திய நெல் சாகுபடித் திட்டம், நவீன முறையிலே கரும்பு உற்பத்தியை அதிகரிக்கத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களையும் தமிழக அரசு அறிவித்திருப்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சி சார்பிலே மனமார வரவேற்கிறோம்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையிலே, 'நாங்கள் ஆட்சிக்கு வந்தால் கரும்புக்கு டன் ஒன்றுக்கு 2,500 ரூபாய் வழங்கப்படும்' என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த அறிவிப்பை தமிழகக் கரும்பு விவசாயிகளும், விவசாய சங்கங்களும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த நல்ல அறிவிப்பினை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு 1,500 ரூபாய் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையும் இருக்கிறது. அதையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உரிய காலத்திலே கடனைத் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டியில்லா கடன் வழங்க சுமார் மொத்தம் 3 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருப்பதையும் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே வரவேற்கிறேன்.

அதேசமயம், கடந்த ஆட்சிக் காலத்தில் கூட்டுறவு பயிர்க் கடன் வழங்குவதிலே ஏற்பட்ட நடைமுறைகளைத் திருத்தி இந்த அரசு மாற்றிடவேண்டும். விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்ட பயிர்க் கடன்கள் பெரும்பாலும் நகைக் கடன்களாகத்தான் வழங்கப்பட்டன. விவசாயக் குழுக்கள் அமைத்து குழுக்கள் மூலமாகக் கடன் வழங்கப்பட்டது. குழுக்கள்மூலம் வழங்கப்பட்ட கடனில் ஏதாவது ஒரு விவசாயி கடன் திருப்பிச் செலுத்தவில்லையென்றால் திருப்பிச் செலுத்திய அந்தக் குழு விவசாயிகள் அனைவருக்குமே மீண்டும் கடன் வழங்கப்படவில்லை. எனவே, முறையாகப் பணம் கட்டியவர்களுக்கு கடன் கிடைக்காத நிலை நீடிக்கிறது. இந்த முறையை மாற்றி பயிர்க் கடன் வழங்கும் ஒதுக்கீட்டில் நகைக் கடன் வழங்காமல் விவசாயம் செய்யும் நிலத்தின் பரப்புக்கேற்ப தனித்தனியாக கடன் உதவி வழங்கவேண்டுமென்று நம்முடைய அரசை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல நிதிநிலை அறிக்கையிலே பக்கம் 13—ல், பத்தி—3—ல், Bt பருத்தி உற்பத்தி பரவலாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. Bt பருத்தி பயிரிட்ட ஆந்திரா, மகாராஷ்டிரா மாநில விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, பல விவசாயிகள் தற்கொலை செய்துகொண்டிருக்கிறார்கள். Bt ரக விதைகளுக்கு நாட்டில் பல பகுதிகளிலும், பல விவசாயிகள் மற்றும் விவசாய அமைப்புகள் மத்தியிலும் எதிர்ப்பான கருத்திருக்கிறது. ஆகவே, இதை அரசு பரிசீலிக்கவேண்டும்.

கிராமப்புற மக்களுடைய ஜீவாதாரத் தொழிலாக கால்நடை வளர்ப்புத் தொழில் இருந்து வருகிறது. கவனிப்பாறற்றுக் கிடந்த இத்துறைக்கு இந்த அரசு முக்கியத்துவம் கொடுத்திருப்பது வரவேற்கத்தக்கது. கால்நடைத் துறைக்கு முக்கியத்துவம் கொடுத்திருப்பதன் மூலமாக கிராமப்புற மக்களுடைய வாழ்வாதாரம் பெருகும் என்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

வறுமையிலே வாடும் குடும்பங்களுக்கு 5 ஆண்டுகளிலே 6,000 கறவை மாடுகள் வழங்கும் திட்டம், பால் உற்பத்தி குறைவாக உள்ள கிராமங்களில் வாழும் ஏழைக் குடும்பங்களுக்கு 14 ஆயிரம் ஜெர்சி போன்ற கலப்பின கறவை மாடுகள் வழங்கும் திட்டம், அதேபோல 155 நடமாடும் கால்நடை மருத்துவமனைகள், நடப்பாண்டிலே ஓரத்தநாட்டிலே ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரி, ஓசூரிலே உலகத்தரம் வாய்ந்த கோழி வளர்ப்பு மற்றும் வேளாண் மையம் போன்றவை நிச்சயமாக தமிழகத்திலே வெண்மைப் புரட்சிக்கு வித்திடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2011—2012 ஆம் ஆண்டு தமிழகத்திலே ஒரு இலட்சம் குடும்பங்களுக்கு அவர்கள் தன்னம்பிக்கையோடு வருமானம் பெற்று வாழ்ந்திட ரூ.12 ஆயிரம் மதிப்பில் 4 வெள்ளாடுகள் அல்லது 4 செம்மறி ஆடுகள் வழங்கப்படும் என்ற திட்டத்தை அறிவித்து அதற்காக ரூ.150 கோடி நிதி ஒதுக்கீடு செய்திருப்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே மகிழ்ச்சியோடு வரவேற்கிறோம். நிதிநிலை அறிக்கையிலே பக்கம் 21, பத்தி 33—ல், இத்திட்டப் பயனாளிகள் தேர்விலே வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழும் மக்களுக்கென்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஏற்கெனவே, நேற்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையிலே, தமிழகத்திலே வறுமைக்கோட்டுக்குக் கீழுள்ளவர்கள் பட்டியல் எடுக்கப்படவில்லை என்றும், மத்திய அரசின் பட்டியலை நாம்



ஏற்கவில்லை என்றும் கூறியுள்ளார்கள். அவர்களின் கருத்தை இந்திய கம்யூனிஸ்டு கட்சி ஆதரிக்கிறது. மத்திய அரசின் பட்டியல் ஏற்கப்படவில்லை என்கிறோம். எனவே, தயவுசெய்து வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ளவர்களின் பட்டியல் சம்பந்தமான நிபந்தனை பற்றி இந்த சட்டமன்றத்திலே அறிவிக்கவேண்டும். வறுமைக்கோட்டிற்குக் கீழே இருப்பவர்களுக்குத்தான் அந்த ஆடு, மாடுகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேற்றைக்கு வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ளவர்கள் பட்டியலே தமிழகத்திலே இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். எந்த அடிப்படையிலே அந்த ஆடுகள் வழங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

அதேபோல, மீன்வளம். குறிப்பாக, மீனவர் நலனிலே இந்த அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை நான் பாராட்டுகிறேன். மீன்பிடித் தடைக் காலத்திற்கு மீனவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகை ஆயிரம் ரூபாயிலிருந்து இரண்டாயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கியிருப்பது, மீன்பிடி இல்லாத காலங்களுக்கு...

பிற்பகல் 1—25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது 5 ஆண்டுகளில் 6,000 மாடுகள் வழங்கப்படும் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். அதற்குக் கடைசியாக பதில் சொல்லலாம் என்று இருந்தேன். இருந்தாலும் பயனாளிகள் எப்படித் தேர்வு செய்யப்படுவார்கள் என்ற கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். 5 ஆண்டுகளில் 60 ஆயிரம் மாடுகள் வழங்கப்படும். அவர் பேசுகிறபோது 6,000 மாடுகள் வழங்கப்படும் என்று சொன்னார்கள். 60,000 மாடுகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வறுமைக் கோட்டிற்குக்கீழே உள்ளவர்களுக்கான பட்டியல் தமிழ்நாட்டில் இல்லை என்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நேற்றே அறிவித்திருக்கிறார்கள். அந்தந்த மாவட்டத்திலே இருக்கின்ற மாவட்டக் கால்நடை இணை இயக்குனர்கள், கால்நடை துணை இயக்குனர்கள், பயனாளிகளைத்

தேர்வு செய்கின்றபொழுது கிராமப் பகுதியிலே இருக்கின்றவர்கள் குறிப்பாக மகளிர் பயன் பெறுகின்ற வகையில் அந்தக் குடும்பத்திலிருக்கின்ற பெண்களின் ஜீவாதாரத்தைப் பெருக்குகிற வகையில் இருக்கின்ற குடும்பங்களிலிருந்து பயனாளிகளைத் தேர்வு செய்கின்ற வகையில் கிராம சபைக் கூட்டங்கள் இப்பொழுது கூட்டப்பட்டு நேர்மையான முறையில் இந்தத் திட்டத்தினைச் செயல்படுத்த வேண்டும் என்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, அறிவுரையின்படி கிராம சபைக் கூட்டங்களின் வாயிலாக கிராமப் பகுதியிலே இருக்கின்ற ஏழையெளிய மக்கள் உள்ள குடும்பங்களைத் தேர்வு செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன்.*

**திரு. டி. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு அமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011–2012 ஆம் ஆண்டிற்கு கடந்த ஆண்டைக் காட்டிலும் 17.28 விழுக்காடு...*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன்.*

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பயனாளிகள் தேர்வு எந்த அடிப்படையில் இருக்கும் என்ற கேள்வியை எழுப்பி இருந்தார்கள். ஏற்கெனவே நமது தமிழக முதல்வர் அவர்கள் நேற்றையதினம் தமிழகத்திலே வறுமைக் கோட்டிற்கான பட்டியல் எடுக்கப்படவில்லை, மத்திய அரசு பட்டியல் என்பது 10 ஆண்டுகளுக்கு முன்னால் எடுக்கப்பட்டது, அது காலாவதியானது. அதை ஏற்றுக்கொள்ளவில்லையென்று அறிவித்திருந்தார்கள். எனவே இன்றைக்குப் பயனாளிகளைக் கிராம சபையில் வைத்து மட்டுமே தேர்வு செய்வதென்பது பொருத்தமாக இருக்காது என்று நம்புகிறேன். ஊராட்சி மன்றத் தேர்தல்கள் வருகிற நேரத்தில் தேர்தலை அடிப்படையாக வைத்து வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்ற பாகுபாட்டோடு அதைத் தேர்வு செய்யக்கூடிய ஒரு சூழல் தமிழ்நாட்டிலே ஏற்படும். எனவே அந்த நிலையை மாற்றி, வருமானத்தின் அடிப்படையில் உள்ள



விவசாயத் தொழிலாளி குடும்பங்களைப் பயனாளிகளாகத் தேர்வு செய்ய வேண்டும். அப்படி வருமானத்தை அடிப்படையாக வைக்கிற நேரத்தில் ஒரு இலட்ச ரூபாய் வரை ஆண்டு வருமானம் உள்ள குடும்பங்களை இந்தத் திட்டத்திலே இணைத்து அதற்கான நடவடிக்கையை எடுத்தால் உண்மையான பயனாளிகளுக்கு எந்தப் பாகுபாடுமில்லாமல் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான வழிவகை பிறக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன்.*

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயனாளிகள் தேர்வு செய்யப்படுகிறபோது கடைப்பிடிக்கப்படும் அளவுகோல் குறித்து ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. குணசேகரன் அவர்கள் எழுப்பிய அந்த வினாவையேதான் நானும் கேட்க விரும்புகிறேன். அதோடு மட்டுமல்லாமல், அந்த மாடுகளை வாங்கித் தருகிறபோது அந்த மாடுகள் தமிழகத்திலிருந்தே வாங்கிப் பயனாளிகளுக்குத் தரப்படுமா அல்லது வெளி மாநிலங்களிலிருந்து வாங்கி தமிழகத்தில் உள்ள அந்தப் பயனாளிகளுக்குத் தரப்படுமா என்பதையும் சேர்த்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயனாளிகளுக்குத் தரப்படும் மாடுகள் வேறு மாநிலங்களிலிருந்து வாங்கப்படும். பயனாளிகளுக்குத் தருகின்ற ஆடுகள் தமிழ்நாட்டிலேயே பெறப்படும். வெளி மாநிலங்களில் மாடுகளை வாங்கும்போது அந்த மாடுகளைப் பெறப்போகின்ற பயனாளிகள் அரசு அதிகாரிகளுடன் அரசு செலவில் அங்கே மாட்டுச் சந்தைக்கு அழைத்துச் செல்லப்பட்டு தங்களுக்கு வேண்டிய மாட்டை அவர்களே தேர்ந்தெடுக்க வாய்ப்பு அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) போக்குவரத்துச் செலவுக்கு அரசே அவர்களுக்குத் தேவையான நிதியை வழங்கும். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் செல்வதற்கும், மாட்டை வாங்கும் வரை அங்கே தங்கி இருப்பதற்கும், திரும்ப மாட்டைக் கொண்டு வந்து அவர்கள் இருப்பிடத்திற்கு எடுத்துச் செல்லவும் அரசு தேவையான செலவை

ஏற்றுக்கொள்ளும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆடுகளைப் பொறுத்தவரையில் இங்கே தமிழ்நாட்டிலேயே பெறப்படும். எந்த அடிப்படையில் இந்தப் பயனாளிகள் தேர்வு செய்யப்படுவார்கள் என்பதற்கு சில norms fix செய்யப்பட்டிருக்கின்றன. அந்த விவரத்தைக் கேட்டிருக்கிறேன். வந்தவுடன் உங்களுக்குத் தெரிவிக்கிறேன்.

பிற்பகல் 1–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள், உரையைக் கொஞ்சம் சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உங்கள் உரையை 1–15 மணிக்குத் தொடங்கினீர்கள்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011–2012 ஆம் ஆண்டிற்கு கடந்த ஆண்டைக் காட்டிலும், 17.28 விழுக்காடு நிதி உயர்த்தப்பட்டு, 23,535 கோடி ரூபாயை மத்திய அரசிடமிருந்து நமது மாநில முதல்வர் அவர்கள் பெற்று வந்ததற்காக இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேசமயம், தவறான பொருளாதாரக் கொள்கையாலும், உலகமயமாக்கல் கொள்கையாலும் விலைவாசி உயர்வு ஏற்பட்டு, பணவீக்கம் 9 சதவிகிதத்தைத் தாண்டியுள்ள சூழ்நிலையிலும், மத்திய அரசு அளிக்கும் நிதி தமிழகத்தின் அனைத்து வளர்ச்சிப் பணிகளுக்கும் போதுமானதாக இருக்காது. மாநில சுயாட்சி, மத்தியிலே கூட்டாட்சி என்று கொள்கை முழக்கமிட்ட, அண்ணா பெயரைச் சொல்லி, முந்தைய தி.மு.க. ஆட்சியில் ஆண்டுதோறும் மாநில சுயாட்சியைப்பற்றி அறிக்கையிலே எழுதப்பட்டதே தவிர, மத்திய அரசில் கூட்டணியில் இருந்து கொண்டு, மாநில உரிமைகளை விட்டுக்கொடுத்ததால் முல்லைப் பெரியாறு, காவிரி, பாலாறு போன்ற நதிநீர்ப் பிரச்சினைகளிலே கடந்த தி.மு.க. ஆட்சியில் எந்த நன்மையையும் தமிழகம் பெற முடியவில்லை. ஏட்டளவிலே சுயாட்சியைப் பற்றிப் பேசியவர்கள், செயல் அளவிலே மத்திய ஆட்சியில் பதவிக்காக மண்டியிட்டுக் கிடந்தார்கள் என்பது தமிழகம் அறிந்த உண்மை. அதனால்தான், மத்திய அரசை வலியுறுத்தி, இலங்கையிலே தமிழ் மக்கள்மீது இராணுவத் தாக்குதலைத் தடுத்து நிறுத்தாமல், இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் கொலை செய்யப்படுவதற்குக் காரணமாக முந்தைய தி.மு.க. ஆட்சியாளர்கள் இருந்தார்கள்.



இப்படிப்பட்ட நிலையை மாற்றி, அரசியல், நிதி மற்றும் சமூகப் பிரச்சினைகளில், மாநில அரசு மாநில மக்களுடைய நலன் காக்க உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். தமிழகத்திலிருந்து மத்திய அரசின் வரி வருவாயில் மற்றும் மாநிலத்தினுடைய வளர்ச்சி விகிதத்தைக் கணக்கெடுத்து, மத்திய நிதியிலிருந்து குறைந்தபட்சம் 50 விழுக்காடு நிதியை நம்முடைய மாநில முதல்வர் அவர்கள் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, 48.45 சதவிகிதம் மக்கள் நகர்ப்புறங்களிலே வாழ்வதாகவும், 2030 ஆம் ஆண்டுக்குள் இது 67 விழுக்காடாக உயரும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் அறிக்கையிலே கூறப்பட்டுள்ளது. இது தமிழகத்தின் வேளாண்மை உற்பத்தியைப் பாதிக்கும். எனவே, தமிழக அரசு நகரங்களுக்கு இணையாக கிராம மக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்த, ஒருங்கிணைந்த கிராமப்புற மேம்பாட்டுத் திட்டத்தைத் தொடங்கியிருப்பதை வரவேற்கிறேன். தமிழகத்தில் சுமார் 12,635 ஊராட்சிகளும், அவை உள்ளடக்கிய சுமார் 50 ஆயிரம் கிராமங்களும் உள்ள நிலையில், ஆண்டுக்கு 680 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு போதுமானதாக இருக்குமா என்ற சந்தேகம் உள்ளது. எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் இந்தச் சிறப்பான திட்டம் முழு வெற்றி பெற, கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்திடவும், கிராமங்களுக்கு ஒரேமாதிரியான திட்டம் என்பதற்கு மாறாக, கிராம மக்களின் அத்தியாவசியத் தேவைகளைக் கருத்தில்கொண்டு, இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

உள்ளாட்சி மன்றங்களுக்கு அக்டோபர் மாதத்தில் தேர்தல் நடத்தப்படும் என்று இந்த அரசு அறிவித்திருப்பதற்கு இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக வரவேற்பைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, ஊராட்சி ஒன்றியம், பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சிகளில் உள்ள பதவிகளுக்கு மக்களே நேரடியாக வாக்களித்து தேர்ந்தெடுக்க வேண்டும்—அதாவது, வார்டு உறுப்பினர்கள் மற்றும் ஒன்றியக் கவுன்சிலர்களைத் தேர்ந்தெடுக்கும்போது, ஆள் கடத்தல் மற்றும் குதிரை பேரங்களுக்கு வழிவகுத்து விடுவதைத் தடுக்க நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் முறையைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, 60 ஆயிரம் பசுமை வீடுகள் கட்டும் திட்டம் வரவேற்கக்கூடிய நல்ல திட்டம். இந்தத் திட்டத்தை வரவேற்பதோடு, இந்திரா குடியிருப்புத் திட்டத்திற்கு ஏற்கெனவே வழங்கிய 70 ஆயிரம் ரூபாயுடன், கூடுதலாக ஒரு இலட்சம் ரூபாய் உயர்த்தி வழங்குவோம் என்ற நிலையை ஏற்கெனவே பசுமை வீடுகளுக்கு வழங்குவதைப்போல...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பசுமை வீடு கட்டிக் கொடுப்பதற்கு இந்த அரசு ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் ஒதுக்கியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. டி. இராமச்சந்திரன்:** இந்திரா குடியிருப்பு வீடுகளுக்கும் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சீக்கிரம் உரையை முடித்து விடுங்கள்.*

*பிற்பகல் 1–35*

**திரு. டி. இராமச்சந்திரன்:** அடுத்து, பள்ளிக் கல்வித் துறை. அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பத்தாம் வகுப்பு, பதினோராம் வகுப்பு மாணவ, மாணவியர்களுக்குத் தலா 1,500/– ரூபாயும், பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு (குறுக்கீடு) ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராமச்சந்திரன், இன்னும் இரண்டு நிமிடங்களில் உரையை முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கட்டிக் கொடுக்கின்ற பசுமை வீடுகளின் மொத்த அளவு 300 சதுர அடியாகும். இதற்கு அரசே ஒரு வீட்டிற்கு 1,80,000 ரூபாய் செலவிடப் போகிறது. இந்திரா ஆவாஸ் யோஜனாவின்கீழ் ஒரு வீட்டின் பரப்பளவு 200 சதுர அடிதான். அதற்கு மத்திய அரசு வழங்குகின்ற தொகை 33,000 ரூபாய்தான்*



*அதற்கு மாநில அரசு 66,000 ரூபாய் சேர்த்துப்போட்டு 1,00,000 ரூபாய் செலவில் கட்டிக் கொடுக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன்.*

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்விக்குச் செலவிடும் தொகையை இந்த அரசு செலவினமாகக் கருதாமல், கல்விக்குச் செலவிடும் தொகையை மூலதனமாகக் கருதி, கல்வித் துறையில் பல்வேறு அறிவிப்புகளை அறிவிப்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக வரவேற்கிறேன்.

குறிப்பாக இடைநிற்றலை (drop-outs) குறைக்கும் வகையில் இந்த அரசு 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு 1,500 ரூபாயும், 11 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு 1,500 ரூபாயும், 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு தலா 2,000 ரூபாயும் அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது, இது மாணவர்களுக்குப் பேருதவியாக அமையும்.

அதேபோல, 6 ஆம் வகுப்பு முதல் மாணவர்களுக்கு முழுக் கால்சட்டை, மாணவிகளுக்கு சல்வார் கமீஸ் வழங்குவது போன்றவையெல்லாம் வரவேற்கத்தக்க திட்டங்கள். அதேபோல, பெண் கல்வியை ஊக்குவிக்கும் வகையில் இந்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளை வரவேற்கிறோம்.

அதேபோல, மேல்நிலைப் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு மடிக் கணினி வழங்க இந்த அரசு 912 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருப்பது பாராட்டுக்குரியது. அதே நேரத்தில், இன்றைய நவீன தகவல் தொழில்நுட்ப அறிவை வளர்த்துக் கொள்வதற்கு இலவச மடிக் கணினியோடு, இணையதள இணைப்பு (internet) வசதியும் அரசின் சார்பாக மாணவர்களுக்குச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது வருங்காலத்திலே கல்வியிலே மாபெரும் புரட்சியை ஏற்படுத்தும்.

தமிழகத்தில் 60,000 ஆசிரியர் காலிப் பணியிடங்கள் உள்ளன. ஆனால், நிதிநிலை அறிக்கையிலே ஆசிரியர் காலிப் பணியிடங்களை நிரப்புவது பற்றி எந்த அறிவிப்பும் அறிவிக்கப்படவில்லை. ஆசிரியர் பணியிடங்களை அரசு நிரப்ப வேண்டும். அதேபோல, உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை ஏற்று, வருங்காலத்தில் தமிழகத்திலே சமச்சீர் கல்வியை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ச. சுந்தரராஜ்.

**டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011–2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒட்டுமொத்த தமிழக மக்களின் அன்பைப் பெற்று, மூன்றாவது முறையாகத் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றுள்ள தங்கத் தாரகை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) எனது சார்பிலும், பரமக்குடி தொகுதி மக்களின் சார்பிலும் மனமார்ந்த நல்வாழ்த்துகளைப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். இம்மாமன்றத்திற்கு மூன்றாவது முறையாக சட்டமன்ற உறுப்பினராக என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய பரமக்குடி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு இந்த நேரத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்ற உறுப்பினராக உருவாக்குவதற்கு என்னைத் தேர்வு செய்து எனது வெற்றியை உருவாக்கிக் கொடுத்த தங்கத் தாரகை தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், பரமக்குடி தொகுதி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நிர்வாகிகளுக்கும், தோழமைக் கட்சி நிர்வாகிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றியை இப்பேரவைமூலம் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஒட்டுமொத்தத் தமிழக மக்கள், குறிப்பாக இளைய சமுதாயம், மிகப் பெரிய வெற்றியைப் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குக் கொடுத்து, அந்த வெற்றியின்மூலம் மிகப் பெரிய பொறுப்பையும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு வழங்கியுள்ளார்கள். தொலைநோக்குப் பார்வையுடனும் சமுதாயச் சிந்தனையோடும் செயல்படும் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள், தமிழகம் இந்தியாவின் முதல் மாநிலமாகத் திகழ்வதற்கு அல்லும் பகலும் அயராது உழைக்கின்றார்கள். ஏழைகள் ஏழைகளாகவே இருந்துவிடக்கூடாது, ஏழைகளின் நிலை உயரவேண்டும், ஏழைகளின் நிலை உயர்வதற்கு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் தமிழக முதலமைச்சராக வர வேண்டுமென்று தமிழக மக்கள் ஏகோபித்த உணர்வுடன் முதலமைச்சராக்கி இருக்கின்றார்கள்.



பிற்பகல் 1–40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சற்றுமுன் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள் எந்த அடிப்படையில் இலவச ஆடுகளை வழங்கப் போகிறீர்கள் என்பதைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டார். இலவச ஆடுகள் வழங்கும் திட்டத்திற்கான நெறிமுறைகள் பின்வருமாறு:

நிலமற்ற விவசாயக் கூலித் தொழிலாளியாக இருக்க வேண்டும். அந்தக் கிராமத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும். குடும்பத்தில் ஒருவராவது 18 முதல் 60 வயதிற்குள் இருக்க வேண்டும். ஏனென்றால், ஆடுகளை ஓட்டிச் சென்று மேய்க்க வேண்டுமல்லவா, அதற்காக. தற்போது ஆடு, மாடு எதுவும் வைத்திருப்பவராக இருக்கக் கூடாது. மத்திய, மாநிலப் பணியிலோ, கூட்டுறவு அல்லது உள்ளாட்சி அமைப்புகளில் பயனாளியோ, அவருடைய மனைவியோ, தாய்–தந்தையர், மாமனார்–மாமியார், மகன், மகள், மருமகன், மருமகள் ஆகிய எவருமோ பணிபுரிபவராக இருக்கக் கூடாது. மாடுகள் பெறும் திட்டத்தில் பயனாளியாக இருக்கக் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ச. சுந்தரராஜ்.

**டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழைநீர் சேகரிப்புத் திட்டம், ஆலயங்களில் அன்னதானத் திட்டம், தொட்டில் குழந்தைத் திட்டம் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுமட்டுமல்ல, ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்திலும் பயன்பெறுபவர்களில் 30 சதவீதம் பேர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை, எஸ்.சி., எஸ்.டி. வகுப்பைச் சார்ந்தவர்களாக இருக்க வேண்டுமென்றும் நெறிமுறை வகுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

[2011 ஆகஸ்ட் 9

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ச. சுந்தரராஜ்.

**டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழைநீர் சேகரிப்புத் திட்டம், ஆலயங்களில் அன்னதானத் திட்டம், தொட்டில் குழந்தைத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள், புரட்சித் தலைவி அவர்களின் எண்ணங்களில் உதித்த திட்டங்கள், மக்கள் மனதில் நீங்காத இடத்தைப் பெற்றுள்ளன. மற்ற மாநிலங்கள் பின்பற்றப்பட வேண்டிய முன்னோடித் திட்டங்கள் இவை என்பதை இந்த நேரத்தில் நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தனது பிறந்த நாளைக்கூட ஏழைகளுக்கு நலத் திட்டங்கள் வழங்குகின்ற நிகழ்ச்சியாக மாற்றிக் காட்டியவர் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இங்கே நான் நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கோடைக் காலங்களில் நீர், மோர்ப் பந்தல்கள் அமைத்து தாகத்தைத் தீர்க்கின்ற இயக்கமாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை எஃகுக் கோட்டையாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையில் வழிநடத்தி வந்துகொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

"அஞ்சாமை ஈகை அறிவூஊக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற்கு இயல்பு"

என்ற குறளின் இலக்கணத்திற்குத் தகுந்தாற்போல் பயமில்லாதிருத்தல், ஏழைகளுக்குக் கொடுக்கும் கொடை, சிறந்த அறிவு, மிகுந்த ஊக்கம் ஆகியன குறைவில்லாமல் பெற்றவர் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இங்கே நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மக்களின்மீது அக்கறை கொண்டு தொலைநோக்குப் பார்வையோடு தந்தை பெரியார் அவர்களின் மன உறுதி, பேரறிஞர் அண்ணா அவர்களின் அறிவாற்றல், மக்கள் திலகம் புரட்சித் தலைவர் அவர்களின் வள்ளல் தன்மை ஆகியவை ஒருங்கே அமையப்பெற்ற, நாடு போற்றும் உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவியாக



2011 ஆகஸ்ட் 9] [டாக்டர் ச. சுந்தரராஜ்]

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் தமிழகத்தில் பவனி வந்துகொண்டிருக்கின்றார்கள் என்பதை இங்கே கூறிக்கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

மக்கள் நலத் திட்டங்களை, குறிப்பாக மக்களுக்கான வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்திட சிறப்பான நிர்வாகத்தைத் தர உறுதி பூண்டிருக்கின்றார்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். சட்டம்—ஒழுங்கை நிலைநாட்டுவதிலும், நிர்வாக அமைப்பை ஒழுங்குபடுத்துவதிலும் மக்களின் பாராட்டைப் பெற்றிருக்கின்றார்கள் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

இன்றையதினம் வரியில்லா வரவு—செலவுத் திட்டத்தைக் கொடுத்ததன்மூலம் நாட்டில் எல்லா மக்களும் பாராட்டிக் கொண்டிருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையை நானும் இங்கே பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஒரு இலட்சத்து 83 ஆயிரம் குடும்ப அட்டைகளுக்கு 20 கிலோ அரிசி இலவசமாக வழங்குகின்ற திட்டத்தையும், முதியோர் உதவித் தொகையை ரூபாய் 500—லிருந்து ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்குகின்ற திட்டத்தையும், பள்ளிப் படிப்பு படித்த பெண்களினுடைய திருமண உதவிக்காக 25,000 ரூபாயோடு 4 கிராம் தங்கமும் தாலிக்காக வழங்குகின்ற திட்டத்தையும், அதோடு பட்டப் படிப்பு படித்த பெண்களின் திருமண உதவிக்காக 50,000 ரூபாயோடு தாலிக்காக 4 கிராம் தங்கமும் வழங்குகின்ற திட்டத்திற்காகவும், மீன்பிடித் தடைக் காலங்களில் மீனவர்களுக்கான உதவித் தொகையாக மாதம் ஆயிரம் ரூபாய் இருந்ததை 2,000 ரூபாயாக உயர்த்திக் கொடுக்கின்ற திட்டத்தையும், அரசு பெண் ஊழியர்களுக்கு பேறுகால விடுப்பாக 6 மாத காலம் விடுப்பு வழங்குகின்ற திட்டத்தையும் மக்கள் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றார்கள். மக்கள் மத்தியில் இந்தத் திட்டங்கள் மகத்தான வரவேற்பைப் பெற்றிருக்கின்றன என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்தியாவின் முதுகெலும்பாக இருக்கின்ற விவசாய உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதற்காக, விவசாய உற்பத்தியை நாம் இரட்டிப்பாக்குவதற்காக பல்வேறு திட்டங்களை தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இங்கே கூறியிருக்கின்றார்கள்.

பிற்பகல் 1–45

பயிரிடு திறனையும் பாசனத் திறனையும் முன்னேற்றுவதற்காக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு திட்டங்களை இந்த அறிக்கையில் கூறியிருக்கின்றார்கள். எங்களுடைய இராமநாதபுரம் மாவட்டத்தில் மழையை நம்பித்தான் விவசாயம் இருக்கிறது என்பதை உணர்ந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எங்களுடைய மாவட்டத்திற்காக தேசிய வேளாண் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தை வழங்கியிருக்கின்றார்கள். அந்த காப்பீட்டுத் தொகையானது கூட்டுறவு வங்கியிலும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலும் செலுத்தப்படுகிறது. விவசாயிகளின் நலன் கருதி அந்த ப்ரிமியத் தொகையினை காப்பீட்டு கம்பெனியினுடைய முகவர்கள் மூலமாகச் செலுத்தினால் விவசாயிகள் பல நாட்கள் காத்திராமல் இருப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த விவசாயக் காப்பீடு தொடர்பான சேவைகளைத் தந்திட தென் மாவட்டங்களை ஒருங்கிணைத்து மண்டல அலுவலகத்தை இராமநாதபுரம் மாவட்டத்தின் மத்தியில் அமைந்திருக்கின்ற பரமக்குடியில் அமைத்திட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை இந்தத் தருணத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் காலத்தில்தான், பரமக்குடியில் விதைப் பரிசோதனை நிலையம் ஒன்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் சென்ற மாதம் துவக்கப்பட்டது என்ற நல்ல செய்தியையும் இங்கே நான் தெரிவித்துக்கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். இதற்காக இராமநாதபுரம் மாவட்ட மக்களின் சார்பிலும், எனது சார்பிலும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். தமிழக மக்களுடைய விவசாய உற்பத்தியை இரட்டிப்பாக்க திட்டமிட்டு அதற்காக கிராம அளவில் சிறு மற்றும் குறு விவசாயிகளைக் கணக்கெடுக்கும் பணியினை முடுக்கிவிட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இந்த நேரத்தில் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

எங்களுடைய இராமநாதபுரம் மாவட்டத்தில் 11 ஒன்றியங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு ஒன்றியத்திலும் தானியங்கி வானிலை



ஆய்வு மையம் உள்ளது. காப்பீடு செய்கின்றபோது காற்றினுடைய வேகம், அதனுடைய ஈரப்பதம், மழையின் அளவு ஆகியவை கணக்கிடப்படுகின்றன. முதன்முதலில் தொண்டியில்தான் இந்தத் தானியங்கி வானிலை ஆய்வு மையம் ஏற்படுத்தப்பட்டது. அதை வைத்து 12 ஒன்றியங்களிலும் கணக்கிடுகின்றார்கள். ஆகவே, அந்தந்த ஒன்றியங்களிலுள்ள காற்றினுடைய வேகம், காற்றினுடைய ஈரப்பதம், மழையின் அளவு ஆகியவற்றைக் கணக்கிட்டு ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் தகுந்தாற்போல் இந்த காப்பீட்டு நிறுவனங்கள், காப்பீடு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களை இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

எங்களுடைய இராமநாதபுரம் மாவட்டத்தில் மூக்கேரியில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்காக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 60 கோடி ரூபாயை கொடுத்திருக்கின்றார்கள். மாவட்ட மீனவ மக்களின் சார்பில் இந்த மகத்தான திட்டத்திற்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தங்களின் தமிழ் அன்பால் இலங்கைத் தமிழர்களின் நலன் காத்திட இலங்கை அரசுமீது பொருளாதாரத் தடை விதிக்கக்கோரி, அதற்கான தனித் தீர்மானத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த மாமன்றத்தில் கொண்டு வந்தார்கள். தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதைத் தடுத்திட வேண்டுமென்பதற்காக கச்சத் தீவை மீட்பதுதான் ஒரே வழி என்று அதற்கான ஒரு தீர்மானமும் கொண்டுவந்ததோடு, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு affidavit தயார் செய்து அந்தக் கோரிக்கைகளை வெல்வதற்காக வருவாய்த் துறையையும் இந்த writ மனுவில் இணைத்திருக்கிறார்கள். இது ஒட்டுமொத்தமாக எங்களுடைய இராமநாதபுரம் மாவட்ட மக்களுக்குப் பயனுள்ள திட்டம் என்பதை இந்த நேரத்தில் கூறி, அம்மா அவர்களுடைய இந்தக் கோரிக்கை வெற்றிபெற முயற்சிப்பதற்காக எங்களுடைய இராமநாதபுரம் மாவட்ட மக்களின் சார்பாக மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

எங்களுடைய இராமநாதபுரம் மாவட்டத்தில் வேலிக் கருவேல் மற்றும் காட்டுக் கருவேல் மரங்கள்தான் அதிகமாக உள்ளன. அவை தமிழகத்தினுடைய பிற பகுதிகளுக்கு, சேலம் மற்றும் திருப்பூர் போன்ற பகுதிகளுக்கு விறகுகளாக வெட்டி விற்கப்படுகின்றன. சிலர்

அந்த விறகை கரியாகச் சுட்டு, குஜராத், கோல்கத்தா, டெல்லி போன்ற பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்து வியாபாரம் செய்கின்றார்கள். இந்த விறகு, கரி போன்ற பொருட்களை மூலப்பொருளாக பயன்படுத்தி எங்களுடைய இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு தொழில் தொடங்குவதற்கும், சிறப்பாகப் பணியாற்றுவதற்கும், எங்களுடைய மாவட்ட மக்கள் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கும் உத்தரவிடுமாறு மாவட்ட மக்களின் சார்பாக அம்மா அவர்களுக்கு ஒரு கோரிக்கை வைக்க கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்தியா வல்லரசாக வேண்டுமென்று கனவு காணும் முன்னாள் ஜனாதிபதி டாக்டர் அப்துல் கலாம் அவர்கள் பிறந்த பூமியான இராமேஸ்வரத்திலிருந்து மண்டபம் வரை கப்பல் சுற்றுலா போக்குவரத்து ஆரம்பித்தால் எங்களுடைய மாவட்ட மக்களுடைய வேலைவாய்ப்பு அதிகரிக்கும். அந்தமான் போன்ற பகுதிகளில் இந்தக் கப்பல் போக்குவரத்தின்மூலம் அதிகமாக வருவாய் வருகின்றது. ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்கள் எங்களுடைய மாவட்ட மக்களின் நலன் கருதி இங்கே சிறப்பான முறையில் அந்தச் சுற்றுலாத் துறையை மேம்படுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 1–50

இங்கே பள்ளிக் கல்வித் துறையின் சார்பில், மேல்நிலைப் பள்ளிகளில் இடைநிற்றல் குறைவதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் பத்தாம் வகுப்பு மற்றும் பதினோராம் வகுப்பு மாணவ, மாணவிகளுக்கு 1,500 ரூபாயும், பன்னிரண்டாம் வகுப்பு மாணவ, மாணவிகளுக்கு 2,000 ரூபாயும் வழங்க ஆணையிட்டுள்ளது மிகவும் வரவேற்கத்தக்கது. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ச. சுந்தரராஜ். கோரிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலே எழுதிக் கொடுக்கவும்.

**டாக்டர் ச. சுந்தரராஜ்:** எனது தொகுதியைப் பொறுத்தவரை, பரமக்குடி தொகுதிக்குட்பட்ட, பார்த்திபனூர் மற்றும் அபிராமம் பேரூராட்சியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மண்டலமாணிக்கத்தில் ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



பரமக்குடி தாலுகா மருத்துவமனையில் கண் சிகிச்சைப் பிரிவு, பல் சிகிச்சைப் பிரிவு மற்றும் விபத்துப் பிரிவு ஏற்படுத்தி உரிய கருவிகள் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தென் மாவட்டங்களில் உள்ள பிரசித்திபெற்ற ராகு ஸ்தலங்களில் நயினார்கோவில் நாகநாதசுவாமி ஆலயமும் ஒன்றாகத் திகழ்கிறது. சுற்றுலாத் துறையின்மூலம் இக்கோவிலின் வளர்ச்சிக்காக ரூ.189 இலட்சம் மதிப்பீட்டில் அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. அப்பணிகள் நிறைவேற்றப்பட வேண்டும். இப்பகுதி மக்களின் கோரிக்கையான இக்கோயிலின் 7 நிலை கொண்ட ராஜகோபுரம் அமைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

88 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைந்துள்ள பரமக்குடி நகரில், ஏற்றுமதித் தரம் வாய்ந்த பருத்தி, பம்பர் பட்டு மற்றும் பட்டு சேலைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. நெசவாளர்களின் தொழில் சிறக்கவும், முகவர்களினால் ஏற்படும் விலை ஏற்றத்தைத் தடுத்திடவும், கோயம்புத்தூரில் அமைந்திருப்பதுபோல் பரமக்குடியிலும் நெசவாளர் பூங்கா அமைத்து ஏற்றுமதிக்கு வழிவகுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பரமக்குடி நகராட்சிக்கு, பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றுவதற்கான கருத்துரு ரூ.44 கோடியில் அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள நிலையில் அத்திட்டம் நிறைவேற்றப்பட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுப் பணித் துறைமூலம் ரூ.15 கோடியில் பரமக்குடி நகரில் வைகை ஆற்றின் இரு கரைகளிலும் சர்வீஸ் ரோடு அமைக்கும் திட்டத்திற்கு மத்திய அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளதை நிறைவேற்றிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதியில், அபிராமம், எமனேஸ்வரம், சத்திரக்குடி மற்றும் நயினார்கோவில் ஆகிய ஊர்களில் பேருந்து நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பெண்களின் சுயவேலைவாய்ப்புகள் பெருகிடும் வகையில் பரமக்குடியில் பெண்களுக்கென்று தொழிற் பயிற்சி நிலையம் (I.T.I) ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பரமக்குடியில் பெண்களுக்கென்று அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பரமக்குடி தொகுதி அபிராமம் மற்றும் பார்த்திபனூரில் அரசு மாணவியர் உயர்நிலைப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பரமக்குடி ஒன்றியம் நெடுங்குளம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகவும், கமுதி ஒன்றியம் டி.புனவாசல் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகவும், கமுதி ஒன்றியம் நரிக்குடி தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகவும் தரம் உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பரமக்குடி தொகுதி அபிராமத்தில் மாணவர் மற்றும் மாணவியர்களுக்கு ஆதி திராவிடர் நல விடுதிகள் துவங்கிட வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி அச்சங்குளத்தில் தாட்கோமூலம் துவங்கப்பட்டு, தற்போது மூடிய நிலையில் இருக்கும் கூட்டுறவு நூற்பாலையை மீண்டும் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தேசிய நெடுஞ்சாலை எண் 49–ல் பார்த்திபனூரில் இருந்து கமுதிக்கு பேருந்துப் போக்குவரத்திற்கென புறவழிச் சாலை அமைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதில் அரசுக்கு செலவு அதிகம் இல்லை. ஏனெனில், 95 சதவீத இடம் அரசுப் புறம்போக்கு நிலத்தில் உள்ளது. எனவே அங்கு புறவழிச்சாலை அமைத்தால் போக்குவரத்து நெரிசல் இன்றி கமுதிக்குச் செல்ல முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பள்ளி நேரங்களில் பரமக்குடியிலிருந்து, பார்த்திபனூர், சத்திரக்குடி, அபிராமம், நயினார்கோவில் ஆகிய இடங்களுக்கு கூடுதலாக நகரப் பேருந்துகள் இயக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இங்கே மாண்புமிகு கம்யூனிஸ்டு



கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் இலவச ஆடுகளையும், இலவச மாடுகளையும் எந்த அடிப்படையில் வழங்கப் போகிறீர்கள் என்பதைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டார்கள். இலவச ஆடுகள் வழங்குவதற்கான நெறிமுறைகளைப் பற்றிக் குறிப்பிட்டேன். இலவச கறவை மாடுகள் வழங்கும் திட்டத்திற்கான நெறிமுறைகள் பின்வருமாறு:

மகளிரைத் தலைவராகக் கொண்ட குடும்பத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும். பயனாளி 60 வயதிற்குக் குறைவாக இருக்க வேண்டும். பயனாளி தனது பெயரிலோ, தனது குடும்பத்ினர் பெயரிலோ ஒரு ஏக்கருக்கு அதிகமான நிலம் வைத்திருக்கக் கூடாது. தற்போது கறவை மாடுகள் எதுவும் வைத்திருக்கக் கூடாது. மத்திய, மாநிலப் பணியிலோ, கூட்டுறவு அல்லது உள்ளாட்சி அமைப்புகளில் பயனாளியோ, அவருடைய மனைவியோ, தாய்–தந்தையர், மாமனார்–மாமியார், மகன், மகள், மருமகன், மருமகள் ஆகிய எவருமோ பணிபுரிபவராக இருக்கக் கூடாது. இலவச ஆடுகள் திட்டத்தின் பயனாளியாக இருக்கக் கூடாது. பயனாளி அவருடைய கிராமத்தில் நிரந்தரமாக வசிப்பவராக இருக்க வேண்டும். இந்தத் திட்டத்திலும் கிராமப் பஞ்சாயத்தில் தேர்ந்தெடுக்கப்படும் பயனாளிகளில் 30 சதவீதம் பேர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன்.

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஒரு கறவை மாடு இருந்து, அதனால் பயனாளியாக இல்லாமல் இருப்பவர்கள் அந்தக் கறவை மாடு ஒரு வேளை ஏதேனும் காரணத்தினால் இயற்கை உபாதையாலோ, வேறு காரணத்தினாலோ இல்லாமல் போனால், இறந்து போனால் அவர்கள் இந்தப் பயனைப் பெற முடியுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி மாடுகள் வழங்குகின்ற நேரத்தில் அவருக்கு வேறு மாடு இருக்கக் கூடாது. அதுதான் நெறிமுறை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (10–8–2011) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.*

*பின்னர், பேரவை பிற்பகல் 1–53 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

*—ஏதுமில்லை—*

**- - 0 - -**